ஞாயிறு இதழ்
12.01.2025 - ஞாயிற்றுக்கிழமை

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

விலை ரூபா 80

ஆண்டு: 01 இதழ் : 14 குரோதி வருடம் மார்கழி மாதம் 28 ஆம் திகதி - ஹிஜ்ரி 1446 ரஜப் 12 பக்கங்கள் - 12 + XII

## இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவிற்கு புதிய பணிப்பாளர்



செய்தி 2 ஆம் பக்கம்




## 'எட்கா' தொடர்பில் தொடர்ந்தும் பேச்சு

# மோடியின் வருகைக்கு முன்னர் இருதரப்பு ஒப்பந்தங்கள் பூர்த்தி

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் (ETCA) தொடர்பான பேச்சுகளை மீண்டும் தொடங்குவதற்கான கதவை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் திறந்துள்ளது.

கடந்த மாதம் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதிவரை இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ பயணமாக சென்ற ஜனாதிபதி, இந்திய பிரதமர் மோடியுடன் ஈடுபட்ட கலந்துரையாடலில் எட்கா உடன்படிக்கை, இருநாடுகளுக்கு இடையிலான





நிலத் தொடர்பு, திருகோணமலை எண்ணெய் குதங்கள், காங்கேசன்துறை துறைமுகம், இருநாடுகளுக்கு இடையிலான கப்பல் போக்குவரத்து, சுற்றுலா அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்புகள், இறக்குமதி, ஏற்றுமதி, தொழில்நுட்ப பரிமாற்றம் உட்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து கலந்துரையாடியிருந்தார்.

இருவரும் இணைந்து வெளியிட்டிருந்த கூட்டறிக்கையில் இந்த விவகாரங்கள் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், எட்கா உடன்படிக்கை தொடர்பிலான பேச்சுகளை தொடர்ந்து கொண்டுசெல்லவும் திட்டமிட்டிருந்தனர்.

02 →




நிலம் உழுது பயிர் அறுத்து
பசியாற்றும் உழவன் நம் தோழன்..!
பயிர் செழிக்க ஒளி கொடுத்து
உயிர் காப்பான் நம் கதிரோன்..!
பொங்கலோ பொங்கல் என்றே
பகிர்வோமே நன்றிதனையே..!

## அயல் வீட்டுக்காரரின் முகத்தில் குத்தினாராம்; உதயங்க கைது





ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க மிரிஹான பொலிஸாரால் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

அயலவர் ஒருவரை தாக்கிய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தின் போது பதிவு செய்யப்பட்டுள்ள வீடியோ ஒன்று சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட ரஷ்யாவிற்கான முன்னாள் இலங்கை தூதுவர் உதயங்க வீரதுங்க நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்டதையடுத்து எதிர்வரும் 17ஆம் திகதி வரை அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

## மலையக தியாகிகள் தினம்; கொட்டகலையில் அனுஷ்டிப்பு



(க.கிஷாந்தன்)

செய்தி 2 ஆம் பக்கம்

மலையக மக்களுக்கான உரிமைப் போராட்டங்களில் உயிர் தியாகம் செய்த மலையக தியாகிகளை நினைவுகூரும், மலையக தியாகிகள் தினம் வெள்ளிக்கிழமை (10) கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

## உறுதியளித்த உர மானியத்தை ஏன் முறையாக வழங்கவில்லை?



சமீபத்தில் பிரதமர் ஹன்சார்ட்டில் பதிவிட்ட ஆவணம் மூலம் விவ சாயிகள் எதிர்கொள்ளும் பாரதூ ரமான பிரச்சினையொன்று மேலெழுந் துள்ளது. அரசாங்கத்தின் கூற்றுப்படி, 9,96,992 விவசாயிகள் உர மானியத்திற்கு உரித்துடையவர்களாக காணப்படுகின்றனர். இவர்களுக்கு உர மானியமாக ரூ.15,000, ரூ.10,000 என 2 கட்டமாக மொத்தம் ரூ. 25,000 வழங்கப்படவுள்ளன. இதுவரை 684,194 விவசாயிகள் ரூ.15,000 மானியத்தைப் பெற்றுள்ளனர். அதாவது 69% ஆனோருக்கு இது கிடைத்துள்ளன. 31% அதாவது 312,798 பேருக்கு இது இன்னும் கிடைக்கவில்லை. 15000 ரூபா மானியத்திற்கு உரித்துடைய ஏனைய

02 →




←08




←11




←I




←XII

## சம்பிக்கவிற்கான பயணத்தடை தற்காலிகமாக நீக்கம்



முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பயணத்தடையை தற்காலிகமாக நீக்க, கொழும்பு மேல் நீதிமன்றம், வெள்ளிக்கிழமை (10) அனுமதி வழங்கியுள்ளது.

2016ஆம் ஆண்டு, இராஜகிரிய பிரதேசத்தில், வாகன விபத்தை ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவிற்கு வெளிநாடு செல்வதற்கு ஏற்கனவே தடை விதிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு, வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, பாட்டலி சம்பிக்க ரணவக்க சார்பில் ஆஜரான சட்டத்தரணி, தமது கட்சிக்காரர் தனிப்பட்ட நோக்கத்திற்காக வெளிநாடு

02 →

## பாசிக்குடா கடலில் மூழ்கிய ரஷ்ய பிரஜை உயிரிழப்பு

(ருத்ரா,கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு பாசிக்குடா கடலில் தனது மனைவியுடன் நீராடிய ரஷ்ய நாட்டை சேர்ந்த சுற்றுலா பயணியொருவர் நீரில் மூழ்கி பலியானார்.

63 வயதான இவர் வெள்ளிக்கிழமை (10) அதிகாலை பாசிக்குடா கடலில் தனது மனைவியுடன் நீராடிக் கொண்டிருந்த வேளை இந்த

02 →

## களுவாஞ்சிகுடி நீதிமன்றில் பிள்ளையான் ஆஜர்

(வெல்லாவெளி நிருபர்)



முன்னாள் இராஜாங்க அமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் வெள்ளிக்கிழமை (10) களுவாஞ்சிகுடி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகிருந்தார்.

கடந்த 2021 ஆம் ஆண்டு இராஜாங்க அமைச்சராகவும், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவராகவும், பதவி வகித்த வேளையில் காணி சீர்திருத்த ஆணைக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் நேசகுமார் விமல்ராஜுக்கு

02 →

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை; பெறுபேறுகள் பெப்ரவரி 12க்கு முன்

(ஆர். மனோசங்கர்)

2024 ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் பெப்ரவரி 10 முதல் 12 ஆம் திகதிக்குள் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜெயசுந்தர தெரிவித்தார்.

விடைத்தாள் மதிப்பீடு புதன்கிழமை (8) 64 மையங்களில் தொடங்கியது என்று அவர் தெரிவித்துள்ளார்.

02 →

## உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவேந்தல்





செய்தி 2 ஆம் பக்கம்

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு புதிய பணிப்பாளர்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் புதிய பணிப்பாளர் நாயகமாக மேல் நீதிமன்ற நீதிபதி ரங்க திசாநாயக்கவை நியமித்துள்ளார்.

இதற்கமைவான நியமனக் கடிதம் ஜனதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால், மேல் நீதிமன்ற நீதிபதி ரங்க திசாநாயக்கவுக்கு வெள்ளிக்கிழமை (10) வழங்கப்பட்டது.

# உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவேந்தல்

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 51 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வெள்ளிக்கிழமை (10) யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழராட்சி மாநாட்டு படுகொலை நினைவாலயத்தில் இலங்கை தமிழரசு கட்சியின் பதில் தலைவர் சீவிகே சிவஞானம் தலைமையில் இடம்பெற்றது.

இதன்பொழுது உயிரிழந்த ஒன்பது உறவுகளையும் நினைவுகூர அமைக்கப்பட்ட நினைவுத்தூபியின் முன் சி.வீ.கே. சிவஞானத்தினால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டதோடு மலரஞ்சலியும் செலுத் தப்பட்டு அக வணக்கமும் செலுத்தப்பட்டது.

இந்நினைவேந்தலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சிறில், வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் சர்வேஸ்வரன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரான சுகிர்தன், யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் ஆர்னோல்ட், இலங்கை தமிழரசு கட்சியின் நிர்வாக செயலாளர் குலநாயகம், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மத்திய குழுவை அரசியல் மாபியாக்களின் கூடாரமாக்க வேண்டாம்! சிவமோகன் காட்டம்

கி.வசந்தன்




மத்திய குழுவை அரசியல் மாபியாக்களின் கூடாரமாக்கக் கூடாது எனவும் பொதுக் குழுவில் தேசிய பட்டியல் ஆசனம் பற்றி பேசப்பட்டு அது மாற்றப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான சி.சிவமோகன், தில் இருந்தால் வழக்கை மீளப்பெற்று தமிழரசுக் கட்சியின் பொதுக் குழுவை கூட்டுங்கள் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை (10) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

கட்சியின் யாப்பே அதன் முதுகெலும்பு. அதன் கொள்கைகள் அது பயணிக்கும் வளித்தடம். அந்த அடைப்படையில் ஒரு கட்சியை நிர்மூலமாக்குவதற்கு யாப்பை மீறி செயற்பட்டால் அதனை முடக்கலாம். இன்று எமக்கான சந்தேகம் இதுவே.

திருகோணமலையில் கட்சி மீது தொடரப்பட்ட வழக்கின் மூலம் எமது பொதுச் சபையானது முடக்கப்பட்டுள்ளது. அப்போது இனி மேல் யாப்பு மீறல் செய்ய மாட்டோம் என்று பேசப்பட்டது. ஆனால் மீண்டும் அதே யாப்பு மீறலை மத்தியகுழு செய்கிறது . பொதுக்குழுவிற்கு எதிராக நீதிமன்ற வழக்குகளை நடத்தியவர்கள் யார் என்பது கண்டுபிடிக்கப்பட வேண்டிய விடயம். தலைவரை மாற்ற சம்மதித்தால் வழக்கை மீளப் பெறுவதாக ஒருவர் சொன்னார். முதல் அதை கண்டு பிடியுங்கள். பொதுக்குழுவை இயங்கச் செய்யுங்கள். மத்திய குழுவை அரசியல் மாபியாக்களின் கூடாரமாக மாற்றக் கூடாது.

கடந்த ஒரு மத்திய குழு கூட்டத்தில் மாவை சேனாதிராஜாவை கதிரையில் இருக்க வேண்டாம், உங்கள் இராஜினாமா ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்று சொன்ன நபர் மத்திய குழுவிலேயே இல்லாத ஒருவர். மத்திய குழுவில் இல்லாத ஒருவர் உள்ளே எடுகப்பட்டு அவரால் சேறு பூசப்படுகிறது. தலைவர் நிகழ்சி நிரலை தன்னிடம் காட்டிவிட்டு அறிவிக்குமாறு கடிதம் அனுப்பினார். ஆனால் அதற்கு முந்திய திகதியை இட்டு பதில் செயலாளர் நிகழ்ச்சி நிரலை அனுப்பியுள்ளர். நிலைமை அவ்வாறே உள்ளது.

பதில் செயலாளர் என்ற போர்வையில் ஒருவர் இருந்து கொண்டு யாப்பை மீறி செயற்பட்டமையாலேயே இந்த நிலைமை ஏற்ப்பட்டுள்ளது. இவர்களுக்கு தில் இருந்தால் அந்த வழக்கை மீளப் பெற்று பொதுச்சபை கூடுவதற்கு இடம் தரவேண்டும். எம்மிடம் 300 இற்கு மேற்பட்ட பொதுச் சபை உறுப்பனர்கள் இருக்கிறார்கள். அதை செய்தாலே மாபியாக்ளிடம் இருந்து தமிழரசு கட்சியை மீட்கமுடியும்.

# மலையக தியாகிகள் தினம்; கொட்டகலையில் அனுஷ்டிப்பு









(க.கிஷாந்தன்)

மலையக மக்களுக்கான உரிமைப் போராட்டங்களில் உயிர் தியாகம் செய்த மலையக தியாகிகளை நினைவுகூரும், மலையக தியாகிகள் தினம் வெள்ளிக்கிழமை (10) கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் உணர்வுப்பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

"பிடிதளராதே" அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டனர். பொதுச்சுடர் ஏற்றப்பட்ட பின்னர், நிகழ்வுகள் இடம்பெற்றன.

மலையக தமிழ் மக்களுக்குரிய தொழில்சார் உரிமைகள், காணி உரிமை, மொழி உரிமை, அரசியல் உரிமை, பொருளாதார உரிமை உள்ளிட்ட விடயங்களுக்கான போராட்டங்களின்போது உயிர் நீத்தவர்களே நினைவுகூரப்படுகின்றனர். "பிடிதளராதே" அமைப்பு மற்றும் மலையக உரிமைக்குரல் என்பன இணைந்து 2019 டிசம்பர் மாதம் சர்வதேச தேயிலை தினத்தன்று மலையக தியாகிகள் தினத்தை நடத்தி இருந்தன.

நுவரெலியா மாவட்டம், தலவாக்கலை, டெவோன் தோட்டத்தில் உள்ள மலையக மக்களுக்கான காணி உரிமை போராட்டத்தில் உயிர்த்தியாகம் செய்த சிவனு லெட்சுமனனின் கல்லறையில் நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்பட்டது.

இதன்போது பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வுப் போராட்டத்தில் உயிர்த்தியாகம் செய்து, மலையக தியாகிகள் வரலாற்றை ஆரம்பித்து வைத்த முல்லோயா கோவிந்தன் உயிர் துறந்த ஜனவரி 10 ஆம் திகதியை, மலையக தியாகிகள் தினமாக அனுஷ்டிப்பதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன்படியே ஜனவரி 10 ஆம் திகதி மலையக தியாகிகள் நாள் அனுஷ்டிக்கப்படுகின்றது. 2020 ஜனவரியில் மஸ்கெலியாவில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. 2021 இல் பத்தனையில் நடைபெற்றது. 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் கொட்டகலையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே இம்முறை கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் மலையக தியாகிகள் தினம் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி....

### உறுதியளித்த உர மானியத்தை

312,798 விவசாயிகளுக்கு எப்போது இந்த மானியம் வழங்கப்படும்? அவ்வாறு மானியம் வழங்கப்படும் திகதியை அறிந்து கொள்ள விரும்புகிறோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி என்ற வகையிலும், எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையிலும் நாட்டு மக்கள் எதிர்நோக்கும் சமகால பிரச்சினைகளுக்கான தீர்வுகளை அரசாங்கத்திடம் முன்வைப்பது எனது பொறுப்பாகும். பாராளுமன்ற சபா பீடத்தில் சமகாலப் பிரச்சினைகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பங்களை இழந்ததன் காரணமாக, நாடாளுமன்றத்தில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இருந்து அரசாங்கத்திற்கு இந்தப் பிரச்சினைகளை முன்வைக்கும் நடவடிக்கைகள் நிமித்தம் இந்த பிரச்சினையை முன்வைப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வெள்ளிக்கிழமை(10) தெரிவித்தார்.

314,956 விவசாயிகளுக்கு அதாவது 32% ஆனோருக்கு மட்டுமே ரூ.10,000 மானியம் கிடைத்துள்ளது. 682,041 விவசாயிகளுக்கு அதாவது 68% ஆனோருக்கு இன்னும் கிடைக்கவில்லை. 10,000 ஷரூபா மானியத்தை எஞ்சிய 682,041 போருக்கும் வழங்கும் திகதியை அறிய விரும்புவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்த 25,000 ரூபா மானியத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு 24.9 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் 9.9 பில்லியன் ரூபா அதாவது 40% மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே முழுத் தொகையையும் உடனடியாக வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதன் போது கோரிக்கை விடுத்தார்.

### சம்பிக்கவிற்கான பயணத்தடை

செல்ல விரும்புவதாக, நீதிமன்றில் தெரிவித்தார்.

அதற்காக, ஜனவரி 10ஆம் திகதி முதல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி வரை, வெளிநாட்டு பயணங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை தற்காலிகமாக நீக்குவதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு, சட்டத்தரணிகள், நீதிமன்றில் கோரிக்கை விடுத்தனர்.

இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், குறித்த காலப்பகுதியில், சம்பிக்க ரணவக்கவுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத்தடையை தற்காலிகமாக தளர்த்த உத்தரவிட்டதுடன், முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவை ஏப்ரல் 20 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றில் முன்னிலையாகுமாறும் உத்தரவிட்டுள்ளது.

### தரம் 5 புலமைப்பரிசில்

2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை செப்டம்பர் 15 ஆம் திகதி நடைபெற்றது.

சிங்கள மொழியிலிருந்து 244,092 மாணவர்களும் தமிழ் மொழியிலிருந்து 79,787 மாணவர்களும் உட்பட மொத்தம் 323,879 மாணவர்கள் தேர்வு எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது

### பாசிக்குடா கடலில்

சம்பவம் இடம் பெற்றுள்ளது. தன்னுடன் நீராடிக்கொண்டிருந்த கணவன் நீரில் காணாமல் போனதையடுத்து மனைவி அவலக் குரல் எழுப்பியுள்ளார்.

உடனடியாக செயற்பட்ட கடற்படையின் உயிர்பாதுகாப்பு சுழியோடிகள் மற்றும் பலரும் தேடும் பணியில் ஈடுபட்டனர்.

குறித்த சுற்றுலா பயணி மீட்கப்பட்டு முதலுதவி வழங்கப்பட்டு வாழைச்சேனை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்தமை மருத்துவ சோதனையில் தெரிய வந்ததாக பொலிஸ் தரப்பு தகவல்கள் கூறுகின்றன.

### களுவாஞ்சிக்குடி

சிவனேசதுரை சந்திரகாந்தன் அச்சுறுத்தல் விடுத்ததாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. காணி தொடர்பாக தொலைபேசி மூலமாக ஏற்படுத்திக் கொண்ட உரையாடலின் போது குறித்த காணி ஆணைக்குழுவின் பணிப்பாளருக்கு சிவனேசதுரை சந்திரகாந்தன் அச்சுறுத்தல் விடுத்ததாக தெரிவித்து காணி ஆணையாளர் தொடுத்த வழக்கிலேயே முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் நீதி மன்றில் ஆஜராகி இருந்தார்.

### மோடியின் வருகைக்கு

எட்கா தொடர்பில் குறித்த கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த விவகாரம் இலங்கையில் எதிர்க்கட்சிகளுக்கு தீனி போடுவதாக மாறியது. உடனடியாக கருத்துகளை வெளியிட ஆரம்பித்த எதிர்க்கட்சிகள், அரசாங்கம் எட்கா உடன்படிக்கையை கைச்சாத்திட இணங்கிவிட்டதாக ஊடகங்களில் செய்திகளை பகிர்ந்தன.

இந்தியப் பயணம் தொடர்பில் கொழும்பில் கருத்து வெளியிட்டிருந்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், எட்கா ஒப்பந்தத்தை கைச்சாத்திட எவ்வித இணக்கப்பாடுகளும் புதுடில்லியில் எட்டப்படவில்லை என்றும் பேச்சுகளை முன்னோக்கி கொண்டுசெல்லவே இணக்கப்பாடுகள் எட்டப்பட்டதாகவும் கூறியிருந்தார்.

இந்த நிலையில், புதுடில்லியில் எட்டப்பட்ட இணக்கப்பாடு குறித்து கருத்து வெளியிட்டுள்ள இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, பேச்சுவார்த்தைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நோக்கத்துடன் மட்டுமே மீண்டும் தொடங்க ஒப்புக் கொள்ளப்பட்டதாக கூறியுள்ளார்.

கூட்டு அறிக்கை தெளிவாக உள்ளது. ஆங்கில மொழியில் அது தெளிவாக உள்ளது. பேச்சுவார்த்தைகளைத் தொடர விருப்பம் இருந்தது. அது ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிவடையும் பேச்சுகள் அல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் எட்கா உடன்படிக்கை உட்பட ஏனைய திட்டங்கள் தொடர்பில் இருநாடுகளுக்கு இடையிலான பேச்சுகள் விரைவில் ஆரம்பமாகும் என இராஜதந்திர வட்டாரங்களில் அறிய முடிகிறது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை பயணத்துக்கு முன்னதாக இந்தப் பேச்சுகளில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை எட்ட இருநாடுகளும் கலந்துரையாடல்களை பல கோணங்களில் ஆரம்பித்துள்ளதாகவும் மோடியின் பயணத்தின் போது சில முக்கிய உடன்படிக்கைகளை கைச்சாத்திடும் நோக்கில் இந்த கலந்துரையாடல்கள் இடம்பெறுவதாகவும் அறிய முடிந்தது.

# இலங்கையில் உணவுத் தேவையை பூர்த்தி செய்ய கடன் வாங்கும் குடும்பங்கள்

(ஆர்.மனோசங்கர்)

நாட்டின் பத்து மாவட்டங்களில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில், 32 சதவீத குடும்பங்கள் தங்கள் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய கடன் வாங்குவதாகத் தெரியவந்துள்ளது.

உணவு சார்ந்த தகவல் மற்றும் செயல் வலையமைப்பு (FLAN Sri Lanka) நடத்திய ஆய்வில் இந்த விடயம் தெரியவந்துள்ளது. இந்த ஆய்வை நிறுவனத்தின் ஆராய்ச்சி அதிகாரி ஷெஹாரி விஜேசிங்க மேற்கொண்டிருந்தார். இந்த கணக்கெடுப்பு கடந்த ஆண்டு (2024) மே, ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் நடத்தப்பட்டது. முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, பதுளை, இரத்தினபுரி, காலி, நுவரெலியா, கொழும்பு, அனுராதபுரம் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் உள்ள 20 பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கி இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

கொழும்பு மாவட்டத்தில் உள்ள கொலன்னாவ மற்றும் மஹரகம பிரதேச செயலாளர் பிரிவுகளும் இந்த கணக்கெடுப்புக்காக தேர்ந்தெடுக்கப்பட்டன.

இந்த கணக்கெடுப்புக்காக, மேற்கண்ட மாவட்டங்களிலிருந்து 1,352 குடும்ப அலகுகளின் மாதிரி தேர்ந்தெடுக்கப்பட்டு குழுக்களாக விசாரிக்கப்பட்டது. கணக்கெடுக்கப்பட்ட குழுவில் 34.3 சதவீதம் பேர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். மொத்த கணக்கெடுப்பில் 62 சதவீதம் பேருக்கு நிலையான வருமான ஆதாரம் இல்லை என்பதும், கிட்டத்தட்ட 57 சதவீதம் பேருக்கு உணவுப் பாதுகாப்பு இல்லை என்பதும் தெரியவந்தது.

இந்த கணக்கெடுப்பில் 35 சதவீத வீட்டு உரிமையாளர்களின் மாத வருமானம் 49,589 ரூபாவிற்கும் குறைவாக உள்ளது.

கணக்கெடுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் தங்கள் வருமானத்தில் 42 சதவீதத்தை உணவுக்காகச் செலவிடுகிறார்கள், அதே நேரத்தில் ஆறு சதவீதம் மட்டுமே சுகாதாரத்திற்காக ஒதுக்கப்படுகிறது. மேலும், கல்விக்கு

## ஆய்வில் தகவல்

9 சதவீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. கணக்கெடுக்கப்பட்ட வீட்டு உரிமையாளர்களில் 60 சதவீதம் பேர் புகைபிடித்தல் மற்றும் மதுவுக்கு அடிமையானவர்கள். கணக்கெடுக்கப்பட்ட குழுவில் 31.7 சதவீதம் பேர் உணவு வாங்க கடன் வாங்கியுள்ளதாகவும், தங்க நகைகளை அடகு வைப்பதன் மூலமோ, தங்களிடம் இருந்த சொத்துக்களை விற்பதன் மூலமோ அல்லது கடன் வாங்குவதன் மூலமோ உணவுக்கான பணத்தைத் தேடிக்கொண்டதாகவும் அவர் கூறினார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் மார்கழி மாதம் 28ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை

**மேஷம்** இன்று ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

**ரிஷபம்** இன்று குடும்பத்தில் நல்லுறவு காணப்படும்.

**மிதுனம்** இன்று சௌகரியங்கள் குறைந்து காணப்படும்.

**கடகம்** இன்று உங்களுக்கு சாதகமான நாள்.

**சிம்மம்** இன்று ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

**கன்னி** இன்று அதிஷ்டங்கள் வந்துசேரும்.

**துலாம்** இன்று உங்கள் செயல்களில் கவனம் தேவை.

**விருச்சிகம்** இன்று நிதிவளர்ச்சி நன்றாக இருக்கும்.

**தனுசு** பணியிடத்தில் நற்பெயரைப்பெறுவீர்கள்.

**மகரம்** இன்று அன்பும் ஆர்வமும் நிறைந்திருக்கும்.

**கும்பம்** இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.

**மீனம்** இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று அதிகாலை 04:58 வரை திரயோதசி பின்பு சதுர்த்தசி.
**நட்சத்திரம்:** இன்று காலை 11:46 வரை மிருகசீரிஷம் பின்பு திருவாதிரை.
**யோகம்:** சித்த.
**சந்திராஷ்டமம்:** விசாகம்,அனுஷம்.
**சூலம்:** மேற்கு.
**இராகு காலம்:** 04:30 PM முதல் 06:00 PM வரை.
**குளிகை:** 03:00 PM முதல் 04:30 PM வரை.
**எமகண்டம்:** 12:00 PM முதல் 01:30 PM வரை.

# கடற்றொழில் அமைச்சர் சீனத் தூதுவருடன் சந்திப்பு



கடற்தொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகரன் மற்றும் இலங்கைக்கான சீன தூதுவர் கீ சென்ஹொங் (Qi Zhenhong) க்கும் இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள கடற்தொழில் அமைச்சின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

# உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு திருச்சியில் நடத்த ஏற்பாடு

## ஆய்வுக் கட்டுரைகள், ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன

தமிழ்நாடு இஸ்லாமிய இலக்கியக் கழகம் நடாத்தும் உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஒன்பதாம் மாநாடு மே மாதம் 9,10,11 ஆம் திகதிகளில் திருச்சியில் நடைபெறவுள்ளது. இதற்கான எல்லா முன்னேற்பாடுகளும் இஸ்லாமிய இலக்கியக் கழகத்தினால் முன்னெடுக்கப்படுவதாக கழகத் தலைவர் முனைவர், பேராசிரியர் சேமுமு முகம்மதலி, பொதுச் செயலாளர் முனைவர், பேராசிரியர் மு. இ. அகமது மரைக்கார் ஆகியோர் அறிவித்துள்ளனர்.

அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையிலிருந்தும் இலக்கியவாதிகளின் வருகையை இஸ்லாமிய இலக்கியக் கழகம் பெருமளவில் எதிர்பார்க்கின்றது. இதன் காரணமாக மாநாட்டில் கலந்து கொள்ளும் இலங்கைப் பேராளர்களுக்கு பதிவுக் கட்டணம் அறவிடுவதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆய்வுக் கட்டுரைகள், மாநாட்டு மலருக்கான ஆக்கங்கள் என்பவற்றினை மாநாட்டுக் குழு எதிர்பார்க்கின்றது. ஆக்கங்களை ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் மாநாட்டுக் குழுவினருக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும்.

உலகெங்கிலும் உள்ள இஸ்லாமிய தமிழிலக்கியவாதிகளின் விபரக் கொத்தாக "யார் எவர்?" எனும் நூல் வெளியிடவும் மாநாட்டுக் குழுவினர் தீர்மானித்துள்ளனர். இதற்கான விபரங்களை உரிய படிவத்தினைப் பூர்த்தி செய்து இந்திய ரூபா 300 செலுத்தியதற்கான ஆதாரத்துடன் விழாக்குழுவினர் எழுத்தாளர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றனர். இந்திய ரூபா 300 செலுத்துவதிலுள்ள நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்க்குமுகமாக தமிழ்நாடு இஸ்லாமிய இலக்கியக் கழக இலங்கை இணைப்பாளர்களில் ஒருவரான பொறியியலாளர் நியாஸ் ஏ.ஸமத் (தொலைபேசி எண் 0773541588) மூலமாக "யார் எவர்?" நூலுக்கான தகவல்களையும் அதற்குரிய பணமாக ரூபா 1,000 வினையும் (இந்திய ரூபா 300 வக்கான மதிப்பு) செலுத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இஸ்லாமிய இலக்கியக் கழக இணைப்பாளராக டொக்டர் தாஸிம் அஹமத் இயங்குகின்றார். உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஒன்பதாம் மாநாடு சம்பந்தமான மேலதிக தகவல்களையும் விண்ணப்பப் படிவங்களையும் இணைப்பாளர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம். இஸ்லாமிய இலக்கியக் கழகம், மாநாடு சிறப்புடன் நிகழ இலங்கை இலக்கியப் பேராளர்களின் பங்குபற்றுதலை மகிழ்வோடு எதிர்பார்ப்பதோடு ஆய்வுக் கட்டுரைகள், மாநாட்டு மலருக்கான ஆக்கங்கள், "யார் எவர்?" கோவைக்கான சுயவிபரங்கள் என்பவற்றினை ஜனவரி 31 ஆம் திகதிக்குள் மாநாட்டுக்குழு எதிர்பார்க்கின்றது.

# ஐ.ம.ச - மாற்றங்கள் தொடர்பில் பரிசீலிக்க குழு நியமனம்

ஐக்கிய மக்கள் சக்தியில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பில் பரிசீலிக்க குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற கட்சியின் முகாமைகுழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கட்சியின் தவிசாளர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கர், தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க, கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் ஆகியோர் இந்தக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரால் எழுத்து மூலம் விடுக்கப்பட்ட கோரிக்கையின் உள்ளடக்கத்திற்கு கூட்டத்தில் கலந்துகொண்ட பெரும்பான்மையினரின் ஆதரவான கருத்தின் அடிப்படையில் குழுவொன்றை நியமிக்க தலைவர் சஜித் பிரேமதாச இந்த தீர்மானத்தை எடுத்தார்.

இதனிடையே, கட்சியின் முகாமைத்துவக் குழு கூட்டம் ஒவ்வொரு வாரமும் புதன்கிழமையும், மாதந்தோறும் மூன்றாவது வியாழக்கிழமையும் செயற்குழு கூடுவது எனவும் இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

# மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் நினைவு நாள் விழா

உரிமைக்குரல் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் நலிவுற்றோர் நல அறக்கட்டளையின் தலைவர் சேவா ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் ரவியின் ஏற்பாட்டில் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆரின் 37வது நினைவேந்தல் நிகழ்வு கர்நாடக மாநிலம் பெங்களூரில் நடைபெற்றது. பெங்களூர் தமிழ்ச் சங்க திருவள்ளுவர் அரங்கத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மகத்தான ஆளுமையாளர்கள் சிலருக்கு புரட்சித் தலைவரின் நினைவாக கேடயங்கள் வழங்கப்பட்டன. டாக்டர் ஹனீஷா காடேன், பெங்களூர் தொழிலதிபர் ஆர்.ஸ்ரீநிவாசன், ஊடகவியலாளர் மணி ஸ்ரீகாந்தன், நாகர்கோவில் சுஷ்ருஷா மருத்துவமனையின் உரிமையாளர் டாக்டர் ஆர்.



மோகன்தாஸ் ஆகியோருக்கு உரிமைக்குரல் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் நலிவுற்றோர் நல அறக்கட்டளையின் உறுப்பினர்கள் நினைவு கேடயங்களை வழங்கினார்கள்.

இந்த நிகழ்வினை புதிய வானம் மக்கள் நல அறக்கட்டளையின் சர்வதேச அமைப்பாளர் காஞ்சிபுரம் தியாகராஜன் தொகுத்து வழங்கினார்.

# காற்றலைகளில் என்றென்றும் நிலைத்திருக்கும் வசீகர குரலோன்

பிரபல திரைப்பட பாடகர் பி.ஜெயச்சந்திரன் கடந்த 9 ஆம் திகதி காலமான செய்தி இசை ரசிகர்களை பெரிதும் கவலை கொள்ளச் செய்த செய்தியாக அமைந்திருந்தது. உடல்நலக் குறைவினால் காலமாகும் போது அவருக்கு வயது 80. தமிழை தமிழாக அழகாக உச்சரித்த அந்த இனிய குரல் ஓய்ந்து விட்டது. ஜெயசந்திரனின் மறைவு திரையுலகிற்கு ஈடு செய்யமுடியாத இழப்பாகவே அமைந்துள்ளது.

1944 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மூன்றாம் திகதி கேரள மாநிலம் எர்ணாகுளத்தில் உள்ள ரவிபுரம் பகுதியில் பத்ராலயம் என்ற சிற்றூரில் ரவிவர்மா கொச்சனியன் தம்பரான் – பளியத்து சுபத்ரா குஞ்சம்மாள் தம்பதிக்கு இவர் மூன்றாம் மகனாகப் பிறந்தார்.


**முதல் பாடல்**

பாடசாலை மற்றும் கல்லூரி நிகழ்ச்சிகளில் பாடிய ஜெயச்சந்திரனுக்குக் கிடைத்த பாராட்டுகளும் பரிசுகளும் அவருடைய இசை ஆர்வத்தை அதிகரிக்கச் செய்தன. முதல் வாய்ப்பு இருபத்து மூன்றாம் வயதில் 'உத்யோகஸ்தா' என்ற மலையாளப் படத்தில் எம்.எஸ்.பாபுராஜ் இசையில் 'அநுராக கானம் போலே' என்ற பாடலை பாடியதன் மூலம் கிடைத்தது அதன் பின்னர் அவர் பலரது கவனத்தை ஈர்த்தார்.

1973-இல் சத்யா மூவியின் 'மணிப்பயல்' படத்தில் 'தங்கச்சிமிழ் போல் இதழே' பாடலின் மூலம் ஜெயச்சந்திரனின் குரலைத் தமிழ் ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்தினார் எம்.எஸ். விஸ்வநாதன். 1976-ல் வெளிவந்த பாலசந்தரின் 'மூன்று முடிச்சு' படத்தில் ஜெயச்சந்திரன் வாணி ஜெயராமுடன் பாடிய 'ஆடி வெள்ளி தேடி வந்த்', 'வசந்த கால நதிகளிலே'ஆகிய பாடல்கள் பெரிய வெற்றியைப் பெற்றன.

**மாஞ்சோலைக் கிளிதானோ..**

இயக்குநர் கே.பாலச்சந்தரின் 'அலைகள்' படத்தில் ஜெயச்சந்திரன் மெல்லிசை மன்னரின் இசையில் பாடிய 'பொன்னென்ன பூவென்ன கண்ணே'பாடலில் ஜெயச்சந்திரனின் குரலில் தென்படும் வசீகரம் மனத்தை வருடி சாந்தப்படுத்துவதாக இருந்தது. இளையராஜாவின் இசையில் முதன்முதலாக 'காற்றினிலே வரும் கீதம்' படத்தில் பாடிய 'சித்திரச் செவ்வானம் சிரிக்கக் கண்டேன்'பாடலும், 'கிழக்கே போகும் ரயிலின் 'மாஞ்சோலைக் கிளிதானோ' பாடலும் பெரு வெற்றிபெற்று முன்னணிப்



பாடகர் வரிசையில் ஜெயச்சந்திரனைச் சேர்த்தன. 'ஒருதலை ராகம்' படத்தில் 'கடவுள் வாழும் கோவிலிலே,' 'இரயில் பயணங்களில்' படத்தில் 'வசந்த காலங்கள்' ஆகிய பாடல்கள் டி.ராஜேந்தரின் இசையில் ஜெயச்சந்திரன் தொடுத்த வெற்றிக்கோலங்கள். கே. பாக்கியராஜின் 'அந்த ஏழு நாட்கள்' படத்தில் 'கவிதை அரங்கேறும் நேரம்' பாடலை எஸ். ஜானகியுடன் இணைந்து வெகு அற்புதமாகப் பாடி அசத்தி இருப்பார் ஜெயச்சந்திரன்.

'கடல் மீன்கள்' படத்தில் 'தாலாட்டுதே வானம்'என்று எஸ். ஜானகியுடன் சேர்ந்து இசையலைகளை மனத்தில் பாயவைத்தார் ஜெயச்சந்திரன். பாடல்களுக்காகவே பெரிய வெற்றிபெற்ற 'வைதேகி காத்திருந்தாள்' படத்தில் கதாநாயகன் பாடுவதாக அமைந்த மூன்று பாடல்களையுமே ஜெயச்சந்திரனைத்தான் பாடவைத்தார் இளையராஜா. 'ராசாத்தி உன்னைக் காணாத நெஞ்சு' , 'இன்றைக்கு ஏனிந்த ஆனந்தமே', 'காத்திருந்து காத்திருந்து' மூன்றுமே வெற்றிக்கனியை ஜெயச்சந்திரனின் மடியில் போட்ட முத்தான பாடல்கள்.

'அம்மன் கோவில் கிழக்காலே' படத்தில் 'பூவை எடுத்து, 'கொடியிலே மல்லியப்பூ'(கடலோரக் கவிதைகள்) ஆகியவை ஜெயச்சந்திரனின் குரல் தனித்தன்மையோடு வெளிப்பட்ட பாடல்கள். ரஜினிகாந்த்தின் மிகச் சிறந்த படங்களில் ஒன்றான 'ஆறிலிருந்து அறுபதுவரை'படத்தில் 'வாழ்க்கையே வேஷம்' பாடலில் சொந்தபந்தங்களால் ஒதுக்கப்பட்ட ஒரு மனிதனின் மனநிலையைத் தனது குரலால் அற்புதமாக வெளிப்படுத்தி இருப்பார் ஜெயச்சந்திரன்.

இதேபோல் புதிய தலைமுறைக்கும் துல்லியமான உச்சரிப்பு, பொருளுணர்ந்து பாவநயத்தோடு குரலால் மெருகூட்டுவது ஆகியவற்றில் தனித்தன்மையோடு பிரகாசித்தார் ஜெயச்சந்திரன். பி. சுசீலாவுடன் பாடிய 'மயங்கினேன் சொல்லத் தயங்கினேன்' (நானே ராஜா நானே மந்திரி) பாடலுக்கு மயங்காதவர் யாருமே இல்லை. மனோஜ் கியான் இசையில் 'இணைந்த கைகள்' படத்தில் 'அந்திநேர தென்றல் காற்றை' எஸ்.பி.பி.யுடன் சேர்ந்து பாடினார்.

விக்ரமனின் 'பூவே உனக்காக' படத்தில் எஸ்.ஏ. ராஜ்குமாரின் இசையில் சுஜாதாவுடன் பாடிய 'சொல்லாமலே யார் பார்த்தது' பாடலில் ஜெயச்சந்திரனின் குரல் வசீகரம் சொல்லாமலே புரியும். இவ்வாறு சாதனை பயணத்தில் தொடர்ந்த ஜெயச்சந்திரன் 16,000 இற்கும் மேற்பட்ட பாடல்களை பாடியுள்ளார். இத்தனை சிறப்புமிகு பாடல்களை பாடியுள்ள ஜெயச்சந்திரன் 5 தடவைகள் தேசிய விருதுகளை பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. மேலும், தமிழ் நாட்டின் மாநில விருது இவருக்கு நான்கு தடவைகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், கேரள மாநில திரைப்பட விருது, கேரள அரசின் ஜே.சி.டேனியல் விருது, தமிழ் நாடு அரசின் கலைமாமணி விருது என பல விருதுகளும் வழங்கப்பட்டு ஜெயச்சந்திரன் கௌரவிக்கப்பட்டுள்ளார். இத்தனை சிறப்புக்களுடன் இசையுலகில் தனது இனிய குரலால் ரசிகர்களை வசீகரித்த பி.ஜெயச்சந்திரனின் நினைவுகள் என்றென்றும் காற்றலைகளில் மிதந்தவாறே நிலைத்திருக்கும்.

ஒருவனின் நோக்கில்...
No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114664152 / editorial@oruvan.com

## உலகம் எதிர்பார்க்கும் இடதுசாரிகளின் பட்ஜட்

நடப்பாண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு அரசாங்கம் தயாராகிவிட்டது. அதற்கான நிதி ஒதுக்கீடுகள் நாடாளுமன்றத்திலே பிரதமர் ஹரிணி அமரசூரியவால் சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது வரவு-செலவுத் திட்டம் இது என்பதால், மக்கள் மத்தியில் பலத்தை எதிர்பார்ப்பு இருக்கிறது. நடப்பாண்டுக்கான மொத்த செலவினம் 4691 பில்லியன் ரூபா என அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை 2024 ஆம் ஆண்டு ஒப்பிடுகின்ற பொழுது, 831 பில்லியன் ரூபாய் மேலதிக ஒதுக்கீடாக இருக்கிறது.

ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற நிதி திட்டமிடல் அமைச்சுக்கு ஆக கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதாவது, 484 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பாதுகாப்பு அமைச்சுக்கான செலவீடு, ஒப்பீட்டளவில் குறைவாகவே இருக்கிறது.

ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற, ஆயுதப் போராட்டத்தை நடத்தி தோல்வி கண்ட, ஜேவிபி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தான் இப்போது ஆட்சியில் இருக்கிறது. இடதுசாரி சிந்தனையை முன்னிலைப்படுத்தி மக்கள் மத்தியில் தங்களை அடையாளப்படுத்தியவர்கள் தேசிய மக்கள் சக்தியினர். அதாவது, இடதுசாரி அரசாங்கம் ஒன்றின், முதலாவது வரவு செலவுத் திட்டம் அடுத்த மாதம் முன் வைக்கப்படுகிறது. இதுவும் உலகம் முழுவதும் பலத்த எதிர்பார்ப்பையும், சிந்தனை மாற்றத்தின் பொருளாதார திறவுகோலையும் காட்டப் போகும் அளவுகோலாகவே இந்த பட்ஜெட் இருக்கப் போகிறது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவியேற்று, நூறு நாட்களையும் கடந்து விட்டது. நடப்பாண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 2024 நவம்பரில் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆட்சிப் பொறுப்பை ஏற்ற கையோடு அது சாத்தியப்படவில்லை. மூன்று மாத கால இடைக்கால கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்டே, நாடு நகர்ந்து கொண்டிருக்கிறது.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் புதிய வேலை திட்டங்கள் இந்த அரசிடம் இல்லை என எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. ரணில் விக்கிரமசிங்கவின், அதே கொள்கையோடுதான், அநுரகுமார திசாநாயக்கவும் பயணிக்கிறார் என்றும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

உண்மையில், சர்வதேச நாணய நிதியத்துடன் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் செய்த ஒப்பந்தத்தில் இருந்து மீள முடியாத நிலையில், பொருளாதார காய் நகர்த்தல்களை செய்யும் நிர்பந்தத்தை அனுசரித்துச் செல்ல வேண்டிய கட்டாயத்திலும் கடமைப் பாட்டிலும் அரசு இருக்கிறது. இது ஒரு தார்மீக பொறுப்பாக முன்னெடுக்கப்பட்டாலும், வரவு-செலவுத் திட்டம், மக்களின் வாழ்வில் சுபீட்சத்தை ஏற்படுத்துமா? என்ற கேள்வி எழுகின்றது.

அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான இடதுசாரி அரசாங்கத்தின் கொள்கையும், சர்வதேச நாணய நிதியத்தின் செயல்பாடுகளும் எதிர்-எதிர் முனைப்பானவை. இந்த சம்மாந்தரங்கள் சந்திப்பது சாத்தியமில்லை. முதலாளித்துவ சிந்தனைக்கும், இடதுசாரி சிந்தனைக்கும் இடையில் ஏற்படுகின்ற முரண்பாட்டு நகர்வுகள், இலங்கை அரசியலில் நீடிக்க தான் போகிறது.

"முதலாளித்துவத்தின் உச்சத்தில்தான், சோசலிசம் பிறக்கும்" என்று இடதுசாரி சிந்தனையின் நடைமுறை சிற்பி லெனின் தெளிவாக கூறியிருக்கிறார். "அனைத்துக்கும் அடிப்படையும் அடிக்கட்டுமானமும் பொருளாதாரமாகத் தான் இருக்கிறது. இந்த அடிக்கட்டுமானத்தில் மாற்றம் ஏற்படாத வரை அடிப்படையில் மாற்றம் ஏற்படாது." என சமதர்ம கொள்கையின் தந்தை, கார்ல்மார்க்ஸ் கூறியிருக்கிறார். இதுதான் ஒரு நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பின் யதார்த்தங்கள். லெனின் தலைமையில் ரஷ்யாவில் நடந்த ஒக்டோபர் புரட்சி இதனை உலகுக்கு தெட்டத் தெளிவாக காட்டியது. நெருக்கடிகளாலும் சமூகச் சீரழிவுகளாலும் நொந்து போய் கிடக்கின்ற மக்களின் வாழ்வு சீரமைக்கப்பட வேண்டும்.

இலங்கையில், 10 மாவட்டங்களில் நடத்திய ஆய்வு அதிர்ச்சி அளிக்கிறது. இந்த மாவட்டங்களில், உணவு தேவைக்காக கடன் பெறுகின்ற குடும்பங்கள் 32 வீதம் என கண்டறியப்பட்டுள்ளது.

வாழ்க்கைக்காக போராடுகின்ற இந்த மக்கள், நிரந்தர வருவாய் இன்றி கடும் சமூகப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள். ஏற்கனவே கூறியது போல, கடன் வாங்கி வாங்கியே வாழ்வியலை இழக்கிறார்கள். பொருளாதாரம் பலவீனங்களை பயன்படுத்தி, அரசு சார்பற்ற நிதி நிறுவனங்கள், சமூக சீரழிவுகளுக்குள் மக்களை தள்ளுகின்ற அவல நிலை தொடர்கின்றது. இலங்கையில் நுண்கடன் திட்டம் என்பது பாரிய சவாலாக உருவெடுத்து இருக்கிறது.

கவர்ச்சிகரமான சலுகைகளை காட்டி, நுண்கடனை வழங்கும் நிறுவனங்கள், பாரிய பிரச்சினைகளை உருவாக்கி இருக்கிறார்கள். கூடுதலாக பெண்களே இதில் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பது ஆய்வு தகவலாக இருக்கிறது.

அண்மைய கணக்கெடுப்பின்படி, 24 லட்சம் குடும்பப் பெண்கள், நுண் கடன் பொறிக்குள் சிக்கித் தவிக்கிறார்கள். இந்த நிறுவனங்களின் வட்டி தொல்லையில் தாங்க முடியாமல் இதுவரை 200க்கும் மேற்பட்ட குடும்பப் பெண்கள் உயிரை மாய்த்து இருக்கிறார்கள் என்பதும் பரிதாபத் தகவல்களாக இருக்கின்றன. தேசிய மக்கள் ஒன்றிய தலைவி இதனை பகிரங்கப்படுத்தி இருக்கிறார்.

இவைகளுக்கெல்லாம், ஆட்சியில் இருந்தவர்களே பொறுப்பேற்க வேண்டும். தங்களது சுய வருவாயையும், கமிஷன்களையும் பார்த்துக்கொண்ட அரசியல்வாதிகள் எல்லாம், இத்தகைய சீரழிவுகளின் சூத்திரதாரிகள் என்பதை மறந்துவிட வேண்டாம்.

இலங்கை மத்திய வங்கிக்கு தெரியாமல், நுண்கடன் திட்டங்கள் நடைமுறையில் இருந்திருக்க முடியாது. ஆனால் மத்திய வங்கி அதனை கண்டு கொண்டதாக இல்லை. அரசியல் தலையீடுகளும் இதற்கு காரணமாக இருக்கலாம். மாற்றத்தை எதிர்கொண்டு ஆட்சி பீடம் வேறு இருக்கும் இந்த இடதுசாரி அரசாங்கம், இத்தகைய பிரச்சினைகளுக்கும் உடனடியாக தீர்வு காண வேண்டும். வரவு செலவுத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டாலும், மக்களை சீரமைத்து வாழ்வாதாரத்தை அதிகரிக்க கூடிய, சுபீட்சமான திட்டங்கள் முன் வைக்கப்பட்டாலே நாடு, நாடாகவே இருக்கும்.



# 2025-நிதி ஒதுக்கீடுகள்: ஜனாதிபதியின் கீழுள்ள அமைச்சுக்கு கூடுதல் நிதி

- நிதி திட்டமிடல் அமைச்சுக்கு 484 பில்லியன் ரூபா
- சுகாதார அமைச்சுக்கு ரூ.412 பில்லியன்
- பாதுகாப்புக்கு ரூ.382 பில்லியன்
- கல்விக்கு ரூ. 206 பில்லியன்
- பொது நிர்வாகம் ரூ. 463 பில்லியன்

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

2025 ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில் அரசின் செலவு 4691 பில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பிரதமர் ஹறிணி அமரசூரியவால் வியாழக்கிழமை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி தொடங்கி டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அரச செலவுகள் குறித்து இதில் மதிப்பிடப்பட்டுள்ளதுடன், மொத்த செலவு 4691 பில்லின்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இம்முறை ஜனாதிபதியின் கீழ் இயங்கும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சுக்கே அதிக நிதி ஒதுக்கீடு இடம்பெற்றுள்ளது. இந்த அமைச்சுக்கு 484 மில்லியன் மீண்டுவரும் செலவு எனவும் 229 மூலதனச் செலவு எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது.

2024ஆம் நிதியாண்டுக்கு 3860 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிலையில் 2025ஆம் நிதியாண்டுக்கு 831 பில்லியன் ரூபா அதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




### அமைச்சுகளுக்கு நிதி ஒதுக்கீடுகள் இடம்பெற்றுள்ள விபரம் வருமாறு,


- **பௌத்த, மத மற்றும் கலாசார விவகார அமைச்சு**
  மீண்டுவரும் செலவு - 8.3 பில்லியன் ரூபா
  மூலதனச் செலவு - 5.4 பில்லியன் ரூபா
- **நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சு**
  மீண்டுவரும் செலவு - 484 பில்லியன் ரூபா
  மூலதனச் செலவு - 229 பில்லியன் ரூபா
- **பாதுகாப்பு அமைச்சு**
  மீண்டுவரும் செலவு - 382 பில்லியன் ரூபா
  மூலதனச் செலவு - 60 பில்லியன் ரூபா
- **நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு**
  மீண்டுவரும் செலவு - 38 பில்லியன் ரூபா
  மூலதனச் செலவு - 16 பில்லியன் ரூபா
- **சுகாதாரம் மற்றும் ஊடக அமைச்சு**
  மீண்டுவரும் செலவு - 412 பில்லியன் ரூபா
  மூலதனச் செலவு - 95 பில்லியன் ரூபா
- **வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு**
  மீண்டுவரும் செலவு - 19.4 பில்லியன் ரூபா
  மூலதனச் செலவு - 2 பில்லியன் ரூபா
- **வர்த்தகம், வணிகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு, அபிவிருத்தி அமைச்சு**
  மீண்டுவரும் செலவு - 2.6 பில்லியன் ரூபா
  மூலதனச் செலவு - 397 மில்லியன் ரூபா
- **போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சு**
  மீண்டுவரும் செலவு- 52.4 பில்லியன் ரூபா
  மூலதனச் செலவு - 421 பில்லியன் ரூபா
- **விவசாயம், கால்நடை, நிலங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**
  மீண்டுவரும் செலவு- 83 பில்லியன் ரூபா
  மூலதனச் செலவு - 124 பில்லியன் ரூபா
- **எரிசக்தி அமைச்சு**
  மீண்டுவரும் செலவு- 1 பில்லியன் ரூபா
  மூலதனச் செலவு - 20 பில்லியன் ரூபா
- **நகர அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் வீட்டுவசதி அமைச்சு**
  மீண்டுவரும் செலவு- 3 பில்லியன் ரூபா
  மூலதனச் செலவு - 98 பில்லியன் ரூபா
- **கிராம அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு**
  மீண்டுவரும் செலவு- 24 பில்லியன் ரூபா
  மூலதனச் செலவு - 05 பில்லியன் ரூபா
- **கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு**
  மீண்டுவரும் செலவு- 206 பில்லியன் ரூபா
  மூலதனச் செலவு - 65 பில்லியன் ரூபா
- **பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**
  மீண்டுவரும் செலவு- 463 பில்லியன் ரூபா
  மூலதனச் செலவு - 33 பில்லியன் ரூபா
- **பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சு**
  மீண்டுவரும் செலவு- 5.4 பில்லியன் ரூபா
  மூலதனச் செலவு - 11 பில்லியன் ரூபா
- **தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சு**
  மீண்டுவரும் செலவு- 04 பில்லியன் ரூபா
  மூலதனச் செலவு - 08 பில்லியன் ரூபா
- **மீன்பிடி, நீர்வாழ் மற்றும் கடல் வள அமைச்சு**
  மீண்டுவரும் செலவு- 6.2 பில்லியன் ரூபா
  மூலதனச் செலவு - 5.2 பில்லியன் ரூபா
- **சுற்றாடல் அமைச்சு**
  மீண்டுவரும் செலவு- 12 பில்லியன் ரூபா
  மூலதனச் செலவு - 3.5 பில்லியன் ரூபா
- **பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகார அமைச்சு**
  மீண்டுவரும் செலவு- 14 பில்லியன் ரூபா
  மூலதனச் செலவு - 392 மில்லியன் ரூபா
- **டிஜிட்டல் அமைச்சு**
  மீண்டுவரும் செலவு- 6.7 பில்லியன் ரூபா
  மூலதனச் செலவு - 6.8 பில்லியன் ரூபா
- **பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சு**
  மீண்டுவரும் செலவு- 159 பில்லியன் ரூபா
  மூலதனச் செலவு - 16 பில்லியன் ரூபா
- **தொழிலாளர் அமைச்சு**
  மீண்டுவரும் செலவு- 4.3 பில்லியன் ரூபா
  மூலதனச் செலவு - 1.7 பில்லியன் ரூபா
- **இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு அமைச்சு**
  மீண்டுவரும் செலவு- 7.1 பில்லியன் ரூபா
  மூலதனச் செலவு - 5 பில்லியன் ரூபா
- **அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு**
  மீண்டுவரும் செலவு- 2.8 பில்லியன் ரூபா
  மூலதனச் செலவு - 2.2 பில்லியன் ரூபா
- **சிறப்பு செலவின அலகின் கீழ் பின்வரும் செலவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.**
- **ஜனாதிபதி**
  - செயல்பாட்டு திட்டம்
  மீண்டுவரும் செலவு- 2.5 பில்லியன் ரூபா
  மூலதனச் செலவு - 345 பில்லியன் ரூபா
- **அபிவிருத்தி திட்டம்**
  மீண்டுவரும் செலவு- 20 மில்லியன்
  மூலதனச் செலவு - 100 மில்லியன்
- **பிரதமர் அலுவலகம்**
  - செயல்பாட்டு திட்டம்
  மீண்டுவரும் செலவு- 1 பில்லியன் ரூபா
  மூலதனச் செலவு - 71 பில்லியன் ரூபா
- **உயர் நீதிமன்ற நீதியரசர்கள்**
  மீண்டுவரும் செலவு- 451 மில்லியன்
  மூலதனச் செலவு - 30 மில்லியன்
- **அமைச்சரவை அலுவலகம்**
  **செயல்பாட்டு திட்டம்**

மீண்டுவரும் செலவு- 205 மில்லியன் மூலதனச் செலவு - 25 மில்லியன் என்ற அடிப்படையில் நிதி ஒதுக்கீடுகள் இடம்பெற்றுள்ளன.

சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு பெப்ரவரி 17 ஆம் திகதி இடம்பெற்றும்.

இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் பெப்ரவரி 18 ஆம் திகதி முதல் பெப்ரவரி 25 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதுடன், இரண்டாம் வாசிப்பு வாக்கெடுப்பும் பெப்ரவரி 25 ஆம் திகதி இடம்பெறும்.

பெப்ரவரி 27 ஆம் திகதி முதல் மார்ச் 21 ஆம் திகதிவரை சட்டமூலம் மீதான குழுநிலை விவாதம் இடம்பெற்று மார்ச் 21ஆம் திகதி மூன்றாம் வாசிப்புடன் சட்டமூலம் நிறைவேற்றப்படும். ■



# இந்திய இழுவைப் படகுகளால் அறுக்கப்படும் வலைகள்

(பு.கஜிந்தன்)

இலங்கைக் கடற்பரப்பில் இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறி உள்நுழைந்து, மீன்பிடியில் ஈடுபட்டதால் யாழ். – சுழிபுரம், காட்டுப்புலம் பகுதி மீனவர் ஒருவரின் சுமார் ஏழு இலட்சம் ரூபாய் பெறுமதியான வலைகள் அறுக்கப்பட்டுள்ளதாகக் தெரிவிக்கப்படுகிறது.



திருவடிநிலை கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கையில் குறித்த மீனவர், புதன்கிழமை (08) இரவு ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, அத்துமீறி நுழைந்த இந்திய இழுவைப் படகுகள் அவரது வலைகளை அறுத்து உள்ளன. இதனால் அவரிடம் இருந்து 32 வலைகளில் 26 வலைகள் அறுக்கப்பட்ட நிலையில் ஆறு வலைகளே மீதமாகின. எஞ்சிய வலைகளும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. புதன்கிழமை இரவு 10 மணியளவில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட ரோலர்கள் எமது வலையை மட்டுமல்லாமல் வேறு சங்கங்களின் வலைகளையும் அறுத்து உள்ளன. இப்பொழுது மீன்பிடி பருவகாலம். இந்திய இழுவை படகுகளின் இவ்வாறான செயற்பாடுகளால் நாங்கள் உழைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது எனப் பாதிக்கப்பட்ட மீனவர் தெரிவித்துள்ளார்.

ஏழு இலட்சம் ரூபாய் வங்கியில் கடன் பெற்று, இந்த வலை முதல்களை உருவாக்கி கடலில் தொழில் செய்தேன். எனது வலைகளை இந்திய இழுவைப் படகு அறுத்துச் சென்றதால் வாழ்வாதாரத்துக்கு என்ன செய்வேன், வங்கிக் கடனை செலுத்த என்ன செய்வேன் என்று தெரியாமல் தவிக்கின்றேன் என்றார்.

# பண்பாட்டுப் பெருநாட்களிலாவது மட்பாண்டங்களைப் பயன்படுத்துவோம்

(பு.கஜிந்தன்)

தைப்பொங்கல் மதங்களைக் கடந்து தமிழ் மக்கள் அனைவராலும் கொண்டாடப்படுகின்ற ஓர் பண்பாட்டுப் பெருவிழா. இயற்கையைப் போற்றுகின்ற இவ்விழாவில் இயற்கைக்கு இசைவான மண்பானைகளிலேயே தொன்றுதொட்டுப் பொங்கல் வைக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால், வசதி கருதி மண்பானைகளைத் தவிர்த்து அலுமினியப் பானைகளில் பொங்கும் போக்கு எம்மிடையே அதிகரித்துள்ளது.



அலுமினியப் பாத்திரங்களை முற்றாகத் தவிர்க்க இயலாது போனாலும் தைப்பொங்கல் போன்ற பண்பாட்டுப் பெருநாட்களிலாவது மட்பாண்டங்களைப் பயன்படுத்துவோம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்ற பசுமை இயக்கத்தின் மண்பானைப் பொங்கல் பொதிகள் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் உரையாற்றுகையில், அலுமினியப் பாத்திரங்களில் உணவு சமைக்கும்போது அலுமினியம் உணவுடன் கலப்பதைத் தடுக்கும் பொருட்டுப் பாத்திரத்தின் உட்பகுதியில் அலுமினியம் ஒட்சைட்டுப் படலம் இடப்படுகிறது.

அலுமினியப் பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவும்போது அலுமினியம் ஒட்சைட்டு தேய்வடைந்து உணவுப் பாதுகாப்பு கேள்விக்குறியாகி விடுகிறது. மட்பாத்திரங்கள் அவற்றின் மேற்பரப்பில் இயற்கையாகவே உள்ள நுண்ணிய துவாரங்கள் ஊடாக வெப்பத்தைப் பரவி உணவைச் சீராக வேகவைக்கிறது. மெதுவாகவே சூடுபடுத்துவதால் உணவில் போசணைப் பொருட்களின் அழிவு தவிர்க்கப்படுகிறது.

அதனால் தைப்பொங்கல் போன்ற பண்பாட்டுப் பெருநாட்களிலாவது மண்பானைகளில் பொங்குவோம். இது நலிவடைந்துள்ள மட்பாண்டக் கைவினையர்களது வாழ்வையும் வளப்படுத்தும் என்றும் தெரிவித்துள்ளார்.

# அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்திக்குமாறு கோரி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி அக்கரப்பத்தனை மன்றாசி நகரில் வர்த்தகர்கள் (10) கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



அக்கரப்பத்தனை, மன்றாசி நகர வர்த்தகர்கள் இந்த போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். இதன்போது, நகர வர்த்தகர்களும், பொது மக்களும் கலந்து கொண்டு சுலோகங்களை ஏந்தியவாறு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கட்டுப்பாட்டு விலையில் அரிசியை நுகர்வோருக்கு விற்கமுடியாத சூழல், இதனால் சிறு வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். தமிழ் மக்களின் தைப்பொங்கல் விழாவுக்குப் பொங்கல் பொங்குவதற்கு சிவப்பரிசி தேவை. ஆனால் சிவப்பரிசிக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. சிவப்பரிசியை அரசு பெற்றுக் கொடுக்க வேண்டும் எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷம் எழுப்பினர்.

# கேப்பாபிலவு விமானப்படை முகாம் வேலியைத் தகர்த்த காட்டு யானைகள்

(அந்தணன்-முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாபிலவு மற்றும் பிலக்குடியிருப்பு பகுதிகளில் காட்டுயானையின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.



கேப்பாபிலவு விமானப்படையினரின் வேலியினை உடைத்துக் கொண்டு விமானப்படைத் தளத்திற்குள் சென்றுள்ளது.

விமானப்படையின் கம்பியிலான நெற்வேலியின் தூண்கள் 5 உடைக்கப்பட்டு வேலியினை சரித்துக் கொண்டு உள்நுழைந்துள்ளதாக விவசாயி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இன்னும் சில நாட்களில் நெல் அறுவடை நிறைவடையவுள்ள நிலையில் அண்மையில் கேப்பாபிலவு பகுதிக்குள் வயல்களையும் நாசம் செய்துள்ளது. அண்மை நாட்களாக இந்த காட்டுயானைகள் குறித்த பகுதியில் உள்ள விவசாயிகளின் வயல் நிலங்களை நாசம் செய்துவருவதாகவும் காட்டுயானைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மண்ணெண்ணெய் அருந்தி குழந்தை பலி

(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம் – கோப்பாய் பகுதியில் ஒரு வயதும் இரண்டு மாதங்களும் நிரம்பிய ஆண் குழந்தை ஒன்று மண்ணெண்ணெய் குடித்த நிலையில் உயிரிழந்துள்ளது. கோப்பாய் மத்தி, கோப்பாய் பகுதியைச் சேர்ந்த தர்சிகன் சஸ்வின் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

தாயார் சமையல் செய்துகொண்டிருந்த வேளை குறித்த குழந்தை மண்ணெண்ணெயை எடுத்து குடித்துவிட்டு, உடலிலும் பூசிவிட்டு விளையாடிக்கொண்டிருந்தது. இதை அவதானித்த தாயார் குழந்தையைத் தூக்கினார். அப்போது குழந்தை மயக்கமடைந்தது. பின்னர் 1 மணியளவில் கோப்பாய் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தது. குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# மாற்றுத் திறனாளிகளுக்குப் பொங்கல் உதவிகள்

(பு.கஜிந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 250 பயனாளிகளுக்கு ரூ.6000 பெறுமதியான உலருணவுப் பொதியும், பொங்கல் பொருட்களும் வெள்ளிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.



புலம்பெயர்ந்துள்ள சின்னத்துரை சண்முகலிங்கத்தால் மாற்றுத் திறனாளிகளுக்கே இந்த உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தலைமையில் குறித்த நிகழ்வு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மதவாச்சியில் சடலம் மீட்பு

(கி.வசந்தன்)

மதவாச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கட்டுவெல மயானத்திற்கு அருகிலுள்ள குழியில் பெண் ஒருவரின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக மதவாச்சிப் பொலிசார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 30 முதல் 40 வயதுக்குட்பட்டவராவார். சல்வார் மற்றும் லெக்கின்ஸ் அணிந்திருந்த குறித்த பெண்ணின் அருகில் கொழும்பிலிருந்து மதவாச்சிக்கு இ.போ.ச பஸ்ஸில் பயணித்த பயணச்சீட்டு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

பெண்ணின் உடலில் பல காயங்கள் காணப்பட்டுள்ள நிலையில், இதுவொரு கொலையென பொலிஸார் தெரிவித்துள்ளனர். நீதவானின் விசாரணையின் பின்னர் சடலம் பரிசோதனைக்காக அநுராதபுரம் மருத்துவமனை பிணவறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான சந்தேக நபர்களைக் கைது செய்வதற்காக மதவாச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கம்பளையில் விளையாட்டுப் போட்டி

(கம்பளை நிருபர்)

கம்பளை குடமாக்க பொதுநல குழுவினால் இரண்டாவது முறை பொங்கல் விழாவை முன்னிட்டு நடைபெறவுள்ள மாபெரும் விளையாட்டுப் போட்டி விழா நாளை திங்கட்கிழமை (13) காலை 7.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை கம்பளை வீகுலாவத்தை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. விளையாட்டுப் போட்டிகளின் விபரம் வருமாறு: சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கான பல போட்டிகள் நடைபெறவுள்ளன.

இவ் விளையாட்டுப் போட்டிகளில் முதலாம்,இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற போட்டியாளர்களுக்குப் பல பரிசுத் தொகைகள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் ஆண்களுக்கான எட்டு பேர் கொண்ட மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியும் நடைபெறவுள்ளது. அதில் வெற்றி பெறும் அணிக்குப் பணம் பரிசும் வெற்றி கேடயங்களும் வழங்கப்படும்.

# புதுடில்லி பாரதிய திவாஸ் மாநாட்டில் இ.தொ.கா தலைவர்

புதுடில்லியில் நடைபெற்ற 2025 ஆண்டிற்கான 18வது பிரவாசி பாரதிய திவாஸ் மாநாட்டில் ,லங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் செந்தில் தொண்டமான் கலந்துக் கொண்டார்.



இந்தியாவை பூர்வீகமாக கொண்ட தொழில் வல்லுனர்கள்,அரசியல் தலைவர்கள்,விஞ்ஞானிகள் என பல முக்கியஸ்தர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வின் போது இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திரமோடி, வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர், ஒடிசா முதல்வர் மோகன் சரண் மாச்சி, ஒடிசா துணை முதல்வர் கனக் வர்தன் சிங் தியோ, மின் மற்றும் எரிசக்தி அமைச்சர் ராஜ்குமார் சிங், ஆகியோரை செந்தில் தொண்டமான் மரியாதை நிமித்தமாக சந்தித்துள்ளனர்.

இதன்போது இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர டாக்டர் எஸ். ஜெய்சங்கர் செந்தில் தொண்டமானுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

# ‘கிளீன் ஸ்ரீலங்கா’ மன்னார் மாவட்ட அதிகாரிகளுக்குத் தெளிவுபடுத்தல்



(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்ட அரச அதிகாரிகளுக்கான “தூய்மையான இலங்கை”(Clean Sri Lanka) தொடர்பில் தெளிவூட்டல் கருத்தரங்கு வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது “ஒரு செழிப்பான தேசம் ஒரு அழகான வாழ்க்கை” என்ற ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கு அமைய ஜனாதிபதி செயலகத்தின் உதவி செயலாளர் சாராதாஞ்சலி மனோகரன் தெளிவுபடுத்தல் கருத்துரைகளை வழங்கினார். அரச பணியினை உத்தியோகஸ்தர்கள் திறம்பட மேற்கொள்ள வேண்டும் எனவும் அனைத்துத் துறைகளும் சமூகம்(Socially), சுற்றுச்சூழல் (Environmentally), நெறிமுறை(நுவாஉையடடல), சார்ந்து தங்கள் பணிகளைத் திறம்பட ஆற்றி மக்களின் வாழ்வில் மகிழ்ச்சியை ஏற்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

மேலும் அரசாங்கத்தின் புதிய எண்ணக்கருக்களான வறுமையை ஒழித்தல், டிஜிற்றல் ஸ்ரீலங்கா, கிளீன் ஸ்ரீலங்கா ஆகிய எண்ணக் கருவை எவ்வாறு செயற்படுத்துவது தொடர்பிலும் தெளிவுபடுத்தப்பட்டது. இதன்போது மாவட்ட உதவி செயலாளர்கள்,திணைக்கள பதவி நிலை உத்தியோகஸ்தர்கள், பொலிஸார்,பிரதேச செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# நுண்நிதிக் கடன் வலையில் 24 இலட்சம் பெண்கள்








ஏ.எச்.ஏ. ஹுஸைன்



இலங்கையில் கிராமப்புறப் பெண்களின் உயிரைப் பறிக்கும் நுண்கடன் திட்டம் ஏற்படுத்திய அழிவின் அளவு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் சமீபத்திய ஆண்டுகளில் நுண் நிதிக் கடன் வலையில் சிக்குண்டுள்ள 24 இலட்சம் பெண்களில் 200 பேர் தங்களது உயிர்களை மாய்த்துக் கொண்டுள்ளார்கள் என தேசிய மகளிர் ஒன்றியத்தின் தலைவி ஹாஷினி சில்வா தெரிவித்துள்ளார்.

இதுபற்றி தேசிய மகளிர் ஒன்றியத் தின் தலைவி ஹாஷினி மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் 28 இலட்சம் பேர் நுண்நிதிக் கடன் பெறுகின்றனர். அவர்க ளில் 24 இலட்சம் பேர் பெண்களாகும்.

அவர்களுக்கு நுண் நிதி நிறுவன ங்கள் 38 தொடக்கம் 40 சதவீதம் வரை அதிக வட்டிக்குக் கடன்களை வழங்கு கின்றன.

ஆயினும், நுண் நிதி நிறுவனங்க ளிடமிருந்து அதிக வட்டிக்குப் பெற்ற



கடன்களை மீளச் செலுத்த முடியாத நிலையில் பெண்கள் விரக்தியடை ந்துள்ளனர். சில பெண்கள் நிதி வழங் கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் சிலரால் பாலியல் பலாத்காரத்திற்கும் ஆளாகின்றனர்.

இதன் விளைவாக, குடும்பங்களுக்கி டையில் முரண்பாடுகள் வளர்ந்துள்ளன.

நுண் நிதிக் கடன் சுமை மற்றும் அதன் பின் விளைகள் என்பன வற்றால் பல குடும்பங்களின் பிள் ளைகள் ஆதரவற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள். சில பெண்கள் தங்களது வாழ்விடங்களை விட்டும் நாட்டை விட்டும் வெளியேறத் தூ ண்டப்பட்டுள்ளார்கள் என்றும் ஹாஷினி தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இலங்கையில் கட்டுமீறிப் போயுள்ள நுண் நிதி நிறுவனங்களின் நடவடிக்கைகள் குறித்து ஐநா அமைப்பும் முன்னர் ஒருபோது கரிசனை வெளியிட்டிருந்தது.

ஐ நா அமைப்பின் விசேட பிரதிநிதியால் வெளியிடப்பட்டிருந்த, இலங்கையில் இடம்பெறும் நுண் நிதி சம்பந்தமான கரிசனையில் சில விடயங்கள் சிலாகிக்கப்பட்டிருந்தது.

எந்தவொரு ஆய்வுக்கும் உட்படுத்தப்படாத நிதி நிறுவனங்களிடம் கடன் பெற்று வட்டி செலுத்த முடியாமல் 200ற்கும் மேற்பட்ட இலங்கைப் பெண்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக அவர் தெரிவித்திருந்தார்.

“நுண் நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் கடனுக்கு அதிக வட்டி விகிதங்கள் வசூலிக்கப்படுவதால் பல பெண்கள் கடனுக்கு இரையாகிறார்கள். இதன் விளைவாக, கடந்த சில ஆண்டுகளில் 200 இற்கும் மேற்பட்ட பெண்கள் தற்கொலை செய்து கொண்டதாக சமகால அடிமைத்தனம் தொடர்பான ஐ.நா.வின் சிறப்பு அறிக் கையாளர் டொமோயா ஒபோகடா சில காலங்களுக்கு முன்னர் கொழும்பில் ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார்.

மனித உரிமைகள் ஆணைக்குழு, சிவில் சமூக அமைப்புகள், தொழிற்சங்கங்கள், மனித உரிமைப் பாதுகாவலர்கள், கல்வியாளர்கள்,




புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர் சுரண்டலுக்கு ஆளானவர்கள் ஆகியோரை அவர் சந்தித்ததாக, ஐ.நாவின் இலங் கைக்கான தூதரகம் தெரிவித்திருந்தது.

“சில வங்கிகளுக்கு சட்டப்பூர்வ உரிமை கூட இல்லை, சில நிதி நிறுவனங்கள் கடந்த காலங்களில் எந்த கட்டுப்பாடும் இல்லாமல் நாடு முழுவதும் அதிக வட்டிக்கு வழங்கிய நுண்கடன் காரணமாக, இலட்சக்கணக்கான பெண்கள் அழுத்தத்தில் உள்ளனர். அத்தகைய பெண்களுக்கு விரைவான நிவாரணம் அளிக்கப்பட வேண்டும்.

இந்த சுரண்டல் நுண்கடன் நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் இதுவரையில் எந்தவொரு பயனுள்ள அல்லது சரியான நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை, நாடாளாவிய பெண்ணியவாதிகளின் அமைப்புக்களும், ஆர்வக் குழுக்களும், பெண்ணிய ஆர்வலர்களும் சேர்ந்து இலங்கைப் பெண்கள் முகம் கொடுக்கும் நெருக்கடிகளையிட்டு சமீப சில காலங்களுக்கு முன்னர் கரிசனை வெளியிட்டிருந்தனர்.

அதில் அவர்கள் குறிப்பிட்டிருந்ததாவது, இலங்கையின் பொருளாதாரம் பெண்களின் உழைப் பிலேயே பெருமளவு தங்கியுள்ளது. ஆனால் ஆலோசனை வழங்கும் அமைப்புகளிலும், தீர்மானம் எடுக்கும் சந்தர்ப்பங்களிலும், செயல்முறை களிலும் பெண்களின் நேரடி ஈடுபாடு கருத்திற்கொள்ளப்படுவதில்லை என்று கூறும் அவர்களது அறிக்கை மேலும் பல விடயங்களைச் சுட்டிக்காட்டி ஆலோச னைகளை முன்வைத்திருந்தது.

இலங்கையில் எதிர்கொள்ளப்படும் எந்த நெருக்கடியாக இருந்தாலும், பெண்களே அதனை முன்நின்று முகம் கொடுத்து வருகின்றனர் என்று சுட்டிக் காட்டும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படடிருந்ததாவது, இலங்கையின் பொருளாதாரம் பெண் களின் உழைப்பிலேயே பெருமளவு தங்கி யுள்ளது. அதேசமயம், இலங்கையின் பொருளாதாரக் கொள்கையானது பெண்களின் உழைப்பில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் பெண்களின் பௌதீக நிலைமைகள், வளர்ச்சி, அபிலாஷைகள் சமூகத்தில் அவர்களது நிலை ஆகிய அனைத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பெண்களின் உழைப்பைச் சுரண்டிச் சேகரித்த செல்வம் வீணடிக்கப்பட்டு வந்துள்ளது. இந்தச் சுரண்டலுக்கு எந்தவித பொறுப்புக்கூறலும் இல்லை. மாறாக, பொருளாதார நெருக்கடியின் சுமையை மீண்டும் மீண்டும் பெண்களே சுமக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த பொருளாதார நெருக்கடி, குடும்ப மட்டத்தில் அதிக பாதிப்பைச் செலுத்து வதால் பொருளாதார வீழ்ச்சியின் சுமை எப்போதும் பெண்கள் மீதே விழுகிறது.

பெண்கள் வருமானம் ஈட்டுதல் மற்றும் தங்கள் வீட்டில் ஊதியமற்ற பராமரிப்பு வேலை ஆகிய இரட்டைச் சுமைகளை எதிர்கொள்கின்றனர்.

பெண்கள் தமது பிள்ளைகளின் நலனை உறுதிப்படுத்துவதில் சிரமப்படுகி றார்கள். இதற்கு கல்விக்கான தடங்கல், வீட்டு வன்முறை தனித்தாய்மார்களின் பராமரிப்புக் கொடுப்பனவுகளுக்கான செயற்திறனற்ற நியாயமற்ற முறை மைகள் என்பன காரணங்களாகும்.

பொருளாதார வீழ்ச்சி, நிச்சயமற்ற தன்மை, பசி பட்டினி, அடிப்படை வசதிகள் இல்லாமை பற்றிய ஏமாற்றங்கள் அச்சங்கள் என்பவை வீட்டிற்குள்ளேயே வன்முறையாக வெடித்து, பெண்களையும் பிள்ளைகளையும் பாதிக்கின்றன.

குடும்பத்தின் மீதான பலதரப்பட்ட அழுத்தங்களின் விளைவாக குடும்ப வன்முறை அதிகரித்து வருகிறது. ஏற்கெனவே வன்முறையில் வாழும் பெண்களுக்கு இது இன்னும் கடினமான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.


பெருந்தோட் டம், ஆடை உற்பத்தி ஆகிய துறைகளில் பணிபுரிதல் வெளிநாடுகளில் வீட்டு வேலைத் தொழிலாளர்களாக வேலை செய்தல் என்பவ னற்றால் பெண்கள், அதிக அந்நியச் செலாவ ணியை நாட்டுக்குள் கொண்டு வருபவர்களாக உள்ளனர்.

இதனூடாக பெண்கள், உழைக்கும் மக்கள் விளிம்பு நிலைக்குள்ளா க்கப்பட்ட நிலையில் வாழும் சமூகங்கள் எதிர்கொள்ளும் அழுத்தமான துன்பங்கள் உள்வாங்கப்பட்டு அதற்குத் தீர்வுகள் முன்வைக்கப்பட வேண்டும்.

ஆலோசனை வழங்கும் அமைப்புகளிலும், செயல்முறைகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் காணப்பட வேண்டியது அவசியமாகும்.

நுண்கடன் அல்லது நுண்கடன் சேவைகளில் ஈடுபட்டுள்ள சமூகங்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் காரணமாக, கணிசமான எண்ணிக்கையிலான மக்கள், முக்கியமாகப் பெண்கள், தங்கள் குறைந்தபட்ச நல்வாழ்வுத் தரத்தை பராமரிக்கப் போராடுகின்றனர்.

பல சந்தர்ப்பங்களில், பல்வேறு மனித உரிமைகளும் ஆபத்தில் உள்ளன. நுண்நிதி அல்லது நுண்கடன் சேவைகளை இலகுவாக அணுகுவதன் மூலம் தமது வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப எண்ணிய மக்கள் தமது சொத்துக்களை இழப்பதுடன் மனித கௌரவத்தையும் இழந்தவர்களாக காணப்படுகின்றனர்.






## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில்

# என் மீது வீண் பழி சுமத்தாதீர்கள்




(வெல்லாவெளி நிருபர்)

ஈஸ்டர் குண்டுத்தாக்குதலில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சம்பந்தப்படவில்லை. நான் ஒரு ஆயுதப் போராட்டத்தில் இருந்தவன் என்பதற்காக என் மீது வீண் பழி சுமத்தி என்னுடைய பெயரை அசிங்கப்படுத்தாதீர்கள். இவ்வாறு முன்னாள் இராஜாங்க அமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற வழக்கொன்றிற்காக களுவாஞ்சிகுடி நீதவான் நீதிமன்றிற்கு வெள்ளிக்கிழமை(10) வருகை தந்திருந்த சிவனேசதுரை சந்திரகாந்தனிடம் ஊடகவியலாளர் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது முன்னாள் இராஜாங்க அமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான, சிவனேசதுரை சந்திரகாந்தன் மேலும் தெரிவிக்கையில்.

ஈஸ்டர் குண்டு தாக்குதல் தொடர்பில் பிள்ளையானுக்கோ ஏனையவருக்கோ சம்பந்தமில்லாத விடயமெனத் தெளிவாக கோடிட்டு காட்டிருந்தது.

இருந்த போதிலும் புதிய அரசாங்கம் அதனை குற்றப் புலனாய்வுப் திணைக்களத்திடம் விசாரணைக்கு கொடுத்துள்ளது. நான் அந்த விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கி இருந்தேன் .வாக்குமூலம் வழங்கியிருக்கிறேன். அந்த வாக்குமூலத்தை வைத்து அவர்கள் என்ன செய்வார்கள் என்பது எனக்கு தெரியாது.

இந்த நிலையில் நான் நாட்டிலிருந்து தப்பிச் செல்வேன் என்ற அடிப்படையில் எனது கடவுச்சீட்டைகூட தடை செய்து வைத்திருக்கின்றார்கள்.

நான் ஆயுதப் போராட்டத்தில் இருந்தேன், என்பதற்காக என் மீது கறைசாற்றுவதற்காக என்னுடைய பெயரை, அசிங்கப்படுத்துவதற்காக எனது அரசியலை இல்லாமல் செய்வதற்காக, அரசாங்கமும் இன்னும் சிலரும் செயற்பட்டார்கள்.

குறிப்பாக தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய சாணக்கியன், சிறிநேசன் மற்றும் சிறிநாத் ஆகியோர் இவ்விடயம் பற்றி பேசினார்கள் நான் பொறுப்போடு மக்களுக்கு கூறுகின்றேன் என்றார்.

## கிளீன் ஸ்ரீலங்கா திட்டம்; நடைமுறைப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வு

(ஏ.எச். ஹஸ்பர் )

கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியானது திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யு. ஜி. எம். ஹேமந்த குமார அவர்களின் தலைமையில் நேற்று (10) மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.





இவ்விழிப்புணர்வு நிகழ்வில் ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவி செயலாளர் ரி.என். அமோன் கலந்து கொண்டு கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் நோக்கம் மற்றும் மாற்றங்களை உருவாக்குதல் தொடர்பாக விளக்கமளித்தார்.

மேலும் சமூகம், சுற்றுச்சூழல் மற்றும் நெறிமுறை ரீதியாக கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் விளக்கமும், அரசாங்கத்தின் புதிய எண்ணக்கருக்களான வறுமையை ஒழித்தல், டிஜிற்றல் ஸ்ரீலங்கா, கிளீன் ஸ்ரீலங்கா ஆகிய எண்ணக்கருக்களை எவ்வாறு செயற்படுத்தல் தொடர்பிலும் பல விடயங்கள் தெளிவூட்டப்பட்டன.

அரசாங்க உத்தியோகத்தர்களினால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு தக்க பதிலும் வழங்கப்பட்டது. கிளீன் ஸ்ரீலங்கா தொடர்பான காணொளியும் இதன்போது காட்சிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், மாவட்ட பதவி நிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## 31 மில்லியன் ரூபாய் செலவில்

# சம்மாந்துறையில் சிறுவர் பூங்கா திறப்பு

(கே எ ஹமீட்)

சிறுவர்களின் உள வளத்தை செழிப்புறச் செய்வதற்கும்

பொழுதுபோக்கு மேம்பாட்டுக்காகவும் சம்மாந்துறை பிரதேச சபையினால் சுமார் 31 மில்லியன் ரூபாய் செலவில் ஆலையடி பொதுச் சந்தையில் அமைக்கப்பட்ட சிறுவர் பொழுதுபோக்கு பூங்காவை சிறுவர்களின் பாவனைக்காக கையளிக்கும் நிகழ்வு வியாழக்கிழமை நடைபெற்றது.





சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். எல்.ஏ.கமல் நெத்மினி பிரதம அதிதியாக கலந்து கொண்டார். அம்பாறை மாவட்டத்தில் முதல் முறையாக மூடிய அரங்கில் அமையப்பெற்ற இப்பூங்காவில் புகையிரதம் மற்றும் கார் சவாரி உள்வாங்கப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும். இத்திட்டத்திற்கு உலக வங்கி நிதி ஒதுக்கீட்டின் உள்ளூர் அபிவிருத்தி செயல் திட்டத்தின் கீழ் 31 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் போது பசுமை பூங்காவாக மிளிரச் செய்யும் வகையில் அதிதிகளால் மர நடுகையும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தரும் சட்டத்தரணியுமான றிஸாட் எம் புஹாரி, கட்டிட திணைக் களத்தின் கல்முனை பிராந்திய பிரதம பொறியியலாளர் பி. அச்சுதன், சம்மாந்துறை பெரிய பள்ளிவாசல் தலைவரும் முன்னாள் அரசாங்க அதிபருமான ஐ.எம் ஹனிபா, மஜ்லிஸ் அஸ்ஸூரா நிர்வாக செயலாளர் எம்.எல். எச்.ஜௌபர், ஆய்வு உத்தியோகத்தர், சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தனர்.

# வருடாந்த ஒன்றுகூடலும் சேவைநலன் பாராட்டும்







( செல்லையா பேரின்பராசா )

கல்முனை வடக்கு பிரதேச செயலக நலன்புரிச் சங்கம் ஏற்பாடு செய்து நடாத்திய வருடாந்த ஒன்றுகூடலும் சேவைநலன் பாராட்டு விழாவும் தம்பட்டை சுவாட் பயிற்சி நிலையத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரீ.ஜே.அதிசயராஜ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இவ்வொன்று கூடலில் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளராகப் பணியாற்றி, ஓய்வு பெற்ற க.இதயராசா பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற திருமதி விமலா பிரபாகரன் ஆகியோர் கவி வாழ்த்துமடல் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் இப் பிரதேச செயலக அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறவுகள் பங்குபற்றிய கலை நிகழ்வுகள் வினோத விளையாட்டுக்கள் என்பன இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## மோட்டார் சைக்கிள் ஆட்டோ மோதி விபத்து

### மூவர் படுகாயம்

( ஆரையம்பதி நிருபர் )

ஆரையம்பதி செல்வாநகர் மத்தி பிரதான வீதியில் முச்சக்கர வண்டியொன்றும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்த நிலையில் ஆரையம்பதி பிரதேச வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயமடைந்த அதேவேளை, முச்சக்கர வண்டி செலுத்துனரும் படுகாயமடைந்தனர். இந்நிலையில் இவர்கள் மூவரும் ஆரையம்பதி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி போக்குவரத்து பொலிசார் முன்னெடுத்து வருகின்றனர்.







தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நுண்கலைபிரிவில் நடனம் பயிலும் மாணவர்களுக்கு லலித்த கலாவேதி டிப்ளோமோ NVQ தரம் 6 கற்கை நெறிகள் போதிக்கப்பட்டு வருகின்றன. பரதநாட்டியம் பயிலும் மாணவர்களுக்கான சதங்கை அணிவிக்கும் நிகழ்வும் சரஸ்வதி பூஜையும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வளாகத்தில் நடைபெற்றது. இதன் போது பிரதம அதிதியாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவரும் பணிப்பாளர் நாயகமுமான சட்டத்தரணி சிந்தக்க ஹெவா பத்திரன கலந்துக்கொண்டார்.

(படங்கள் ; சஞ்சீவ சமரரத்ன)

# சர்வதேசத்தின் கைப்பொம்மையாக அநுர அரசாங்கம் மாறும் அச்சம்!

## எச்சரிக்கிறார் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன்!





கனூஷியா புஷ்பகுமார்

**ஜேவிபி தலைமையிலான அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கம் மனோரீதியாக வன்முறையைக் கைவிட்டுள்ளார்கள் என்பதை, தான் நம்பவில்லை எனவும் செயல் ரீதியாக உடைமாற்றம் செய்துள்ளதாக முன்னாள் இராஜாங்க அமைச்சரும், வடமாகாண முன்னாள் ஆளுநருமான கலாநிதி சுரேன் ராகவன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

**“ஒருவன்” செய்தி சேவைக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றின் போதே அவர் இவ்விடயத்தை வலியுறுத்தினார்.**

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியானது பெயர் மாற்றம் செய்து அதிகளவான மக்கள் ஆணையைப் பெற்றாலும் கூட அது ஒரு பெயர் மாற்றம் மாத்திரம் தானா? என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒரு காலத்தில் நாடாளுமன்றத்தை ஒரு இரவில் எரித்து கைப்பற்றுவோம் எனக் கூறிய கட்சி தான் இந்த ஜேவிபி எனவும் அநுர அரசாங்கம் சர்வதேசத்தின் கைப்பொம்மையாக மாறிவிடுமா என்ற அச்சம் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜேவிபி எனப்படும் தேசிய மக்கள் சக்தி கட்சியானது தனது திட்டங்களிலும், கொள்கைகளை கடைப்பிடிப்பதிலும் உறுதியாக இல்லை என்பது தற்போது தெளிவாகிறது.

சுமார் மூன்று ஆண்டுகளாக நாடு பல நெருக்கடிகளையும் சவால்களையும் தொடர்ச்சியாக சந்தித்து வந்த நிலையில் நாட்டிற்கு உரிய ஒரு அஸ்திவாரம், அடித்தளம் இப்போது வரை சரியாக அமையவில்லை.

சுமார் 76 வருடங்களாக ஊழல்வாதிகள் மாறி மாறி ஆட்சியமைத்தமையே அதற்கான காரணமாகும்.

ஒரு வகையில் இலங்கை அபிவிருத்தி அடைந்திருந்தாலும் கூட அந்த அபிவிருத்திகளின் பின்னணியில் பல ஊழல் மோசடிகள் மறைந்து கிடக்கின்றன. இவ்வாறான காரணங்கள் தான் காலிமுகத்திடல் போராட்டத்திற்கு வித்திட்டது.

மாபெரும் மக்கள் போராட்டமாக அது வளர்ந்தது. அன்று எப்படி நாட்டு மக்கள் போராட்டக் களத்தில் ஒன்றிணைந்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒரு ஜனாதிபதியை ஆட்சிக் கதிரையில் இருந்து துரத்தினார்களோ அதே மக்கள் சக்தி தான் இன்று பல ஆண்டுகளாக ஆயுத இயக்கமாக இருந்த ஒரு இயக்கத்துடன் சார்ந்த கட்சியை அதே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி கதிரையில் அமர்த்தியது.

ஆக, மக்கள் அதிகாரம் என்பது தற்போது நாட்டில் தலைதூக்கியுள்ளது.

2024ஆம் ஆண்டு இலங்கை மக்களின் மாற்றத்திற்கு வித்திட்டது. அந்த விதை 2025ஆம் ஆண்டில் வேரூன்றிய விருட்சமாகுமா? அல்லது வாடிவிடுமா? என்ற கேள்விகள் அரசாங்கத்திற்கு எதிரான விமர்சனமாகவே முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அந்த விமர்சனங்களுக்கு பதிலளிக்கும் வகையில் அரசாங்கமும் விமர்சிப்பவர்களை விமர்சித்து எதிர்க்கட்சிகளைப் போல குற்றம் சுமத்தி வருகிறது.

தேர்தல் மேடைகளில் வழங்கும் அனைத்து வாக்குறுதிகளையும் ஆட்சிக் கதிரையில் அமர்ந்து நிறைவேற்ற முடியுமா? அது நடைமுறைக்கு சாத்தியமாக அமையுமா? என்பது தொடர்பில் கலாநிதி சுரேன் ராகவனிடம் கேள்வி எழுப்பினோம்.

அதற்கு அவர், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் இருதயத்தில் இந்த நாட்டுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற அவா உள்ளதை தான் நம்புவதாக தெரிவித்தார்.

**நாட்டு மக்கள் போராட்டக் களத்தில் ஒன்றி ணைந்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒரு ஜனாதிபதியை ஆட்சிக் கதிரையில் இருந்து துரத்தினார்களோ அதே மக்கள் சக்தி தான் இன்று பல ஆண்டு களாக ஆயுத இயக்கமாக இருந்த ஒரு இயக்கத்துடன் சார்ந்த கட்சியை அதே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி கதிரையில் அமர்த்தியது.**

சாதாரண ஒரு மனிதராக இருந்த ஒருவர் ஜனாதிபதியாக உள்ளமை மகிழ்ச்சி. இருப்பினும் அவரது ஆட்சியின் ஆரம்பத்தில் விட்ட பிழையை மறுக்க முடியாது. ஒரு அரசாங்கத்தின் முதலாவது நியமனம் என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். எனினும் அவருடைய அந்த முதல் நியமனத்தை தவறாக தான் பார்க்கிறேன் ஏனெனில் அவருடைய அந்த நியமனத்தில் அரசியல் ஞானம் இல்லை என கலாநிதி சுரேன் ராகவன் சுட்டிக்காட்டினார்.

இதன் மூலம் அனுபவின்மை வெளிப்பட்டது மாத்திரமன்றி சபாநாயகர் விடயத்திலும் அரசாங்கம் விட்ட பிழை மாறாத கறையாக படியும் என அவர் சுட்டிக்காட்டினார்.

அநுர அரசாங்கத்தின் ஒரு கறுப்பு புள்ளியாக சபாநாயகர் அசோக ரன்வலவின் இராஜினாமா பார்க்கப்படுகிறது. போலியான கல்வித் தகைமைகளை மக்களுக்கு வெளிக்காட்டியது மட்டுமன்றி அதனை நிரூபிப்பதாக வாக்குறுதியளித்து இன்று வரையில் அதை நிரூபிக்க முன்வரவில்லை. ஆக, இவ்விடயம் அநுர அரசாங்கத்திற்கு அரசியல் ஞானம் இல்லை என்பதை வெளிப்படையாக எடுத்துக்காட்டுகிறது.

இவ்வாறான பின்னணியில், இலங்கையின் 76 வருட கால ஆட்சியமைப்பை மாற்றியமைக்கும் விதத்தில் வரலாற்றில் இடம்பிடித்த அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றியானது உள்நாட்டில் மாத்திரமன்றி வெளிநாடுகளிலும் அதிக அவதானத்திற்கு உள்ளான ஒரு விடயம் ஆகும். தேர்தல் திகதி அறிவிக்கப்படுவதற்கு முன்னர் இருந்தே ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டு, அதற்காக பல வெளிநாடுகளிற்கு சென்று பிரசாரத்தை மேற்கொண்ட தேர்தல் வேட்பாளராக அநுரகுமார திஸாநாயக்க சர்வதேசத்தில் அவதானிக்கப்பட்டார்.

ஆகவே, அநுர சார்ந்த தேசிய மக்கள் சக்தி ஆட்சி பீடம் ஏறிய பின் அவர்கள் மீதான சர்வதேசத்தின் அவதானம் இன்னமும் மும்முரமாகியது. அநுரவின் கொள்ளை விளக்க உரையில் ஆரம்பித்து அவருடைய முதல் சர்வதேச பயணம் வரையில் அதிக அவதானங்கள் அநுர மீது செலுத்தப்பட்டன. அதில் மிக முக்கியமான இரு நாடுகளாக இந்தியா, சீனா ஆகியவை காணப்பட்டன.

தேசிய மக்கள் சக்தியின் ஆரம்பமான ஜேவிபியின் வரலாறு இந்தியாவுடன் சார்பானதாக எப்போதும் இருந்ததில்லை. எனினும், சீன கம்யூனிஸ்ட் கொள்கைகளை கையாண்டு வந்த ஜேவிபியின் நவீன கட்சியான தேசிய மக்கள் சக்தி தலைவரின் முதலாவது சர்வதேச பயணம் இந்தியாவுடன் அமைந்திருந்தமை மேலும் ஒரு குழப்ப நிலையை உருவாக்கியது.

அண்மையில் அரச ஊடகங்களை சீன ஊடகக் குழுமத்துடன் ஒப்பந்தம் செய்வதற்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டதையடுத்து, இந்த குழப்பம் இன்னமும் மேலோங்கியது.

தற்போதைய ஜனாதிபதிக்கும் அமெரிக்காவுக்கும் நல்ல நட்பு உள்ளதாகவும், அநுர அரசாங்கம் அமெரிக்காவிடம் ஆலோசனை கேட்க தயார் என்பதும் தெளிவாகிறது என சுரேன் ராகவன் கூறினார். ஆக, இதன் விளைவாக ஜேவிபி தலைமையிலான அரசாங்கம் சர்வதேசத்தின் கைப்பொம்மையாக மாறிவிடுமோ என்ற அச்சம் உள்ளதாகவும் அவர் பகிரங்கப்படுத்தினார்.

தாம் எந்தப் பாதையிலே பயணிக்கின்றோம் என்பதில் திட்டமும் நோக்கமும் இல்லாத ஒருவரால் விபத்து மாத்திரமே ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

கட்டாயமாக அநுரவின் அடுத்த கட்ட நகர்வு இந்தியாவுடன் இருக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், தற்போதைய அரசாங்கம் தமிழர்களின் பிரச்சினையை பேசத் தயங்குவது தவறு எனவும் தமிழர்களுக்கென தற்போது இருக்கும் உரிமைகளையும் அரசாங்கம் பறிக்குமாக இருந்தால் வன்முறையற்ற அரசியலின் எதிர்ப்பை செய்வோம் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் வலியுறுத்தினார்.

அநுரகுமார திஸாநாயக்க டில்லிக்கு சென்றிருந்த போதும் கூட தமிழ்நாட்டில் சுமார் 40 வருடங்களாக அகதிகளாக வேதனைப்பட்டு வருபவர்களை பார்க்க செல்லாதமை தொடர்பில் சுரேன் ராகவன் குற்றம் சுமத்தினார்.

இந்த புதிய அரசியல் வாய்ப்பின் அரசியல் மொழியில் நாம் கவனம் செலுத்த வேண்டும் எனவும், இனி நாங்கள் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் சர்வதேசத்துக்கு எங்களை உரக்க கூறக் கூடிய ஒரு அரசியல் பாதையை கண்டுபிடிக்க வேண்டும் என அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் தனித்தனியாக செல்லாமல் ஒரு குழுவாக இணைய வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார்.

தமிழர்களுடைய பிரச்சினைகளை சர்வதேசத்துக்கு கொண்டு செல்ல தமிழ் அரசியல்வாதிகளுக்கு ஒரு பாரிய பொறுப்பு உண்டு. எனினும், தற்போதைய தமிழ் அரசியல்வாதிகள் அதனை சரியாக செய்கின்றார்களா? என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு விளக்கமளித்தார்.

இதனை மேலும் விளக்கிய அவர்,



தமிழர் அரசியல் சாதாரண அரசியல் அல்ல. வடக்கு கிழக்கு மாகாணத்தில் மட்டும் தமிழர்கள் மத்தியில் பதிவு செய்யப்பட்ட 40 கட்சிகளுக்கு மேல் காணப்படுகின்றன. தங்களை வெற்றி கொள்வதற்கான செயற்பாடுகளை அல்லாமல் ஒன்றாக இணைந்து தமிழர் பிரச்சினையில் தலையிட வேண்டும்.’ என அவர் விளக்கமளித்தார்.

எவ்வாறாயினும், இலங்கைத்தீவு குறிப்பிட்ட சில வருடங்களாகவே பல சவால் களையும், நெருக்கடிகளையும் சந்தித்து வந்தது. பல நெருக்கடிகளால் தவித்த மக்கள் ஆணைக்கு நிச்சயமாக அநுர தரப்பு உண்மையாக இருக்க வேண்டும்.

ஐந்து வருட ஆட்சியை நூறு நாட்களுக்குள் நடத்தி முடிக்க முடியாது என்பது ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றாக இருப்பினும் நிறை வேற்று அதிகாரத்தையும், அறுதிப் பெரும்பான்மையையும் தன்னகத்தே வைத்துக் கொண்டு சிறுபிள்ளை போல விமர்சனம் செய்து கொண்டும், எதிர்க்கட்சிகளைப் போல கடந்த அரசாங்கங்கள் மீது குற்றம் சுமத்திக் கொண்டும் இருப்பது என்பது நடைமுறைக்கு சாத்தியமல்ல.

இதன்மூலம் அநுரகுமார தலைமை யிலான அரசாங்கத்திற்கு அரசியல் ஞானமும், தெளிவும் இல்லை என்பது தெளிவாகிறது. ஆக, “அனுபவமற்றவர் கள்” என்ற பெயரை நீக்க அநுர தரப்பு முன்வரும் என்று எதிர்ப்பார்க்கிறோம்.

## ஜேவிபி மனோரீதியாக வன்முறையைக் கைவிடவில்லை





அகல்யா டேவிட்

# இலங்கையில் இன்றைய சவால்களும் சாதனைகளும்

பொதுமக்களின் வினைத்திறனான பங்களிப்புடன் மாத்திரமே தூய்மையான இலங்கை வேலைத்திட்டம் வெற்றியடைய முடியும் என ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து “தூய்மையான இலங்கை” வேலைத்திட்டம் 2025 ஜனவரி 1ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற் சொன்ன கருத்தை வலியுறுத்தியிருந்தார்

சகல அரச நிறுவனங்களிலும் “க்ளீன் ஸ்ரீலங்கா” (தூய்மையான இலங்கை) தேசிய வேலைத்திட்டத்துடன் உத்தியோகபூர்வ செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

அனைத்து பிரிவினைகளையும் முடிவுக்கு கொண்டு வர நாம் தயாராக உள்ளோம். நாம் ஒன்றாக இலங்கையில் பிறந்தவர்கள் என்ற வகையில் இந்த நாட்டை கட்டியெழுப்ப நாம் ஒன்றிணைய தயாராக உள்ளோம். எனவே, இந்தக் “கிளீன் ஸ்ரீலங்கா” வேலைத்திட்டத்தை பொதுமக்களின் செயலூக்கமான பங்களிப்புடன் மட்டுமே வெற்றிகொள்ள முடியும். இல்லையெனில், அரசாங்கத்தினாலும் அரசாங்கம் இயற்றும் சட்டங்களால், அரசால் நியமிக்கப்படும் அதிகாரிகளால் மாத்திரம் இதனை முழுமைப்படுத்த முடியாது. இதற்காக அரசாங்க பொறிமுறை தேவை.



அதற்காக பதினெட்டு பேர் கொண்ட ஜனாதிபதி செயலணி ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளது.

எமது நாட்டுக்கும் எமது பிரஜைகளுக்கும் ஒரு புதிய விழுமியக் கட்டமைப்பு தேவை “க்ளீன் சிறீலங்கா” நிகழ்ச்சித் திட்டத்தை பொதுமக்களின் செயலூக்கமான பங்களிப்புடன் மட்டுமே வெற்றிகொள்ள முடியும். ஒவ்வொரு பிரஜையும் தனக்கு ஒதுக்கப்பட்ட கடமைக்கு பொறுப்புக் கூற வேண்டும்.

இந்த நோக்கத்திற்காக க்ளீன் ஸ்ரீலங்கா செயலகத்தை உருவாக்கவும் எதிர்பார்ப்பதோடு, கிராமம் வரை மக்களை ஒன்று திரட்டுவதற்காக “க்ளீன் ஸ்ரீலங்கா” சபைகளை உருவாக்கவும் எதிர்க்கின்றோம். இந்த திட்டம் நிறைவடையும் திட்டமல்ல. இது மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்படும் உலகின் புதிய நிலைமைகளுக்கு ஏற்ப மீண்டும் மீண்டும் தன்மை மாற்றிக் கொண்டு அரசை மாற்றியமைக்கும் ஒரு வேலைத்திட்டம். இது ஓரிரு வருட திட்டம் அல்ல. உலகம் வேகமாக மாறி வருகிறது. உலகம் பாரிய சாதனைகளை அடைந்து வருகிறது. சமூக மனப்பாங்குகள், புதிய பெறுமதிகள், புதிய மதிப்புக் கட்டமைப்புகள் தொடர்ந்து வளர்ந்து வருகின்றன.

அந்த விடயங்களையெல்லாம் உள்வாங்கிய புதிய இலங்கைத் தேசம் இந்த நாட்டில் கட்டியெழுப்பப்படுகிறது. குறிப்பாக இந்த முயற்சிக்காக தனியான நிதியமொன்றை நிறுவுகிறோம். இந்நாட்டுக் குடிமக்கள் அந்த நிதியத்திற்கு பங்களிக்கலாம். நிதியமைச்சினால் மேற்பார்வைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பணி நாம் கூட்டு முயற்சியுடன் வெற்றிகொள்ள வேண்டிய பணியாகும், அதற்காக அனைவரையும் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கிறேன். என்று கூறி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நாட்டுமக்களுக்கு அறைகூவல் விடுத்தார்.

இந்த க்ளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் ஓரம்சமாக சாலைப் பாதுகாப்பை மேம்படுத்தி சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக முச்சக்கரவண்டி, பஸ், உட்பட கனரக இலகு ரக வாகனங்கள் சகலவற்றின் நிலைமைகளும் பொலிஸாரினால் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள மேலதிக பாகங்களை அப்புறப்படுத்துமாறு அரசாங்கம் அறிவுறுத்தியதன் படி பொலிஸார் அந்த நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தனர்.

அழகின் பின்னால் ஆபத்தும் இருக்கின்றது .இதன் அடிப்படையில் வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள பல்வேறு சத்தங்களுடனான ஒலிபெருக்கி, தோரணை போன்ற மின் விளக்குகள், அழகான பொருட்கள், அதிக சத்தத்துடனான சைலன்ஸர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இலங்கையில் உள்ள பஸ்கள் முச்சக்கர வண்டிகள் உள்ளிட்ட வாகனங்களை அழகுபடுத்துவதற்கான மேலதிக பாகங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன.

தேவையற்ற அலங்காரங்கள், அதிக பாகங்கள், கவரும் ஒளி அமைப்புகள் ஆபத்துகளை உருவாக்குகின்றன என்று பொதுவாகக் கண்டறியப்பட்டுள்ளதாக பரவலான கருத்து நிலவுகிறது.

பார்வைக்கு இடையூறு செய்யும் ஸ்டிக்கர்கள், பேனர்கள், அலங்காரங்கள் அதிக விபத்துக்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றன. வீதியை மறைக்கின்ற அல்லது கண்ணாடியை மறைக்கின்ற அலங்காரப் பொருட்களால் சாரதியால் சரியாக வாகனத்தைச் செலுத்த முடியாமல் விபத்தில் முடிகின்ற சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆகவே அரசாங்கத்தின் இந்த முயற்சி தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது. ஒவ்வொரு உயிரின் பாதுகாப்பும் தேசத்திற்கு முக்கியமானதாகும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டிருக்கின்றார்.

வாகனத்தின் அலங்காரங்களை கட்டுப்படுத்துவதன் மூலம் கழிவுகளை குறைக்கவும் சுத்தமான தெருக்களை உருவாக்கவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

இதன் மூலம் பொருத்தமான வாகன முறைமைகளை வழங்குவதற்கும், சமுதாய விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கும், சட்ட நடவடிக்கைகள் மூலம் வாகனங்களை ஒழுங்குபடுத்துவதற்குமாக இச்செயன்முறை அமுல்படுத்தப்பட்டிருக்கின்றது.

இச் செயற்றிட்டத்தை அனேகமானோர் ஆதரித்தாலும் சிலர் மாற்றுக் கருத்துக்களையும் எதிர்ப்பையும் தெரிவித்து வருகின்றனர். இதன் அடிப்படையில் பொருளாதார சிரமங்களை சந்திப்பதாகவும் பண்பாட்டு அடையாளங்களை தாங்கள் இழப்பதாகவும் கருத்துக்கள் நிலவி வருகின்றன.




**தலைவலியைத் தரும் பயணங்களாக நமது போக்குவரத்து வசதிகள்**

இலங்கையின் பொதுப்போக்குவரத்தை நினைத்தாலே தலைவலி வரக் கூடிய நிலையில்தான் அவை உள்ளன என்று மனம் சலித்தக் கொள்கிறார் பதுளை மாவட்டம் ஹாலி எல பிரதேசத்தைச் சேர்ந்த பட்டதாரியான சௌந்தரராஜன் யதர்ஷனா.

பொதுப் போக்குவரத்துப் பற்றிய அவருடைய கசப்பான அனுபவத்தை இவ்வாறு விவரிக்கிறார், “வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள மிகை அலங்காரங்களையும் அதிகரித்த ஒலியையும் என்னுடைய சிறு பராயத்திலிருந்தே வெறுப்புக்குரிய ஒன்றாக உணர்ந்திருக்கிறேன்.

நீண்ட பயணங்கள் செய்கின்றபோது பேருந்தில் எங்களுக்கு தலைவலியாக இருக்கும். குழந்தைகளும் வயோதிபர்களும் நோயாளிகளும் இருப்பார்கள். ஆகவே அதிகரித்த ஒலியெழுப்பி பாடல்களை இசைத்துச் செல்வார்கள். பஸ்ஸில் பயணிக்கும் ஒவ்வொரு நிமிடமும் அலுப்பும் வெறுப்பும் மன உளைச்சலும் தரக் கூடியதாக இருக்கும்.

அலங்காரங்களைக் கொண்ட முச்சக்கர வண்டியிலோ பஸ்ஸிலோ ஏறி அமர்வதற்குப் பயமாகவே இருக்கும். அவை ஒரு கடத்தல் வாகனம் போல எனக்கு சிறு வயதில் தோன்றியிருக்கிறது.

அதிகமான தேவையில்லாத அலங்காரங்கள் எதற்கு என்று சிந்தித்திருக்கின்றேன். பேருந்து, முச்சக்கர வண்டி இதுபோன்று ஏனைய போக்குவரத்து வாகனங்களைச் செலுத்துவது ஒரு தொழில். தொழிலை தொழிலாக மட்டுமே பார்க்க வேண்டும் அவர்கள் கட்டணம் செலுத்திப் பயணம் செய்யும் பயணிகளை மறந்து தங்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப நடந்து கொள்கிறார்கள்.

பயணிகள் சௌகரியமாகவும் நிம்மதியாகவும் பயணம் செய்வதற்கு அதன் சாரதிகளும் நடத்துனர்களும் வாகன உரிமையாளர்களும் உதவ ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதற்காக அரசு தற்போது அமுல்படுத்தும் க்ளின் ஸ்ரீலங்கா திட்டத்தை நான் வரவேற்கின்றேன் என்று இடித்துரைக்கின்றார் பல்கலைக்கழகப் பட்டதாரி யதர்ஷனா.

**சௌந்தரராஜன் யதர்ஷனா**
**பட்டதாரி**
**ஹாலி- எல**



ஒரு பயணி என்ற வகையில் அரசாங்கம் நடைமுறைப்படுத்தியிருக்கின்ற இந்த முயற்சியை சரியான விடயம் என்றே கருதுவதாகக் கூறுகிறார் திருகோணமலையில் வங்கியொன்றின் ஊழியராகக் கடமையாற்றும் டில்ஷான் இராஜரெட்ணம்.

இது பற்றி மேலும் தெரிவித்த அவர், அவசியமற்ற விடயங்கள் பொதுப்போக்குவரத்தில் இருப்பதால் எங்களுடைய பாதுகாப்பிற்கு பாதிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன. உதாரணமாக, பேருந்து கண்ணாடியை குறிப்பிட்ட தூரத்தைத் தாண்டி பொருத்தி அலங்காரங்களை சேர்த்துள்ளதன் மூலம் சரியாக சாரதியால் கண்ணாடியைப் பார்க்க முடியாமல் போகும் சந்தர்ப்பங்களால் விபத்துக்கள் ஏற்படும். அடுத்து, அதிக சத்தமாக பாடல்களை ஒலிக்கவிடுவதன் மூலம் சாரதியின் கவனச் சிதறல்களால் விபத்து ஏற்படும்.

ஒலி அதிர்வுகளால் சூழல் மாசுபடுகின்றது. வைத்தியசாலைக்கு அருகில் செல்கின்றபோதும், நீதிமன்றத்திற்கு அருகில் செல்கின்றபோதும் ஒலி எழுப்பக் கூடாது என்பது ஏற்கனவே இருக்கின்ற ஒரு நடைமுறையாகும். பொதுப் போக்குவரத்துக்களில் முன் செல்லுகின்ற வாகனங்களுக்கு ஒலி எழுப்ப பயன்படுகின்ற

ஒலி எழுப்பும் சாதனத்தையும் வித்தியாசமான சத்தங்களுடன் பொருத்துகின்றனர்.

வாகனங்களிலுள்ள மதம் சார்ந்த அடையாளங்கள். அதை அவதானிக்கின்றபோது அந்த வாகனத்தின் சாரதி அல்லது உரிமையாளர் குறிப்பிட்ட ஒரு மதத்தை சேர்ந்தவர் என்ற எண்ணம் உருவாகும். இது ஏனைய மதங்களைப் பின்பற்றுகின்றவர்களுக்கு மனக் கசப்பை ஏற்படுத்தும். அதனால் இது இனமத விரிசல்களுக்கு வித்திடலாம்.

ஆகவே தற்போது “அரசாங்கம் எடுத்திருக்கின்ற இந்த நடவடிக்கை பாராட்டத்தக்கது.” என்கிறார் டில்ஷான்.

**டில்ஷான் இராஜரட்ணம்**
**வங்கி உத்தியோகத்தர்**
**திருகோணாமலை**

**பயணிகளின் நலன்கள்**
**பாதுகாக்கப்பட வேண்டும்**

பயணத்திற்கு சௌகரியமும் பாதுகாப்பும் கொடுக்க வேண்டியதுதான் முச்சக்கர வண்டிக் காரர்களின் முழுமுதற் கடமையாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தகிறார் யாழ்ப்பாணத்தைச் செர்ந்த முச்சக்கரவண்டி உரிமையாளரான ஓய்வு நிலை ஆசிரியர் வி. கனகசபாபதி.

அவர் இந்த விடயம்பற்றி மேலும் தெரிவித்தாவது,

முச்சக்கர வண்டி செலுத்துபவர் என்ற வகையில் நான் கூற விரும்புவது தேவையில்லாத பகுதிகளை பொருத்துவது, சகிக்கவொண்ணா ஒலியெழுப்பி பாடல்களை இசைத்தச் செல்வது போன்றவற்றை நிறுத்த வேண்டும்.

வாகனங்களில் ஒட்டும் அல்லது பொருத்தும் அலங்காரப் பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதை அரசாங்கம் நிறுத்த வேண்டும் என ஆதரிக்கிறேன்.

அரசாங்கம் தொடங்கி வைத்துள்ள க்ளீன் ஸ்ரீலங்கா வாகனச் சுத்தம் முயற்சியை நான் முழுமையாக ஆதரிக்கிறேன் என்று கூறுகிறார் நீர்கொழும்பைச் சேர்ந்த மற்றொரு முச்சக்கர வண்டி ஓட்டுநரான சமர நதீர. அலங்காரங்களால் அநாவசிய விபத்துக்கள் ஏற்படுகின்றன. அத்தோடு பாடசாலை மாணவர்கள் கவரப்பட்டு பதவறாக வழிநடத்தப்படுகிறார்கள் என்கிறார் அவர்..

சவாலான சாதனை

க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் போக்குவரத்து நடவடிக்கைகள் தொடர்பில் தனியார் பஸ் சங்கங்களுக்கும் பதில் பொலிஸ் மா அதிபருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடல் வெற்றியடைந்ததாக தனியார் பஸ் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

பஸ் சோதனையின்போது பொலிஸார் தமது அதிகாரத்தை மீறுவதாகவும், பஸ்கள் மீது தேவையற்ற அழுத்தங்களை பிரயோகிப்பதாகவும் கூறி அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பஸ் சங்கங்கள் ஆரம்பத்தில் வேலைநிறுத்தம் செய்ய தீர்மானித்திருந்தன.

இந்நிலையில், பஸ் சங்கங்களின் பிரதிநிதிகள் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவை பொலிஸ் தலைமையகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து, திட்டமிட்ட வேலைநிறுத்தப் போராட்டத்தை தொடர்வதில்லை என பஸ் சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

**வேலுப்பிள்ளை கனகசபாபதி**
**முச்சக்கர வண்டி உரிமையாளர்**
**(ஓய்வு பெற்ற ஆசிரியர்)**
**யாழ்ப்பாணம்**



# 'கிளீன் ஸ்ரீலங்கா' இலங்கையை சுத்தப்படுத்துமா?



நூருல் ஹுதா உமர்

இயற்கையால் ஆசீர்வதிக்கப்பட்ட அழகிய சொர்க்கபூமியான இலங்கை வெள்ளையர்களிடமிருந்து சுதந்திரம் பெற்று கொள்ளையர்களிடம் மாட்டிக்கொண்டது. இந்நிலையில் இருந்து விடுதலை கிடைக்க வேண்டும். நாட்டின் வளங்கள் சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்யப்பட்டு இலங்கை தலைநிமிர்ந்து சர்வதேச அரங்கில் கம்பீரமாக நிற்க வேண்டும் என்ற ஆசை எல்லா இலங்கையர்களுக்கும் இருக்கும் நிலையில் வழமையாக மரபு ரீதியான மாறி மாறி ஆண்டு வந்த பச்சை, நீலம் அணியை தோற்கடித்து சிவப்பு அணியை பெருவாரியாக வெல்ல வைத்தனர் இலங்கையர்கள். வரலாற்றில் முதல் முறையாக வடக்கு கிழக்கிலும் சிவப்பு அலை கடுமையாக அடித்தது. நிறைய தமிழ் பேசும் உறுப்பினர்களும் தேசிய மக்கள் அரசில் அங்கம் வகித்தனர். இதன் மூலம் மாற்றம் வரும் சிஸ்டம் சேஞ்ச் நடக்கும் என எல்லோரும் நம்புகிறார்கள்.

மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் எண்ணத்துடன் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க கையில் எடுத்திருப்பது சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூ அவர்களால் தொடங்கப்பட்ட சிங்கப்பூரின் பரந்த தேசத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளின் ஒரு பகுதியாக, தூய்மையான சிங்கப்பூர் பிரச்சாரம் போன்ற ஒன்றே. பிரதமர் லீ குவான் யூ அவர்களால் 1968இல் தொடங்கப்பட்ட பொது சுகாதாரம், சுற்றுலா மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதில் முக்கியமாக சிங்கப்பூரை சுத்தமான மற்றும் பசுமையான நகரமாக மாற்றுவதை இந்த பிரச்சாரம் நோக்கமாகக் கொண்டிருந்தது. அதுபோன்றே இலங்கையை முன்னோக்கி இழுத்துச் செல்ல அனுரகுமார அரசும் இந்த "கிளீன் ஸ்ரீலங்கா" செயற்திட்டத்தை கையில் எடுத்திருக்கிறது.

1968 தூய்மையான சிங்கப்பூர் பிரச்சாரத்தின் முக்கிய அம்சங்களாக தூய்மை மற்றும் சுகாதாரத்தின் முக்கியத்துவம் குறித்து அரசு குடிமக்களுக்கு அறிவுறுத்தியது. பள்ளிகள், பணியிடங்கள் மற்றும் சமூக அமைப்புகள் செய்தியைப் பரப்புவதற்காக அணி திரட்டப்பட்டன, குப்பை கொட்டுவதை எதிர்த்து கடுமையான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன, குற்றவாளிகளுக்கு அபராதம் மற்றும் சட்டங்கள் கடுமையாக அமுல்படுத்தப்பட்டன, இந்தப் பிரச்சாரம் சிங்கப்பூரர்களை தங்கள் சுற்றுச்சூழலில் பெருமிதம் கொள்ள தூண்டியது. வழக்கமான துப்புரவு இயக்கங்கள் மற்றும் சமூக நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டன, பொதுத் தொட்டிகளை வழங்குதல் மற்றும் குப்பை அகற்றும் சேவைகளை மேம்படுத்துதல் போன்ற கழிவு மேலாண்மை அமைப்புகளில் அரசாங்கம் முதலீடு செய்தது. நவீன வளர்ந்த நாடாக மாறுவதற்கான சிங்கப்பூரின்




இலட்சியத்துடன் தூய்மை இணைக்கப்பட்டுள்ளது. சமுதாயத் தில் ஒழுக்கம் மற்றும் ஒழுங்கை வளர்க்கும் ஒரு பரந்த மூலோபாயத்தின் ஒரு பகுதியாக அது இருந்தது.

இந்த பிரச்சாரம் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றது, சிங்கப்பூர் உலகின் தூய்மையான நகரங்களில் ஒன்றாக உலகளாவிய நற்பெயருக்கு அடித்தளம் அமைத்தது. 1990களில் தூய்மை மற்றும் பசுமையான சிங்கப்பூர் இயக்கம் போன்ற அடுத்தடுத்த முன்முயற்சிகளுக்கு இது களம் அமைத்தது. இது நிலைத்தன்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் கவனம் செலுத்தியது. இந்த முன்முயற்சியானது தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் நடைமுறை மற்றும் ஒழுக்கமான அணுகுமுறையை பிரதிபலித்தது. கூட்டுப் பொறுப்பு மற்றும் நீண்டகால முன்னேற்றத்திற்கான பார்வையை வலியுறுத்துகிறது. 1950களில்

**பிரதமர் லீ குவான் யூ அவர்களால் 1968இல் தொடங்கப்பட்ட சிங்கப்பூரை சுத்தமான மற்றும் பசுமையான நகரமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட செயற்றிட்டம் போன்றே இலங்கையை முன்னோக்கி இழுத்துச் செல்ல அனுரகுமார அரசு "கிளீன் ஸ்ரீலங்கா" செயற்திட்டத்தை கையில் எடுத்திருக்கிறது.**

சிங்கப்பூர் இலங்கை ஆகிய நாடுகள் ஒரே GDPயினை கொண்ட நாடாக காணப்பட்டது. ஆனால் இன்றைய இலங்கையையும் சிங்கப்பூரையும் ஒப்பிட முடியாத வளர்ச்சியை சிங்கப்பூர் கொண்டுள்ளது. சிங்கப்பூர் எனும் அழகிய நாட்டின் உட்கட்டமைப்பு மாற்றத்திற்கு நாட்டு மக்களின் மனப்பான்மை மாற்றமே காரணம். ஆனால் இலங்கை மாசுபடுத்தப்பட்ட அரசியலுக்கும், பிழையான பொருளாதார கொள்கைக்கும், பொருத்தமற்ற கல்விப்பண்பாட்டுக்கும் பழக்கப்பட்டு பின்னோக்கிய நிலையில் இருக்கிறது.

அந்த நிலையில் இருந்து இலங்கையை மாற்றி முன்னேற்றகரமான நாடாக இலங்கையை கட்டியெழுப்பும் நோக்கில் "கிளீன் ஸ்ரீலங்கா" எனும் சிந்தனையுடன் இந்த அரசாங்கம் இந்த ஆண்டில் கால்வைத்துள்ளது. புதிய அரசியல் கலாசாரத்தின் ஆரம்பத்துடன் தான் இந்தப் புத்தாண்டு மலர்ந்துள்ளது. நாம் இந்த நாட்டை வளம் மிக்கதொரு நாடாக மாற்றியமைப்பதற்கான அடித்தளத்தை இட்டுள்ளோம் என "கிளீன் ஸ்ரீலங்கா" (தூய்மையான இலங்கை) தேசிய வேலைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். இந்த கருத்துக்கள் வாய் வார்த்தைகளாக இல்லாமல் செயலில் நடந்தாலும் மகிழ்ச்சியே.

குடும்ப ஆட்சி, ஊழல், வீண் விரயங்கள், அதிகார துஷ்பிரயோகம், மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் அனைத்தையும் மக்கள் புறக்கணித்துள்ளார்கள். நாட்டின் பொருளாதாரம் கடந்த காலங்களில் வங்குரோத்து நிலைக்கு சென்றிருந்தது. கடந்தாண்டு அந்த வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்கான சந்தர்ப்பம் சிலரின் அர்ப்பணிப்பான பணிகளினால் இலங்கைக்கு கிடைத்தது. இன்று பொருளா தாரம் சற்று ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளதுடன் இதனை இன்னும் பலப்படுத்தும் வகையில், செயற்பாடுகளை அனுர அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அத்தோடு, எமது நாட்டின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தி சட்டத்தின் ஆட்சியை பலமாக்க வேண்டும். கடந்த காலங்களில் சட்டத்தின் ஆட்சி இல்லாத ஒரு நாடாகவே எமது நாடு காணப்பட்ட நிலையில் குற்றவாளிகள் சட்டத்திலிருந்து தப்பித்திருந்தார்கள். அரசியல்வாதிகள் தாங்கள் நினைத்தவாறு சட்டத்தை மாற்றி, அரசியலமைப்பை மீறினார்கள் என்ற குற்றச்சாட்டு பரவலாக இருக்கிறது. எமது நாட்டின் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு எதிராக உயர்நீதிமன்றமே, அரசமைப்பை மீறியுள்ளார்கள் என்று தீர்ப்பளித்த வரலாறுகளும் இல்லாமல் இல்லை.

இந்த நிலைமையை "கிளீன் ஸ்ரீலங்கா" எனும் சிந்தனையுடன் மாற்றி அமைக்க வேண்டியுள்ளது. அத்தோடு, ஊழல் – வீண் விரயங்களும், அதிகார துஷ்பிரயோகங்களும் எமது நாட்டில் ஒரு நோயைப் போன்று பரவியுள்ளது. இதனை வேரோடு இல்லாதொழிக்க வேண்டும். இதனுடன் தொடர்புபட்ட சகல திணைக்களங்களும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கினால் மட்டுமே அது சாத்தியமாகும். அரச அதிகாரிகளும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக் களை சரியாக உணர்ந்து, கடமைகளை நிறைவேற்ற வேண்டும் இல்லாது போனால் இந்த "கிளீன் ஸ்ரீலங்கா" எனும் சிந்தனை கற்பனையாகவே முடிந்துவிடும்.

இதனை விட பெரிய சுமைதான் நாட்டு மக்களை வறுமையிலிருந்து மீட்டெடுக்க வேண்டும் என்பது. இலங்கை இயற்கை மற்றும் செயற்கை அனர்த்தங்கள், உள்நாட்டு போர், பொருளாதார நெருக்கடி என எல்லா வகையிலும் அடிவாங்கி நோயாளி போன்று மாறியிருக்கிறது. எனவே இந்த அரசாங்கத்தின் பிரதான பணியாக இதனையும் துடைத்தெறிய வேண்டியிருக்கிறது. பொருளாதாரமானது ஒரு தரப்பிடம் மட்டும் குவிந்து இருந்தால், ஒருபோதும் வறுமையை இல்லாதொழிக்க முடியாது. இதனை ஒழிக்கும் வகையில் வரவு– செலவுத் திட்டத்தில் நடவடிக்கைகளை எடுத்தே ஆகவேண்டும். இரண்டாவதாக நாட்டை டிஜிட்டல் மயமாக்க வேண்டும். மூன்றாவதான கிளீன் ஸ்ரீலங்கா




திட்டத்திற்கு அமைய அனைத்துத் துறைகளையும் தூய் மையாக்க வேண்டும். 2023 ஆம் ஆண்டில் மட்டும் யானை – மனிதன் மோதலில் 182 பேர் உயிரிழந்துள்ளார்கள். 2023ஆம் ஆண்டில் 484 யானைகள் மனிதர்களால் கொல்லப்பட்டுள்ளன. இதுதான் நாட்டின் நிலைமை.

வெள்ளம், மண்சரிவு உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களினால் அதிகளவானோர் உயிரிழக்கின்றார்கள். எமது நாட்டு சொத்துக்களையும் மக்களையும் பாதுகாப்பதே கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் பிரதான நோக்கமாகும். அதேநேரம், மக்களுக்கும் தங்களின் உயிரின் பெறுமதி தெரியாமல் உள்ளது. நான் ஏன் இவ்வாறு கூறுகிறேன் என்றால் கடந்த ஆண்டு மட்டும் நீரில் மூழ்கி 595 பேர் உயிரிழந்துள்ளார்கள். வாகன விபத்துக்களில் 2321 பேர் கடந்த ஆண்டு உயிரிழந்துள்ளார்கள். ஒரு நாளைக்கு 7 பேர் விபத்துக்களால் உயிரிழக்கிறார்கள். தங்களதும், பிறரின் உயிர் தொடர்பாகவும் மக்களுக்கு கவலை இல்லாமல் உள்ளது. இந்த சமுதாயத்தை மாற்றியமைக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது. அத்தோடு, மக்களுக்கு விஷமில்லாத உணவை வழங்க வேண்டிய பொறுப்பும் அரசாங்கத்திற்கு உள்ளது. விசேட தேவையுடையவர்களையும் ஒதுக்கி விட்டு பயணிக்க முடியாது. ஒரு தரப்பை ஒதுக்கிவிட்டு பயணிக்கும் ஒரு சமூகம் ஒருபோதும் வளர்ச்சியடைந்த சமூகமாக மலராது என்ற ஜனாதிபதியின் இந்தவருட முதலாவது உரை காரமானது மட்டுமல்ல. ஆழமானதும் கூட.

அவரது உரையில் அவர் சுட்டிக்காட்டிய அரச சொத்துக்களை பாதுகாக்க வேண்டிய பிரதான பொறுப்பு எம் அனைவருக்கும் உள்ளது. தனிப்பட்ட சொத்துக்களை பாதுகாக்கும் அளவுக்கு அரச சொத்துக்களை இங்கு யாரும் பாதுகாப்பதில்லை. அரச சொத்துக்கள் இந்த தலைமுறைக்கு மட்டும் உரித்தானது கிடையாது. மாறாக இவற்றை பாதுகாத்து அடுத்த தலைமுறையினருக்கு கையளிக்கும் செயற்பாட்டையும் கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தில் உள்ளடக்கியுள்ளோம். என்று அவர் குறிப்பிட்டுள்ள விடயம் இங்கு ஆழமாக நோக்கவேண்டியது.

இந்த "கிளீன் ஸ்ரீலங்கா" இப்போது சில விசும்பல்களையும் சந்திக்க தவறவில்லை. இச் செயற்திட்டத்துக்கமைய வீதி விபத்துக் களையும், போக்குவரத்து நெரிசலையும் கட்டுப்படுத்தும் வகையில் இரு விசேட போக்குவரத்து நடவடிக்கைகள் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள பொருத்தமற்ற உதிரிபாகங்கள் நீக்கப்ப டுவதுடன், வீதி விதிமுறைகளை மீறி செயற்படும் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நடவடிக்கை எதிர்வரும் 19ஆம் திகதி வரை முன்னெடுக் கப்படும் என பதில் பொலிஸ் மாஅதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரியவின் பணிப்புரைக்கு அமைய பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான சட்டத்தரணி புத்திக்க மனதுங்க தெரிவித்து இப்போது அந்த பணி நாட்டில் முடுக்கி விடப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள விசேட ஒலி எழுப்பும் கருவிகள், கண்கவர் மின்விளக்குகள், பொருத்தமற்ற மற்றும் உயிர் ஆபத்துக் களை ஏற்படுத்தக்கூடிய உதிரிபாகங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப் படவுள்ளது. இரண்டாவது கட்டமாக பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்களில் சிவில் உடையில் பொலிஸ் உத்தியோகத்தர்களை கடமைகளில் ஈடுபடுத்தி வீதி விதிமுறைகளை மீறி செயற்படும் சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இந்த விசேட வேலைத்திட்டம் கடந்த 4ஆம் திகதி சனிக்கிழமை முதல் எதிர்வரும் 19ஆம் திகதி வரையான இரு வாரங்களுக்கு முன்னெடுக்கப்படவுள்ளது. குறித்த காலப்பகுதியில் இந்த விசேட போக்குவரத்து திட்டம் தொடர்பில் பொலிஸாரினால் சோதனை மேற்கொள்ளப்படும் என்பதுடன் இது தொடர்பில் வாகன சாரதிகள் மற்றும் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தப்படவுள்ளது. மேலும் வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள பொருத்தமற்ற உதிரிபாகங்களை அகற்று வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இந்த நடைமுறையை மீறி செயல்படும் சாரதிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். அத்துடன் சட்டம் ஒழுங்கை பேணக்கூடிய வகையில் வீதி விதிமுறைகளை பின்பற்றுமாறு சாரதிகளிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். இதனிடையே போக்குவரத்து முறைகேடுகள் மற்றும் போக்குவரத்து விதிமீறல்களில் ஈடுபடும் வாகனங்கள் தொடர்பில் பொதுமக்கள் துரிதமாக முறைப்பாடளிக்க ஈ – ட்ரபிக் (e-traffic) எனும் கையடக்க தொலைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தாகும். இதன்மூலம் சாரதிகளினதும், நடத்துனர்களினதும் முட்டாள் தனமான அல்லது போட்டிபோட்டு நடத்தும் ஓட்டப்பந்தயங்கள் நிறுத்தப்படும், விபத்துக்கள் குறையும் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் மலர்ந்துள்ளது தவிர்க்க முடியாதுள்ளது தவிர்க்கமுடியாததே.

2024இல் நடத்தப்பட்ட சோதனைகள் மற்றும் நடவடிக்கைகளின் போது 28,158 மில்லியன் ரூபாவிற்கும் அதிக பெறுமதியான போதைப்பொருள் மற்றும் போதைவில்லைகளை இலங்கை கடற்படை கைப்பற்றியுள்ளது. இதன்போது, போதைப்பொருள் கடத்தல், சட்டவிரோதமாக பொருட்களை கொண்டு செல்லுதல் உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரஜைகள் 407 பேர் கைது செய்யப்பட்டதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

இந்த திட்டத்தின் கீழ், சிவில் உடையில் அதிகாரிகள் பணியில் அமர்த்தப்பட்டு, பயணிகள் பேருந்துகளை ஆய்வு செய்வதுடன், போக்குவரத்து விதிமீறல்கள் குறித்து சாரதிகளை எச்சரிக்கும் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். வாகன சாரதிகள் மற்றும் பொதுமக்களைத் தெளிவுபடுத்தும் வகையில் இந்த நடவடிக்கைகள், முன்னோடி திட்டமாக எதிர்வரும் 19 ஆம் திகதி வரை இரண்டு வாரங்களுக்கு செயல்படுத்தப்படுகிறது.

எது எப்படியாக அமைந்தாலும் இலங்கை சிங்கப்பூராக மாறாவிடினும் இலங்கையர்கள் விரும்பும் மாற்றத்தை உருவாக்கிய திட்டமாக "கிளீன் ஸ்ரீலங்கா" அமைந்து இலங்கையர்கள் ஊழலற்ற நாட்டில், தூய்மையான தேசத்தில் நிம்மதியாக வாழ வழி சமைக்க வேண்டும்.



உலக வலம் WORLD NEWS

# தீ கலிபோர்னியாவில் தொடரும் 200 ஏக்கர் எரிந்து நாசம்

## 10 பேர் பலி



லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் பரவிய காட்டுத் தீயில் குறைந்தது 10 பேர் இறந்துள்ளனர் மற்றும் ஆயிரக்கணக்கான கட்டிடங்கள் அழிக்கப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

வேகமாக நகரும் தீப்பிழம்புகள், கடுமையான வறண்ட காற்றால் தூண்டப்பட்டு, வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களை தீக்கிரையாக்கியுள்ளன. பிரபலங்கள் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கான மக்கள் புகை மூட்டப்பட்ட குடியிருப்புகளிலிருந்து வெளியேற கட்டாயப்படுத்தப்பட்டனர்.

காட்டுத் தீ தொடர்ந்து எரிந்து வருவதால், லொஸ் ஏஞ்சல்ஸ் கவுண்டியின் மருத்துவ பரிசோதகர் வெள்ளிக்கிழமை இறந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்துள்ளது என தெரிவித்தார். லொஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் பற்றி எரியும் நான்கு பெரிய காட்டுத் தீயில் ஒன்றான ஈட்டன் தீயில் பலியானவர்களின் எண்ணிக்கை 5 ஆக உயர்ந்தது. மீட்பு பணிகள் தொடர்வதால் எண்ணிக்கை உயரும் என அதிகாரிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர். அதேநேரம், பசுபிக் பொலிசேட்ஸ் தீயானது பெரும்பாலும் குடியிருப்பு பகுதிகளை அழித்தது, 200 ஏக்கர் முழுவதும் பரவியது மற்றும் கட்டாய வெளியேற்றல் உத்தரவுகளுக்கும் அது வழிவகுத்தது.

பசுபிக் பொலிசேட்ஸில் மட்டும் 5,000 இற்கும் மேற்பட்ட கட்டிடங்கள் சேதமடைந்துள்ளன. இது லொஸ் ஏஞ்சல்ஸ் வரலாற்றில் மிகவும் அழிவுகரமான தீயாக அமைந்தது. கடலோரப் பகுதியில் கிட்டத்தட்ட 27 சதுர மைல்கள் (70 சதுர கி.மீ) எரிந்துள்ளன.

வியாழக்கிழமை நிலவரப்படி, சுமார் 180,000 பேர் வெளியேற்றப்பட உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

கலாபாசாஸ், சாண்டா மோனிகா மற்றும் வெஸ்ட் ஹில்ஸ் போன்ற ஆடம்பரமான சுற்றுப்புறங்கள் தீப்பிழம்புகளால் அச்சுறுத்தப்பட்டன. இடம்பெயர்ந்தவர்களில் மார்க் ஹாமில், மாண்டி மூர், பாரிஸ் ஹில்டன் உள்ளிட்ட ஹொலிவூட் நட்சத்திரங்களும் அடங்குவர். லொஸ் ஏஞ்சல்ஸ் கவுண்டி முழுவதும் சுமார் 45 சதுர மைல்கள் (117 சதுர கி.மீ) தீ பற்றி எரிந்துள்ளது, இது சான் பிரான்சிஸ்கோவின் அளவிற்கு சமமானது.

தீயணைப்பு வீரர்கள், சட்ட அமுலாக்கப் பணியாளர்கள் மற்றும் அவசர உதவிப் பணியாளர்கள் உட்பட 7,500 இற்கும் மேற்பட்ட பணியாளர்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

ஓரிகான், வொஷிங்டன், உட்டா, நியூ மெக்சிகோ மற்றும் அரிசோனா ஆகிய இடங்களில் இருந்து கூடுதல் குழுக்கள் அனுப்பப்பட்ட நிலையில், கலிபோர்னியா 1,400 தீயணைப்பு வீரர்களை அனுப்பியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தீயை எதிர்த்துப் போராடுவதற்கு கூட்டாட்சி வளங்கள் மற்றும் நிதியுதவியை அங்கீகரித்தார்.

புதிய நிதியானது அபாயகரமான பொருட்களை அகற்றுதல், தங்குமிடங்கள், முதல் பதிலளிப்பவரின் சம்பளம் மற்றும் 180 நாட்களுக்கு பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான 100% செலவுகளை ஈடுசெய்யும்.

இதனிடையே, தனியார் வானிலை நிறுவனமான AccuWeather, தீயினால் ஏற்பட்ட பொருளாதார சேதம் மற்றும் இழப்புகளை $135 பில்லியன் முதல் $150 பில்லியன் வரை என மதிப்பிட்டுள்ளது.

எனினும், அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ மதிப்பீடுகள் இன்னும் நிலுவையில் உள்ளன.

சில பகுதிகளில் மணிக்கு 70 மைல் (112 கி.மீ) வேகத்தில் வீசிய சக்திவாய்ந்த காற்றினால் தீப்பரவல் தீவிரமடைந்தது.

கடந்த நாட்களை விட காற்றின் வேகம் குறைந்தாலும் தீ வேகமாக பரவக்கூடும் என தேசிய வானிலை மையம் எச்சரித்துள்ளது.





# அமெரிக்க ஆக்கிரமிப்பு; பனாமாவை விடுவிக்கக் கோரும் தியாகிகள்

பனாமா கால்வாயை அமெரிக்க கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததற்கு எதிரான கொடிய எழுச்சியின் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் நூற்றுக்கணக்கான பனாமேனியர்கள் வியாழக்கிழமையன்று அணிவகுத்துச் சென்றனர்.

தியாகிகள் தினம் என்று அழைக்கப்படும் பனாமா கால்வாயின் அமெரிக்க கட்டுப்பாட்டின் மீதான 1964 கலவரத்தின் போது உயிரிழந்த பனாமா மாணவர்களை நினைவுகூரும் வகையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் அணிவகுத்துச் சென்றனர்.

1964 இல் நாடு முழுவதும் வன்முறை மோதல்களின் போது 20 இற்கும் மேற்பட்ட பனாமேனியர்கள் மற்றும் பல மாணவர்கள் இறந்தனர். இந்த தாக்குதல் பனாமா நாட்டில் அமெரிக்க இருப்பு மற்றும் கால்வாயின் கட்டுப்பாட்டிற்கு எதிரான வெகுஜன ஆர்ப்பாட்டங்களுக்கு பதிலளிக்கும் வகையில் அமெரிக்க பாதுகாப்புப் படைகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. குறைந்தது மூன்று அமெரிக்க வீரர்களும் இத் தாக்குதலில் பலியாகினர்.

ஒவ்வொரு ஜனவரியும் 9 ஆம் திகதி "தியாகிகள் தினம்" என்று நினைவுகூரப்படும் இந்த சம்பவம், 1999 இல் கால்வாயை பனாமாவிற்கு மாற்றுவதற்கு வழி வகுத்ததாகக் கருதப்படுகிறது .

ட்ரம்ப்புடன் பதற்றம் அதிகரித்து வரும் நேரத்தில், பனாமா கால்வாயில் தேசிய உணர்வை இன்னும் ஆதிக்கம் செலுத்தும் இரத்தம் தோய்ந்த கடந்த காலத்தின் நினைவூட்டலாகவும் இது அடையாளப்படுத்தப்படுகிறது.

"இன்று நமது தியாகிகளின் தியாகத்தை நினைவுகூரும் நாள், ஆனால் பனாமா இறையாண்மை, கால்வாய் எங்களுடையது என்று உலகிற்குச் சொல்லும் நாள்" என்று எழுச்சியின் போது மாணவராக இருந்த 84 வயதான ஓய்வுபெற்ற தொழிற்சங்கவாதி செபஸ்டியன் குய்ரோஸ் தெரிவித்தார்.

1964 இல் இறந்தவர்களை நினைவுகூரும் வகையில் கட்டப்பட்ட நித்திய சுடர் நினைவுச்சின்னத்தை நெருங்கும் போது, "சிந்தப்பட்ட இரத்தம் ஒருபோதும் மறக்கப்படாது" மற்றும் "பனாமாவை கைவிட்டு விடுங்கள்" என அணிவகுத்துச் சென்ற கூட்டம் கோஷ மிட்டது.

82 கி.மீ (51 மைல்) செயற்கை நீர்வழி, பசிபிக் மற்றும் அட்லாண்டிக் பெருங்கடல்களை இணைக்கும் ஒரு முக்கிய சர்வதேச கப்பல் பாதையான கால்வாயின் கட்டுப்பாட்டைக் கைப்பற்ற இராணுவ அல்லது பொருளாதார அழுத்தத்தைப் பயன்படுத்துவதை ட்ரம்ப் மறுத்த நிலையில் ட்ரம்பின் மிரட்டல்களை பனாமா கடுமையாக கண்டித்துள்ளதுடன்

"கால்வாயை கட்டுப்படுத்தும் ஒரே கைகள் பனாமேனியன், அது அப்படியே தொடரும்" என வெளியுறவு அமைச்சர் ஜேவியர் மார்டினெஸ் அச்சா செவ்வாய்க்கிழமையன்று ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

அணிவகுப்பில் கலந்து கொண்ட 59 வயதான பல்கலைக்கழக ஊழியர் இவான் குயின்டெரோ, பனாமேனியர்கள் நீண்ட காலமாக போராடியதை எந்த அரசாங்கமும் பறிக்க முடியாது என்றார்.

"மிஸ்டர் ட்ரம்ப் கால்வாயை எங்களிடம் இருந்து எடுக்கப்போவதாக மிரட்டுவதில் மிகவும் அவமரியாதையாக நடந்து கொண்டார். அவர் மரியாதை காட்ட கற்றுக்கொள்ள வேண்டும்." என அவர் தெரிவித்தார்.



# ஜிம்மி கார்டரின் இறுதிச் சடங்கில் பங்கேற்ற 5 அமெரிக்க ஜனாதிபதிகள்!

(ஜெயராம் அனோஜன்)

கடந்த மாத இறுதியில் தனது 100 ஆவது வயதில் உயிரிழந்த அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்டரின் இறுதிச் சடங்கில் தற்போதைய, முன்னாள் ஜனாதிபதிகள் 5 பேர் மற்றும் துணைத் தலைவர்கள் கலந்து கொண்டனர். இறுதிச் சடங்கானது வியாழக்கிழமை (09) வொஷிங்டன் நேஷனல் கதீட்ரலில் நடைபெற்றது.

அமெரிக்காவின் ஜனாதிபதி ஜோ பைடன், முன்னாள் ஜனாதிபதிகளான டொனால்ட் ட்ரம்ப், பராக் ஒபாமா, ஜார்ஜ் டபிள்யூ புஷ் மற்றும் பில் கிளிண்டன் ஆகியோர் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு, முதல் வரிசையில் ஒன்றாக அமர்ந்திருந்தனர்.

கடந்த நவம்பர் மாதம் நடந்த ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சித் தலைவர் ட்ரம்பிடம் தோல்வியடைந்த துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் மற்றும் அவரது முன்னோடிகளான மைக் பென்ஸ் மற்றும் அல் கோர் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல்வாதிகள் மற்றும் பொதுமக்களின் பிரதிநிதிகளும் இறுதி சடங்கில் கலந்து கொண்டு கார்டருக்கு மரியாதை செலுத்தினர்.

2016 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்பிடம் தோல்வியடைந்த முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் அவரது கணவருடன் மரணச் சடங்கில் பங்கெடுத்தார்.

ஜனாதிபதி ஜோ பைடன் தனது புகழஞ்சலியில், கார்டரின் பண்பு மற்றும் தலைமைத்துவத்தை பலமுறை பாராட்டினார். ஒரு தசாப்தத்தில் அரசியல் ரீதியாக மோதலில் ஈடுபட்டுள்ள ட்ரம்ப் மற்றும் ஒபாமா – இறுதி சடங்கு நிகழ்வானது தொடங்குவதற்கு முன்பு சிரித்து அரட்டையடிப்பதை காட்டும் புகைப்படங்களும் இதன்போது படம்பிடிக்கப்பட்டது. முன்னாள் முதல் பெண்மணி மெலனியா ட்ரம்ப் தனது கணவருடன் சடங்கில் பங்கெடுத்தார்.ஆனால் மிச்செல் ஒபாமா கலந்து கொள்ளவில்லை.

அனைவரும் தங்கள் இருக்கைகளில் அமர்ந்தபோது ட்ரம்ப் மற்றும் அவரது முன்னாள் துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் ஆகியோர் கைகுலுக்கினர்.

ட்ரம்பின் ஜனாதிபதி பதவியின் முடிவில் இருவரும் வெளியேறினர், ட்ரம்பின் அழுத்தம் இருந்தபோதிலும் பைடனின் ஜனாதிபதி பதவி வெற்றிக்கான சான்றிதழை பென்ஸ் தலைமை தாங்கினார். ஒரு கலக கும்பல் 2021 ஜனவரி 6 அன்று அமெரிக்க கேபிட்டலில் நுழைந்து சான்றிதழை நிறுத்த முயற்சித்தது, சிலர் பென்ஸ் தூக்கிலிடப்பட வேண்டும் என்று அழைப்பு விடுத்தனர். பின்னர் அவர் 2024 குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக ட்ரம்பிற்கு எதிராக போட்டியிட்டும் இருந்தார்.

நிகழ்வில் போர்த்துக்கல் ஜனாதிபதி மார்செலோ ரெபெலோ டி சௌசா, நெதர்லாந்தின் இளவரசி மாபெல் ஆஃப் ஆரஞ்ச்-நாசாவ் மற்றும் ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் உட்பட பல தற்போதைய மற்றும் முன்னாள் உலகத் தலைவர்கள், முக்கிய சர்வதேச அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அதேநேரம், அண்மைக் காலங்களில் ட்ரம்பின் கண்ணில் வீழ்ந்த தூசியாகவுள்ள பதவி விலகும் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவும் இதில் பங்கெடுத்தார். அண்மைய வாரங்களில் ட்ரம்ப், ட்ரூடோவை "கவர்னர் ட்ரூடோ" என்று மீண்டும் மீண்டும் குறிப்பிட்டு, கனடாவிற்கு எதிராக "பொருளாதார சக்தியை" பயன்படுத்துவதாக சபதம் மேற்கொண்டிருந்தார்.

2024 தேர்தலில் போட்டியிட்ட கமலா ஹாரிஸ் மற்றும் ட்ரம்ப் இடையில் எவ்விதமான பேச்சுக்களும், புன் சிரிப்புக்களும் இங்கு இடம்பெறவில்லை. இருவரும் அருகருகே அமர்ந்திருந்தாலும், இரு அரசியல்வாதிகளும் தேவாலயத்திற்குள் நுழைந்த பின்னர் கைகுலுக்கவில்லை.

ட்ரம்ப் தனது இருக்கையில் அமர்ந்தபோது ஹாரிஸை வெறித்துப் பார்த்தார். ஹாரிஸின் கணவரான செகண்ட் ஜென்டில்மேன் டக் எம்ஹாஃப், பின்னர் கமலா ஹாரிஸ் புஷ்ஷிடம் பேசிய சந்தர்ப்பத்தில் ட்ரம்புடன் கைகுலுக்கினார்.





# டெஸ்ட் கிரிக்கெட்டில் இரண்டடுக்கு முறை

two-tier system

டெஸ்ட் கிரிக்கெட்டில் மாற்றங்களைக் கொண்டு வரும் மனநிலையில் கிரிக்கெட் நிர்வாகிகள் உள்ளனர். டெஸ்ட் கிரிக்கெட்டில் இரண்டு அடுக்கு முறையை (two-tier system) அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனவரி 6ஆம் திகதி மெல்போர்ன் ஏஜ் பத்திரிகையில் இதுகுறித்து ஒரு செய்தி வெளியாகியுள்ளது. அதில், சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐசிசி) தலைவர் ஜெய் ஷா கூடிய விரைவில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் தலைவர் மைக் பேர்ட், இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபைகளின் (ஈசிபி) தலைவர் ரிச்சர்ட் தாம்சன் ஆகியோரைச் சந்திப்பார் என தெரிவிக்கப்பட்டது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பை இரண்டு அடுக்குகளாகப் பிரிக்கும் திட்டம் குறித்து, இம்மாத இறுதியில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று ஆதாரங்களை மேற்கோள் காட்டி அந்தச் செய்தி தெரிவித்துள்ளது.

இரண்டு அடுக்கு முறை செயல்படுத்தப்பட்டால், இந்தியா அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், இலங்கை, நியூசிலாந்து ஆகிய அணிகள் முதல் வரிசையில் (Tier-1) இருக்கக்கூடும்.

மேற்கிந்திய தீவுகள், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், அயர்லாந்து, சிம்பாவே ஆகிய அணிகள் இரண்டாம் வரிசையில் (டியர்-2) இடம்பெறக்கூடும்.

தற்போது நடைமுறையில் இருக்கும் கிரிக்கெட் சுற்றுப்பயணத் திட்டம் 2027இல் முடிவடைய உள்ளதால், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த இன்னும் சில காலம் ஆகலாம்.

கிரிக்கெட் உலகின் பலம் வாய்ந்த அணிகள் பெரும்பாலும் ஒன்றுடன் ஒன்று மோதுகின்றன. இதனை மாற்றவே, "இரண்டு அடுக்கு" என்ற புதிய முறையைக் கொண்டு வருவதற்கு பேச்சுவார்த்தை நடப்பதாகக் கூறப்படுகிறது.முன்னாள் இங்கிலாந்து கெப்டன் மைக்கேல் வாகன் இந்தப் புதிய முறைக்கு ஆதரவு தெரிவித்துள்ளார். விரைவில் செயல்படுத்த வேண்டும் என்றும் கூறியுள்ளார். ஆனால், முன்னாள் இந்திய பயிற்சியாளர் ரவி சாஸ்திரி, "டெஸ்ட் கிரிக்கெட்டை உயிர்ப்புடன் வைத்திருக்க வேண்டும் என்றால், சிறந்த அணிகள்தான் ஒன்றோடொன்று விளையாட வேண்டும்" என்று கூறியுள்ளார்.

இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா இடையே சமீபத்தில் முடிவடைந்த பார்டர்-கவாஸ்கர் தொடர் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. இரு அணிகளுக்கும் இடையே ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்றது.

சுமார் இரண்டு மாதங்கள் நடைபெற்ற இந்தத் தொடரைக் காண ஏராளமான பார்வையாளர்கள் மைதானத்தில் திரண்டனர். செய்திகளின்படி ஆஸ்திரேலியாவில் இதுவரை நடந்த கிரிக்கெட் போட்டிகளிலேயே அதிகமான பார்வையாளர்கள் எண்ணிக்கையுடன் இந்தத் தொடர் நான்காவது இடத்தில் உள்ளது.

இது தவிர, இன்று வரை அதிகம் பார்க்கப்பட்ட டெஸ்ட் தொடராகவும் இது அமைந்தது. எனவே, சிறந்த டெஸ்ட் அணிகள் மோதும் போட்டிகளை மட்டுமே மக்கள் அதிகம் இரசிப்பதாக ஒரு விவாதம் முன்வைக்கப்படுகிறது.




# பாகிஸ்தானில் நடக்குமா சம்பியன்ஸ் கிண்ணம்?



சம்பியன்ஸ் கிண்ணம் தொடருக்கான மைதானத்தை புதுப்பிக்கும் பணிகள் மந்தமாக நடைபெறும். இதனால், திட்டமிட்டபடி பாகிஸ்தானில் போட்டிகள் நடக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

பாகிஸ்தானில் ஐ.சி.சி.சம்பியன்ஸ் கிண்ணம் பெப்ரவரி 19 முதல் மார்ச் 9 வரை நடைபெறவுள்ளது.

மொத்தம் 8 அணிகள் பங்கேற்கின்றன பாதுகாப்பு காரணங்களுக்காக இந்திய அணி பங்கேற்கும் போட்டிகள் மட்டும் துபாயில் நடைபெறவுள்ளது.

ஏனைய போட்டிகள் பாகிஸ்தானின் லாகூர், கராச்சி, ராவல்பிண்டி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

இங்குள்ள மைதானங்களில் கட்டுமானம், மறு சீரமைப்பு பணிகள் நடைபெறுகின்றன. இவற்றை விரைவில் முடித்து, பெப்ரவரி 12ஆம் திகதிக்குள் மைதானத்தை ஐ.சி.சி.,யிடம் ஒப்படைக்க வேண்டும். ஆனால் லாகூர், கராச்சியில் கட்டுமானப்பணிகள் மந்தமாக நடக்கின்றன. குறிப்பிட்ட திகதிக்குள் பணிகள் நிறைவடைவது சந்தேகம். கட்டுமானப் பணிகள் முடியாவிட்டால், போட்டிகள் பாகிஸ்தானில் இருந்து ஐக்கிய அரபு எமிரேட்சிற்கு (யு.ஏ.இ) மாற்றப்படலாம். பாகிஸ்தான் பத்திரிகையாளர் "சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கு இன்னும் 40 நாட்கள் தான் உள்ளன. ஏதாவது அதிசயம் நிகழ்ந்தால் மட்டுமே மைதான பணிகளை ஐ.சி.சி.குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க இயலும். லாகூர் கடாபி மைதானத்தில் வீரர்கள் "டிரஸ்சிங் ரூம்" தயாராகவில்லை. சுற்றுச்சுவர் கட்ட வேண்டியுள்ளது. அவ்வப்போது வானிலையும் தொல்லை தருகிறது, தெரிவித்தார்.

இந்திய அணி, துபாயில் ஒரே ஒரு பயிற்சி ஆட்டத்தில் பங்கேற்க உள்ளது. பாகிஸ்தானில் மைதான கட்டுமானப்பணிகள் தாமதமாவதால், மற்ற அணிகளுக்கான பயிற்சி போட்டிகளைத் துபாயில் நடத்த ஐ.சி.சி திட்டமிட்டுள்ளது.

# ஆப்கானுடனான போட்டியை புறக்கணிக்க வேண்டும்

## தென்னாபிரிக்க விளையாட்டுத்துறை அமைச்சர்

சம்பியன்ஸ் கிண்ண தொடரில் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டியை புறக்கணிக்க வேண்டும் என தென்னாபிரிக்க விளையாட்டுத்துறை அமைச்சர் கெய்டன் மெக்கன்சி கருத்து தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி 19-ஆம் திகதி கராச்சியில் ஆரம்பமாகும் முதல் போட்டியில் நடப்பு சம்பியன் பாகிஸ்தான் - நியூசிலாந்தை விளையாடவுள்ளது.

பாதுகாப்பு அச்சுறுத்தலால் இந்திய அணி பாகிஸ்தானுக்கு செல்ல மறுத்ததால் இந்திய அணிக்குரிய போட்டிகள் துபாய்க்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த தொடரில் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தைத் தென் ஆப்பிரிக்கா புறக்கணிக்க வேண்டும் என தென்னாபிரிக்க விளையாட்டுத்துறை அமைச்சர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது, உலகத்தில் நிறவெறி பேதம் அதிகம் இருந்த காலத்தில் விளையாட்டில் சமமான வாய்ப்பு மறுக்கப்பட்ட ஓர் இனத்தைச் சேர்ந்தவனாக இருக்கும் நான், இன்று உலகின் எந்தவொரு பகுதியிலும் பெண்களுக்கு எதிராக அநீதி அரங்கேறும்போது, அதை வேறு விதமாகப் பார்ப்பது நியாயமானதாக இருக்காது. தென் ஆப்பிரிக்கா அணி ஆப்கானிஸ்தானுக்கு எதிரான கிரிக்கெட் போட்டியில் விளையாட வேண்டுமா அல்லது இல்லையா என்பது குறித்த இறுதி முடிவு எடுப்பது நான் அல்ல. சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டியைப் புறக்கணிக்க வேண்டும் என்பது எனது முடிவு. இறுதி முடிவு என்னுடையதாக இருந்தால், அது நிச்சயமாக நடக்காது. இவ்வாறு அவர் கூறினார்.

பெப்ரவரி 21 ஆம் திகதி கராச்சியில் தென்னபிரிக்கா - ஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டி நடைபெறவுள்ளது.



# கபில்தேவின் பிறந்த நாள்



ராம்லால் நிக்கஞ் என்ற இயற்பெயர் கொண்ட இந்திய கிரிக்கெட்டின் ஜாம்பவான் கபில்தேவ் தனது 66ஆவது பிறந்தநாளை வெள்ளிக்கிழமை கொண்டாடினார். உலகமே வியக்க 1983 உலகக் கிண்ணத்தை வென்ற அணித்தலைவர், சகலத்துறை ஆட்டக்காரர், துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சு என அனைத்திலும் பிரகாசித்த இந்திய கிரிக்கெட் வீரர். ஆட்டமிழக்காமல் எடுத்த இவரது175 சாதனை மறக்க முடியாதது, இன்றும் பிரமிக்க வைக்கிறது. கிரிக்கெட் விளையாட்டு மீதான இரசனையை மக்களுக்கு ஏற்படுத்தியவர்களில் முக்கியமானவர். இந்திய கிரிக்கெட் வரலாறு பெருமிதம் கொள்ளும் பெயர் கபில்தேவ்...

# U19 ரி20 மகளிர் உலகக் கிண்ணம்




19 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் ரி20 உலகக் கிண்ண போட்டிகள் 18 ஆம் திகதி மலேசியாவில் நடைபெறவுள்ளதாக ஐசிசி தலைவர் ஜெய்ஷா அறிவித்துள்ளார்.

19 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் ரி20 உலகக் கிண்ணம் கிரிக்கெட் போட்டிகளின் முதல் தொடர் தென்னாபிரிக்காவில் 2023ஆம் ஆண்டு நடந்தது. இதில் இந்திய மகளிர் அணி சம்பியன் பட்டம் வென்றது.

இந்நிலையில் இரண்டாவது உலகக் கிண்ண போட்டிகள் மலேசியாவில் நடைபெறவுள்ளது.

16 நாடுகள் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு 16 நாட்களில் 41 போட்டிகள் நடைபெறவுள்ளன.

குழு A -இந்தியா, மலேசியா, இலங்கை மற்றும் மேற்கிந்தியத் தீவுகள்

குழு B -இங்கிலாந்து , அயர்லாந்து, பாகிஸ்தான், அமெரிக்கா இணைகின்றன. நிறுவப்பட்ட அணிகளான

குழு C - நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, நைஜீரியா மற்றும் சமோவா

குழு D -அவுஸ்திரேலியா,பங்களாதேஷ், நேபாளம் மற்றும் கொடலாந்து.

# இந்திய அணியின் ஆலோசகராக தோனி



சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணியின் ஆலோசகராக முன்னாள் வீரர் எம்.எஸ். தோனி நியமிக்கப்பட உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

2021ஆம் ஆண்டு நடந்த ரி20 உலகக் கிண்ண தொடரில் இந்திய அணியின் ஆலோசகராக தோனி நியமிக்கப்பட்டார். அதில் இந்திய அணி கிண்ணத்தை வெல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டிருந்த ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் கெப்டன் ரஷீத் கான் இலங்கை அணியின் முன்னாள் வீரர் சங்கக்காரவை சந்தித்த போது.....





இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

ஒருவன்
ORUVAN - ඔරුවන්
ஆண்டு: 01 இதழ் : 14 குரோதி வருடம் மார்கழி மாதம்
28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1446 ரஜப் 12 (12.01.2025)



# பயிர்கள் செழிக்க உதவியமைக்கு நன்றி செலுத்தும் தைத்திருநாள்

ஆர்.சுபாஷினி

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பது பாரம்பரியமாக மக்களிடையே நிலவி வரும் ஒரு நம்பிக்கை. உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் தை, நமக்கு செழிப்பையும் மகிழ்ச்சியையும் கொண்டுவரும் என்னும் நம்பிக்கையில் தைப்பொங்கல் விழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றார்கள்.

குறிப்பாக இத்திருநாளை அறுவடைத் திருவிழா என்று கூறலாம். விவசாயம் செழிக்க உதவி செய்தமைக்கு சூரிய பகவான், மழைக்கடவுள் இந்திரன், இயற்கை அன்னை மற்றும் விலங்குகளுக்கு நன்றி செலுத்தும் பண்டிகையாகும்.

மேலும், தைமாதம் மங்களகரமான மாதமாகவும் கருதப்படுகிறது. ஆண்டுதோறும் ஜனவரி 14அல்லது 15ஆம் திகதியன்று தை பிறக்கும். இந்நாளில், மக்களின் வாழ்வாதாரமான விவசாயத்தையும், விவசாயத்துக்கு உதவி செய்பவற்றையும் போற்றி வழிபடுகின்றார்கள். இதில் சூரியனை வழிபடுவது தை பொங்கலின் முக்கியமான நோக்கமாக இருக்கிறது. புதுப் பானையில் பொங்கல் பொங்குவது போல அனைவரது வாழ்விலும் வசந்தம் பொங்க வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் இந்தப் பண்டிகையை அனைவரும் கொண்டாடுகின்றனர்.

உலகில் பழைமையான வழிபாடுகளில் சூரிய வழிபாடு முதன்மையானது. பண்டைய காலத்தில் "சௌரம்" எனப்படும் சூரியனை முதன்மையாகக் கொண்ட மதமும் இருந்துள்ளது. இன்றுகூட, பெரியவர்கள் சிலர் அதிகாலையில் எழுந்ததும் சூரியனைக் கண்டு வணங்குவதைப் பார்த்திருப்போம். அந்த வகையில், சூரியனுக்கு நன்றி கூறும் திருநாளான தைப்பொங்கல், இன்று மதங்கள் கடந்த பண்டிகையாக, மாறிவருகின்றது என்றால் மிகையாகாது.

### போகி

தமிழ் நாட்டில் பொங்கல் பண்டிகை நான்கு நாட்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. பொங்கலுக்கு முதல் நாள் போகிப் பண்டிகை. 'போக்கி' என்பதே 'போகி' ஆயிற்று என்பர். 'போகி' என்றால் இந்திரனையும் குறிக்கும். இந்திரனே மழைக்கு அதிபதி. எனவே சூரிய வழிபாட்டிற்கு முன்தினம் இந்திர வழிபாடு நடைபெறும். பழையன கழிதலும், புதியன புகுதலும் என்பதற்கேற்ப புதிய தொடக்கத்தைக் குறிக்கும் வகையில், பழைய பொருட்களை அகற்றி வீட்டைச் சுத்தம் செய்து அலங்கரிப்பார்கள். புத்தாடைகள் அணிந்து மங்களகரமாகக் காட்சியளிப்பார்கள்.

மேலும், நம் முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கிற, நம்மை வாழ விடாத, நமக்கு உதவாத, நமக்கும் நம் குடும்பத்துக்கும் கெடுதல்கள் செய்யக் கூடிய தீய குணங்களை எல்லாம் அகற்றுகின்ற வகையில், அழிக்கின்ற வகையில், தூய்மையான அறிவு எனும் ஞானத் தீயில் அவற்றை இட்டுப் பொசுக்க வேண்டும். உள்ளத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதையே போகி எனும் பண்டிகை உணர்த்துகிறது என்கிறார்கள்.

### சூரியப் பொங்கல்

இரண்டாவது நாள் சூரிய பொங்கலாகக் கொண்டாடப்படுகிறது. இதுவே பொங்கலின் முக்கியமான நாள். மழை கொடுத்த இந்திரனை வழிபடுவதைப் போலவே சூரியனை வழிபாடு செய்யும் முக்கியமான தினம் பொங்கல். சூரிய ஒளிதான் தாவரங்களில் உணவை உற்பத்தி செய்கிறது என்கிறது அறிவியல். எனவே, சூரிய வழிபாடு பிரதானமானதாக இருக்கின்றது.

உழவர்கள் கதிரவனுக்கு நன்றி சொல்லும் விதமாகத் தை முதல் நாள் பொங்கல் இட்டு வழிபாடு செய்வது வழக்கம். உழவர்களுக்கும் சூரியனுக்கும் மரியாதை செய்யும் விதமாக மக்கள் அனைவரும் இந்தப் பண்டிகையைக் கொண்டாட ஆரம்பித்தனர்.

பொங்கல் பண்டிகை நாளன்று அதிகாலையில் எழுந்ததும் நீராடவேண்டும். இந்த நன்னாளில் எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் வழக்கம் இல்லை. குளித்து முடிந்து மங்களகரமான ஒரு நல்ல நேரத்தில் பொங்கல் வைக்க கிழக்கு முகமாகப் புது பொங்கல் பானையை வைத்து, அதில் கிழங்குகளுடன் கூடிய மஞ்சள் இலை, இஞ்சி இலை ஆகியவற்றைச் சேர்த்துக் கட்ட வேண்டும். பொங்கல் பானையின் மேல், மாவினால் கோலமிட்டு அலங்கரிக்கப்பதுண்டு. அதிலும், சூரிய சந்திர வடிவங்களைக் கோலமிடுவது கூடுதல் சிறப்பு. சூரியன் உதிக்கும் போது பொங்கல் பொங்கிவிடவேண்டும்.

பொங்கல் பொங்கும்போது, 'பொங்கலோ பொங்கல்' என்று மங்கல முழக்கம் இடும் வழக்கம் உண்டு. தற்காலத்தில் பலர் இந்த முழக்கம் இடுவதை தவிர்த்துவிடுகிறார்கள். ஆனால், இது மிகவும் முக்கியம் என்று பெரியவர்கள் கூறுவர். வீட்டில் உள்ள அனைவரும் ஒன்றிணைந்து, 'பொங்கலோ பொங்கல்' என்று சத்தமிட வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் நேர்மறையான அதிர்வுகள் நம் இல்லத்தில் நிறையும். எதிர்மறையான சிந்தனைகள் விலகி ஓடும். அதுவே தைத் திருநாளை சிறந்த திருநாளாக மாற்றும்.

**விவசாயம் செழிக்க உதவி செய்தமைக்கு சூரிய பகவான், மழைக்கடவுள் இந்திரன், இயற்கை அன்னை மற்றும் விலங்குகளுக்கு நன்றி செலுத்தும் நாளே பொங்கல் திருநாளாகும்..**

பொங்கல் தயாரானதும் சூரியனுக்குப் பூஜை செய்ய வேண்டும். சூரிய பூஜை மிக எளிதாகச் செய்யலாம். வழக்கம் போல முதலில் சிறு கணபதி செய்து முடித்துக்கொண்டு அதன் பிறகு சூரிய பூஜையைத் தொடங்க வேண்டும். சூரிய ஒளிபடும் இடங்களில் தண்ணீர் தெளித்துக் கோலமிடவேண்டும். வடக்குப் பக்கம் சூரிய பிம்பத்தையும் தெற்குப் பக்கம் சந்திர பிம்பத்தையும் வரைந்துகொள்ள வேண்டும். பின்பு பொங்கல் பானையோடு கரும்பு முதலியனவற்றையும் நமக்கு உணவளித்த சூரியக் கடவுளுக்குப் படைத்துப் பின் கற்பூரம் காட்ட வேண்டும். சூரியனுக்குப் படையலிடும்போதும் 'பொங்கலோ பொங்கல்' என்று சொல்லிக் குலவை இடும் வழக்கமும் உண்டு.

### மாட்டுப் பொங்கல்

பொங்கலின் மூன்றாவது நாள் மாட்டுப் பொங்கல் என்று அழைக்கப்படுகிறது. வயலை உழுது கடினமாக உழைக்கும் மாடுகளை வணங்கிப் போற்றும் நாள் இது. இந்நாளில் மாடுகளைக் குளிப்பாட்டி அவற்றுக்கு விபூதி, சந்தனம், குங்குமம் இட்டு பலவண்ணப்



பாசிமணிகளும், மலர் மாலைகளும் சூடி மங்களகரமாக அணிவிப்பார்கள்.

உழவுக் கருவிகளைச் சுத்தம் செய்து சந்தனம், குங்குமம் வைப்பார்கள். விவசாயத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து கருவிகளையும் இதேபோல் செய்வார்கள். தாம்பாளங்களில் தோட்டம், காடுகளில் விளைந்த பயிர், பச்சைகளை வைத்தும் தேங்காய், பூ, பழம், இனிப்பு என எல்லாம் பூஜைக்காக எடுத்து வைப்பார்கள். தொழுவத்திலேயே பொங்கல் பொங்கி கற்பூர தீபாராதனைக் காட்டி பசு, காளை, எருமை, ஆடு என அனைத்து கால்நடைகளுக்கும் பொங்கல், பழம் கொடுப்பார்கள்.

### காணும் பொங்கல்

பொங்கலின் நான்காவது நாளை காணும் பொங்கல் என்று அழைப்பார்கள். இந்நாளில், சமூகத்திற்கும் பந்தத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மேலும், இதை கறி நாள் என்றும் சொல்வர். அனைத்து விரதமும் முடிந்த நிலையில் அசைவ உணவுகள் சமைத்து, உற்றார் உறவினர்களுடன் உண்டு ஆடி பாடி மகிழ்வது இந்நாளில் மரபு. இலங்கையில், இந்த நாள் கொண்டாடப்படாவிட்டாலும், இந்தியாவின் தமிழ் நாட்டில், இந்த நாள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. கிராமங்களில் உள்ள மக்கள் இந்த நாளில் தங்கள் ஊரில் அல்லது அருகில் இருக்கும் நீர் நிலைகளுக்கு சென்று உண்டு மகிழ்ந்திருப்பது வழக்கம்.

### 'ஜல்லிக்கட்டு'

இந்த நாட்களில் மற்றும் இதன் அடுத்து வரும் நாட்களில் நம் தமிழர் பாரம்பரிய விளையாட்டுகள் நடத்தப்படும். அந்தவகையில், 'ஏறுதழுவல்' எனப்படும் ஜல்லிக்கட்டுக்கு தமிழ் நாட்டில் அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது.

புளிகுளம், காங்கேயம் ரக காளைகளை இதற்கு பயன்படுத்துவர். இந்த காளையை ஓடவிட்டு அதனை அடக்க வேண்டும். யார் அதை அடக்குகிறார்களோ அவர் வீரன் என கொண்டாடப்படுவர். இதன் ஆரம்ப காலத்தில், 'சல்லிக் காசு' என்னும் இந்திய நாணயங்களைத் துணியில் வைத்து மாட்டின் கொம்புகளில் கட்டிவிடும் பழக்கம் இருந்தது. மாட்டை அடக்கும் வீரருக்கு அந்தப் பணமுடிப்பு சொந்தமாகும். இந்தப் பழக்கம் பிற்காலத்தில் 'சல்லிக்கட்டு' என்று மாறியதாம். பேச்சுவழக்கில் அது திரிபடைந்து 'ஜல்லிக்கட்டு' ஆனது என்றும் கூறப்படுகிறது.

இப்படி தமிழர் திருநாளாம் தைத்திருநாளின் சிறப்புக்கள் ஏராளம். தமிழர் பண்டிகையை கொண்டாடுவோம், உழவர்களை நினைவில் கொள்வோம்! பொங்கலோ பொங்கல் என்று மகிழ்வு கொள்வோம்.

## பொங்கலும் கரும்பும்..



பொங்கல் பண்டிகையின்போது கரும்பு ஏன் முக்கியத்துவம் பெறுவது என்பது உங்களுக்கு தெரியுமா?. அதாவது, கரும்பு ஓராண்டு காலம் வளரக்கூடியது. இந்த காலத்தில் கரும்பு என்பது நல்ல திடகாத்திரமாக இருக்கும். அத்தோடு சாப்பிட இனிப்பாகவும் இருக்கும். இதன்மூலம் கரும்பு என்பது உழைப்பை கற்றுத்தரும் வகையில் உதாரணம் காட்டப்படுகிறது. அதாவது, முதலில் கரும்பு பொறுமையாக வளர்ந்து இறுதியில் மக்களுக்கு தித்திப்பை வழங்குகிறது. அதன்படி இளமையில் கஷ்டப்பட்டு மக்கள் உழைக்க வேண்டும். அப்படி உழைத்தால் முதுமையில் இனிமையான வாழ்வு கிடைக்கும் என்பதை இந்த கரும்பு உணர்த்துவதாக கூறப்படுகிறது. இதன் காரணமாகவே பொங்கல் நாளில் கரும்பும் முக்கியத்துவம் பெறுகின்றது.

## நன்றிக்கொரு நாள் பொங்கல் நன்நாள்!



கதிரோனின் பார்வையிலே
பயிரெல்லாம் செழிப்பாகும்
கமம் செய்யும் உழவராலே
புவியெல்லாம் பசியாறும்
காளைகளின் கடும் உழைப்பாலே
மாந்தரெல்லாம் உயிர் வாழ்வார்
நன்றிக்கொரு நாள் என்றே
பொங்கல் நாளில் மகிழ்ந்திடுவார்
கரும்போடு தோரணங்கள்
இல்லமெல்லாம் அலங்கரிக்கும்
உள்ளமெல்லாம் மகிழ்வு பொங்க
பொங்கல் பானை பொங்கி வழியும்
பொங்கலோ பொங்கல் என்றே
பொங்கல் நாளை வரவேற்போம்!

-ரிஷபன்

## அர்ஜுன் அலோசியஸைப் போலவே மனுஷ நாணயக்கார!

2015ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க பிரதமரானபோது மத்திய வங்கி பிணைமுறி கொள்ளைக்கு அர்ஜுன் அலோசியஸ் பயன்படுத்தப்பட்டதைப் போலவே, மனுஷ நாணயக்காரவின் அமைச்சு அதிகாரங்களைப் பயன்படுத்தி



பெரிய அளவிலான பொது நிதி மோசடி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சராக மனுஷ நாணயக்கார மேற்கொண்ட செயல்முறை, அவரது சகோதரருக்கு நாடாளுமன்ற விவகார செயலாளர் பதவி வழங்கப்பட்டதன் மூலம், பொது நிதி திருடப்படுவதற்கான அடித்தளத்தை அமைத்துள்ளது என கூறப்படுகின்றது.

இதுவரை வெளியாகியுள்ள தகவல்களின்படி, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இஸ்ரேல் மற்றும் தென் கொரியா உள்ளிட்ட பல நாடுகளில் வெளிநாட்டு வேலைகளை வழங்குவதாகக் கூறி இந்த நிதி கையாடப்பட்டுள்ளது. இது தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள மனுஷ நாணயக்காரவின் சகோதரர், எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

## ரணில் – சஜித் – நாமல் ஓர் அணியில்?



ராஜபக்ஷ தரப்பு மற்றும் சஜித் தரப்பு இணைந்து தற்போதைய அரசாங்கத்தை அச்சுறுத்தும் நடவடிக் கைகளை மேற்கொண்டு வருவதாக தெரியவருகிறது.

அதன்படி, சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதான போக்குவரத்து விதிகளை முறையாக அமுல்படுத்தவில்லை என குற்றம்சாட்டி பொலிஸாருக்கு எதிராக நாடு முழுவதும் பேருந்து வேலைநிறுத்தம் தொடங்கப்படும் என்று ஒரு பகிரங்க அறிக்கையை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறே, ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய நண்பர் ஒருவரும் இதற்கு முன்னர் இதேபோன்ற அச்சுறுத்தலை விடுத்திருந்தார்.

மேலும், அரசாங்கத்தின் 'க்ளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டத்தின் மூலம் பஸ்களில், முச்சக்கர வண்டிகளில் அலங்கார பொருட்களை அப்புறப்படுத்தப்படுவதை நாமல் ராஜபக்ஷ கண்டித்துள்ளார். இந்த அலங்காரப் பொருட்கள் ஒரு கலை எனவும், அவை தொடர அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் நாமல் ராஜபக்ஷ ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். ஆக இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து அரசாங்கத்திற்கு எதிராக எதிர்பிரசாரங்களை தொடங்கியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறு சஜித், நாமல் மற்றும் ரணில் ஆகிய தோற்கடிக்கப்பட்ட அனைத்து குழுவினரும் ஒன்றிணைந்து அரசாங்கத்தை ஒடுக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.



# அரசியல் அந்தப்புரம்

கனுஷியா புஷ்பகுமார்

## பலமான கூட்டணியாகும் ரணில் மற்றும் சஜித்!

இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் பாரிய தோல்வியை சந்தித்த ரணில் மற்றும் சஜித் அணியினர் எதிர்கால நலன் கருதி கூட்டணியாக இயங்க முயற்சிகளை மேற்கொண்டுவருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. எதிர்வரும் நாட்களில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் பாரிய வெற்றியை இலக்காகக் கொண்டு இவ்வாறு இவர்கள் கூட்டணியமைக்கவுள்ளதாக கூறப்படுக்கின்றது.

அதன்படி, இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவை ஒன்றாக கூட்டணி அமைப்பது தொடர்பில் தற்போது கட்சிக்குள் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.



## கோட்டாபய ராஜபக்ஷ காலத்தில் பாரிய நிதிக் குற்றங்கள்



கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த 2009 ஆம் ஆண்டின் இறுதியில் தொடங்கப்பட்ட 'தெயட்ட கிருல' திட்டம் தொடர்பான பிரசார காலத்தின் போது மறைக்கப்பட்டிருந்த பல உண்மைகள் தற்போது வெளிவரத் தொடங்கியுள்ளன.

அக்காலங்களில் அமைச்சர் ஒருவர் மேற்படி குறித்த பிரசாரத்தின் மூலம் சம்பாதித்த பணத்தைக் கொண்டு குடும்ப உறுப்பினர்களின் பெயர்களில் சுமார் 150 ஏக்கர் நிலத்தை வாங்கியுள்ளமை தெரியவந்துள்ளது.

அதன்படி அறந்தலாவ துறவிகள் படுகொலை செய்யப்பட்ட நினைவுச் சின்னத்தை நிர்மாணிப்பதற்காக 1.2 மில்லியன் ரூபாய்க்கு மேல் செலவிடப்பட்டமை உட்பட பல நிதி குற்றங்கள் பற்றி இவர் தொடர்பில் தகவல்கள் இதில் வெளியாகியுள்ளன.

அம்பாறையில் நடைபெற்ற 'தெயட்ட கிருல' கண்காட்சியைப் பார்வையிட 1.5 மில்லியன் மக்கள் வந்ததாகக் கூறி தவறான தரவுகளை முன்வைக்க இந்த அமைச்சர் முயற்சித்துள்ளமையும் தெரியவந்துள்ளது.

உண்மையில், கிட்டத்தட்ட 250,000 பேர் மட்டுமே இந்த நிகழ்வைக் காண வந்திருந்தனர் என்பதும், பல்வேறு புள்ளிவிவரங்களை இவ்வாறு திரித்து பல துறைகளில் நிதிக் குற்றங்களை இவர் இழைத்துள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

## தீவிர பிரசாரத்தை ஆரம்பித்துள்ள இனந்தெரியாத குழு!

இதுவரை அமல்படுத்தப்படாத போக்குவரத்துச் சட்டங்களை பொலிஸார் முன்னெடுத்து வருவதை எதிர்க்குமுகமாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள ஒரு குறிப்பிட்ட குழுவினர் தீவிர பிரசாரங்களை ஆரம்பித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு மேற்கொள்ளப்படும் பிரசாரத்தின் நோக்கம், அரசாங்கம் பேருந்துகளில் இருந்து சிலைகளை அகற்றுவதற்கு குறிப்பாக புத்தர் சிலைகளை அகற்ற உத்தரவிட்டுள்ளமை ஆகும். இந்த உத்தரவுக்கு எதிராக போராட்டங்கள் நடத்த வேண்டியதன் அவசியத்தை காரணம் காட்டி, மக்களிடையே அமைதியின்மையை ஏற்படுத்தும் வகையில் இந்த ஒழுங்கமைக்கப்பட்ட குழு செயல்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன.



# ஆச்சியின் மறுபக்கம்



## நடிகை மனோரமாவின் வாழ்க்கை சோகங்களை கூறுகிறார் நடிகர் சிவகுமார்

வைரம் நாடக சபாவில் மனோரமாவை ஒரு நடிகர், துரத்தி துரத்திக் காதலித்தார். அவரை விரட்டி விரட்டி அடித்தார் மனோரமா. அவர் விடவே இல்லை. அம்மா ராமாமிர்தம் எச்சரித்தார். அவன் நல்லவனில்லை. உன் நிம்மதி போய்விடும். வளரும் வயதில் காதல், திருமணம் வேண்டாம் என்று கெஞ்சிப் பார்த்தார். காதல் போதை கட்டுப்பாட்டை மீறி இருந்தது.

1954இல் திருச்செந்தூரில் அந்த நடிகருக்கும் மனோரமாவுக்கும் திருமணம் எளிமையாக அவரது அம்மாவுக்குத் தெரியாமல் நடந்தது. அதன் பிறகு அம்மாவுடன் பேச்சுவார்த்தை இல்லை. 'வாழ்விலும் தாழ்விலும் உன்னை விட்டுப் பிரியேன்' என்று சத்தியம் செய்து, கபடநாடகம் ஆடியவனின் சுயரூபம் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்பட ஆரம்பித்தது.

திருமணமாகி 2 மாதங்களில் கருவுற்று விரைவில் கருச்சிதைவும் ஏற்பட்டது. உடல்நிலை பாதிக்கப்பட்டு கொட்டாம்பட்டி மருத்துவமனையில் மனைவியைச் சேர்த்த கணவன், மயக்கம் தெளிந்து பார்த்தபோது காணவில்லை. அம்மா மட்டும் எதிரில் காவல் தெய்வமாக நின்று கொண்டிருந்தார்.

வேறு ஊரில் நாடகம் போட கணவன் போய்விட்டார். மீண்டும் சமரசமாகித் தொடர்ந்து நாடகங்களில் அவரோடு நடித்தார். மீண்டும் சில மாதங்களில் வயிற்றில் அடுத்த குழந்தை. 9 மாதம் குழந்தையை வயிற்றில் சுமந்துகொண்டே ஓய்வில்லாமல் நாடகங்கள். உடம்புக்கு முடியவில்லை என்றாலும் வற்புறுத்தி நடிக்கச் சொல்வார். வருமானம் குறையக் கூடாது அவருக்கு.

6 மாதமாக நாடகங்களில் நடித்ததற்கு காசு வரவில்லை. 'நான் பார்த்துக் கொள்கிறேன், கவலைப்படாதே!' என்றார். பிரசவத்திற்கு பள்ளத்தூர் தாய் வீடு வந்துவிட்டார். 9ஆவது மாதம் மருத்துவமனையில்... 'பிரசவத்திற்குப் பணம் வேண்டும்!' என்று கேட்டால், 'நான் வரும்போது கொண்டு வருகிறேன்' என்றார். கணவன் வரவில்லை. பிரசவம் ஒரு கொடுமை. பணமில்லாத அவதி இன்னும் கொடுமை.

குழந்தை பிறந்தபோதும் ஆசையோடு மனைவி, குழந்தையைப் பார்க்க வரவில்லை. 15 நாள் கழித்து வந்தார். பணம் எதுவும் கொண்டு வரவில்லை. மனைவியைக் கொஞ்சவில்லை– மகனை அள்ளி எடுத்து முத்தம் கொடுக்கவில்லை. 'சீக்கிரம் ரெடியாயிரு. நாடகங்கள் நடத்த திகதி கொடுத்துவிட்டேன்!' என்றார்.

மனோரமா மூலம் பணம் சம்பாதிப்பது ஒன்றே அவரது நோக்கம்.

அம்மாவால் தாங்க முடியவில்லை. 'பச்சை உடம்பு. ஒரு மாதம் கூட ஆகவில்லை. இந்த நிலைமையில் ஊர் ஊராக நாடகம் நடிக்க உடம்பு தாங்குமா? என்னய்யா மனுஷன் நீங்க?' பொங்கிவிட்டார்.

இப்போது மனோரமா –தீர்மானமாக 'இப்ப நான் வரமுடியாது' என்றார். முறுக்கிக் கொண்டு போய்விட்டார் கணவர்.

பின்னர் சென்னையில் குடியேறினார்கள். நாடகங்களிலும், சினிமாவிலும் வாய்ப்புகள் வந்தன. திடீரென்று கணவரிடமிருந்து விவாகரத்து கடிதம்? 1956இல் விவகாரத்து – அவரது 19 வயதில் கணவனைப் பிரிந்தாயிற்று.

ஏன் விவகாரத்து? பிறந்த மகன் பூபதி ஜாதகத்தை ஜோதிடரிடம் கொடுத்திருக்கிறார் கணவன். தகப்பனை விழுங்கி அம்மாவை உயர்த்தும் ஜாதகம் என்றார் ஜோதிடர். அதாவது நாம்



செத்துப் போவோம்! அதிர்ந்தார். விவகாரத்து வாங்கி உயிர் பிழைக்க ஓடிவிட்டார்.

சக நடிகரின் தங்கையை இரண்டாந்தாரமாக மணந்தார். 24 ஆண்டுகள் ஓடின. வேண்டா வெறுப்பாக வாழ்ந்த வாழ்க்கையில் மனோரமா மூலம் ஒரு ஆண் வாரிசு பிறந்தது. உருகி உருகி காதலித்து, வாழ்ந்தும் இரண்டாவது மனைவிக்குக் குழந்தை பிறக்கவில்லை.

இறைவன் ஒருவனை எப்படி தண்டிக்கிறான் பாருங்கள்.

1990– டிசம்பர் 18ஆம் திகதி மாஜி கணவர் இறந்த செய்தி மனோரமாவுக்கு தெரிவிக்கப்படுகிறது. துக்கம் விசாரிக்க மனோரமா வீட்டுக்குப் போனேன். 'கணவன் இறந்ததற்கு அழுவதா? அறியாத வயதில் தன்னை ஏமாற்றி ஒரு குழந்தை கொடுத்து விட்டு, தலைமுழுகி விட்டுப் போனவனை நினைத்து சந்தோஷப்படுவதா தெரியவில்லை!' என்றார்.

பூபதியை, தகப்பனாருக்கு கொள்ளி போட அனுப்பச் சொன்னேன். 'பூபதியோ அவர் யாரென்றே எனக்குத் தெரியாதே!' என்றான். 'அவர்தான் உன் தகப்பன் என்று நான் சொல்கிறேன். தகப்பனுக்கு கொள்ளி போடுவது புண்ணியம் வா!' என்று அழைத்துப் போய் இறுதி மரியாதை செய்து வந்தார்.

"சிவா! யுத்தம் முடிந்துவிட்டது. இனி நான் எதற்கு இருக்க வேண்டும்? என் வாழ்க்கை எப்படிப் போனால் என்ன என்று, ஈவிரக்கமில்லாமல் என்னை உதறிவிட்டுப் போனவன் முன்னால் வாளெடுத்து சுழற்றி இத்தனை காலம் போராடி, நான் யார் என்று நிரூபிக்க உடல், பொருள், ஆவியை எல்லாம் செலவழித்தேன். எதிராளி வீழ்ந்துவிட்டான். வெறுங்கத்தியைச் சுழற்றிக் கொண்டு எப்படி வாழ்வது? போதும். போய் விடுகிறேன்!" என்றார்.

'ராமாமிர்தம் அம்மா, இந்த மனிதனை நம்பி உங்களைப் பெற்றெடுக்கவில்லை. கலையுலகில் இமயத்தின் உச்சியைத் தொடப் பிறந்தவர் நீங்கள். இன்னும் கடமை பாக்கி இருக்கிறது தொடருங்கள்!' என்றேன்.

பூபதியை மருத்துவராக்க எவ்வளவோ முயற்சிகள் எடுத்தார். அது நிறைவேறவில்லை. பூபதியின் மகன் ராஜ ராஜனை மருத்துவராக்கிவிட்டார். இரண்டு பேத்திகளும் இப்போது திருமணமாகி நன்றாக வாழ்கிறார்கள்.





# சாரதிகளை 'க்ளீன் போல்ட்' ஆக்கியுள்ள அரசின் 'க்ளீன் ஸ்ரீலங்கா' நடவடிக்கை



எம்.எஸ்.அமீர் ஹுசைன்

"க்ளீன் ஸ்ரீ லங்கா" என்பதன் மூலம் நாட்டில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் பல உள்ளன. அதன் ஓர் அம்சமாகவே வாகனங்களை சுற்றிவளைத்து கண்காணிக்கும் நடவடிக்கைகளும் நடக்கின்றன. போக்குவரத்தில் நிகழும் ஒழுங்கீனமான தன்மைகளை தடுத்து நிறுத்தி பொருத்தமற்றவைகளை நீக்குவதும் க்ளீன் ஸ்ரீலங்காவின் பிரதான வேலைத்திட்டங்களில் ஒன்றாகும். தினமும் நடைபெறும் வாகன விபத்துக்களால் நாட்டின் பல பாகங்களில் உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன. வருடாந்தம் 3000 இற்கும் மேற்பட்டவர்கள் இவ்வாறான விபத்துக்களால் மரணிக்கின்றனர். விபத்தொன்று நடந்து முடிந்த பின்னர் யார் சரி யார் பிழை என்பதை தேடுவதில் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. ஏற்படுகின்ற உயிரிழப்புக்களால் பாதிக்கப்படுபவர்கள் சம்பந்தப்பட்டவர்களின் குடும்பங்களேயாகும். அதிகமான விபத்துக்களின் போக்குகளை அவதானிக்கும் போது பஸ்களால் ஏற்படும் விபத்துக்களே கூடுதலாக நடைபெறுவதாக உள்ளன. புள்ளிவிபரங்களின் அடிப்படையில் பார்க்கின்ற போது 2024 ஆம் ஆண்டில் முதல் 10 மாத காலப்பகுதிக்குள் மாத்திரம் 1818 வீதி விபத்துக்கள் பதிவாகி உள்ளன. இந்த விபத்துக்களால் சுமார் 2000 பேர் அளவில் உயிரிழந்துள்ளனர். 2023 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் 2200 விபத்துக்களால் 2557 பேர் பலியாகி இருக்கின்றனர் என பொலிஸ் ஊடக பேச்சாளர் அண்மையில் தெரிவித்திருந்தார். இதுகுறித்து பொலிஸ் தலைமையக பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவிக்கையில், கடந்த 05 வருட காலப்பகுதிக்குள் வீதி விபத்துக்களால் இறந்தவர்கள் எண்ணிக்கை 12,140 என்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 90,000 எனவும் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




எத்தனை வகையான வீதி போக்குவரத்து சட்டங்கள் நடைமுறையில் இருந்தாலும் வீதி விபத்துக்களும் நடந்துகொண்டு தான் இருக்கின்றன. தினமும் காலை முதல் இரவு வரையில் நாட்டில் உள்ள அனைத்து வீதிகளிலும் போக்குவரத்து பொலிஸார் கடமையில் ஈடுபட்டவர்களாக வீதி போக்குவரத்து சட்டங்களையும் ஒழுங்கு விதிகளையும் மீறுபவர்களையும் கண்காணித்து அபராதம் விதித்தும் சட்ட நடவடிக்கை எடுத்து வருகின்ற போதிலும் விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமே உள்ளன. பாதசாரிகளது கவனயீனமான நடத்தை, வீதி பாதுகாப்பு சட்டங்களை உதாசீனம் செய்தல், மது போதையில் வாகனம் செலுத்துதல், வாகனங்களை செலுத்தும் போது மொபைல் ஃபோன்களை பயன்படுத்தல், சாரதிகளின் தூக்கக் கலக்கம், சாரதிகளின் உதாசீனமான போக்குகள் மற்றும் முறையாக சாரதி அனுமதிப்பத்திரம் பெறாமை போன்றவற்றை விபத்துக்களுக்கான காரணங்களாக கூறலாம்.



அதிலும், இலங்கையில் பொதுப் போக்குவரத்தில் 16000 அளவிலான தனியார் பஸ்களும் 11000 அளவிலான இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்களும் தினமும் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. மறுபுறம் மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டிகள் ஆகியனவும் விபத்துகளுக்கு காரணமான வாகனங்களாக அமைகின்றன.




குறிப்பாக, தனியார் போக்குவரத்து பஸ்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் ஆகியவற்றை அசாதாரணமான முறையில் உதிரிப்பாகங்களை பொருத்தி அலங்கரித்திருப்பது, வாகனத்திற்குள் அதிக ஒலி எழுப்பும் வகையில் வானொலி பயன்படுத்தல் போன்ற விடயங்களும் விபத்துக்களில் செல்வாக்கு செலுத்தி உள்ளமை தெரியவந்துள்ளது. இவற்றை கவனத்திற் கொண்டே கடந்த வாரம் முதல் போக்குவரத்து பொலிஸார் நாட்டில் பல பாகங்களிலும் தனியார் பஸ்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளை சோதனை செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். அதன்படி, சாரதிகள் தமது வாகனத்தை செலுத்துகையில் அவர்களின் பார்வைக்கு இடைஞ்சலை ஏற்படுத்தும் விதமாக அமையக்கூடிய வகையில் செய்யப்பட்டுள்ள அலங்காரங்களை நீக்குவதற்கு பொலி ஸார் நடவடிக்கைகளை எடுத்தனர். குறிப்பாக, பலவிதமான வர்ணங்களை உடைய மின் குமிழ்களைக் கொண்ட அலங்காரம், சாரதியின் முன்பக்கத்தில் பொருத்தப்பட்டுள்ள விதவிதமான அழகுபடுத்தல்கள், கடுமையான ஒலியை எழுப்பும் வகையிலான ஹோர்ன்கள், வாகனத்தை செலுத்திக் கொண்டே செல்போனில் உரையாடும் வகையிலான உபகரணங்கள் என பலவிதமான அலங்காரங்களை பொலிஸார் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.



**தனியார் போக்குவரத்து பஸ்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் ஆகியவற்றில் அவசியமற்றமுறையில் அலங்கரித்திருப்பது, வாகனத்தில் அதிக சத்தமாக வானொலி பயன்படுத்தல் போன்ற விடயங்களும் விபத்துக்களுக்கு காரணமாக அமைந்துள்ளமை தெரியவந்துள்ளது..**

அத்துடன், சில முச்சக்கர வண்டிகளில் பொருத்தப்பட்டுள்ள புத்தர் சிலைகளைக் கூட கழற்றி ஒதுக்குமாறு பொலி ஸார் பணித்துள்ளனர். பொலிஸாரின் இத்தகைய செயற்பாடு காரணமாக தனியார் பஸ் ஓட்டுனர்கள் மற்றும் முச்சக்கர வண்டி சாரதிகள் ஆகியோர் கடும் அதிருப்தியை தெரிவித்துள்ளனர்.

அதற்குள்ளாக இத்தகைய மேலதிகமான அலங்காரங்கள், கருவிகள், உபகரணங்களைஅப்புற ப்படுத்தாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவித்துள்ளமை யும் குறிப்பிடத்தக்கது.


மேலும், பல வர்ணங்களிலான அலங்கார மின் குமிழ்களின் எல்லை மீறய வெளிச்சம் காரணமாக எதிரே வருகின்ற வாகன சாரதிகள் கடுமையான அசௌகரி யங்களை சந்திக்கின்றனர்.

எனவே, இத்தகைய நிலைமைகள் தொடர்பாக சுற்றி வளைப்புக்களை செய்யும் பொலிஸார் முதல் கட்டமாக அநாவசியமான முறையில் பொருத்தப்பட்டிருக்கும் பாகங்களை நீக்குமாறு பணிக்கின்றனர். இதன் அடுத்த கட்டமாகவே அபராதம் விதித்தல் , சட்ட நடவடிக்கை எடுத்தல் போன்ற செயல்களில் இறங்கவுள்ளனர்.

உயிர்கள் என்பது விலை மதிப்பிட முடியாதது. இதனை சாரதிகள் சரியாக புரிந்துகொள்ள வேண்டும். விலை மதிக்க முடியாத உயிர்களை பாதுகாப்பதற்கான எந்த நடவடிக்கைக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அனைவரதும் பொறுப்பாகும். இந்நிலையில் தனியார் பஸ் உரிமையாளர்கள் பொலிஸ் தரப்பாருடன் நடத்திய பேச்சுவாரத் தைகளுக்கு அமைய தனியார் பஸ்களு க்கு தமது அலங்கார உதிரிப்பாகங்களை நீக்குவதற்கு மூன்று மாதகால அவகா சத்தை பொலிஸார் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பூமிக்கு அடியில் ஒரு கிராமம்!

## 3500 மக்களின் வசிப்பிடம்





"உலகின் ஓப்பல் தலைநகரம்" என்று அழைக்கப்படும் "கூப்பர் பெடி" கிராமமானது சூடான பாலைவன வெப்பத்திலிருந்து தப்பிக்க பூமியின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது, வீடுகள், கடைகள் மற்றும் தேவாலயங்கள் கூட நிலத்திற்கு அடியில் அமைக்கப்பட்டுள்ளன. நிலத்திற்கு அடியில் அமைந்திருக்கும் இந்த வினோத கிராமம் பார்ப்பவர்களுக்கு மிகவும் வித்தியாசமான அனுபவத்தை வழங்குகிறது.

மேற்படி "கூப்பர் பெடி" கிராமம் முழுவதுமே பூமிக்கு அடியில் தான் உள்ளதாம். இங்கு வீடுகள் மட்டுமின்றி, அலுவலகங்கள், வர்த்தக கட்டடங்கள், ஆலயங்கள், திரையரங்குகள், அருங்காட்சியகம், மதுபானசாலைகள் மற்றும் ஹோட்டல் என அனைத்தும் காணப்படுகின்றன. இந்த நிலத்தடி கிராமத்தில் இணைய வசதியும் உள்ளதுடன் இங்கு ஆயிரக்கணக்கான மக்கள் வாழ்ந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.


இங்கு மக்கள் நிலத்தடியில் வாழ்ந்து வருகிறார்கள் என்பது பலருக்கும் ஆச்சரியம் தரும் விடயமாகவே உள்ளது. இந்த கிராமத்தின் மிக முக்கிய அம்சம் என்னவென்றால், இங்குள்ள அனைத்து மக்களும் நிலத்தடியில் அமைந்துள்ள வீடுகளில் வாழ்கின்றனர் என்பதாகும். இது பலருக்கும் ஆச்சரியம் தரும் விடயமாகவே உள்ளது. இந்த வீடுகள் வெளியிலிருந்து பார்க்கும்போது சாதாரணமாகத் தோன்றலாம், ஆனால், உள்ளே சென்று பார்த்தால் அனைத்து வசதிகளையும் கொண்ட ஸ்டார் ஹோட்டல்களைப் போல இருக்கும்.

**இங்கு வீடுகள் மட்டுமின்றி, அலுவலகங்கள், வர்த்தக கட்டடங்கள், ஆலயங்கள், திரையரங்குகள், அருங்காட்சியகம், மதுபானசாலைகள் மற்றும் ஹோட்டல், இணைய வசதி என அனைத்தும் காணப்படுகின்றன ..**



பாலைவனமாக இருந்த இந்த "கூப்பர் பேடி" கிராமத்தில் சுரங்கப் பணிகள் 1915 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன. இது ஆரம்பத்தில் மாணிக்கக்கல் எடுக்கும் சுரங்கமாக இருந்தது. இப்பகுதியில் சுரங்கங்கள் தோன்றிய பின்னர், மக்கள் காலியாக உள்ள சுரங்கங்களின் உள்ளே சென்று வாழத் தொடங்கியுள்ளனர். நாளடைவில் இங்கு காலத்திற்கு ஏற்ப தட்ப வெப்பநிலை சரியாக இல்லாமல் மக்கள் அவதிப்பட்டுள்ளனர்.

கோடைக்காலத்தில் இங்கு வெப்பநிலை 45டிகிரி செல்சியஸ் ஆக பதிவாகும் என்று கூறப்படுகிறது. அதன் காரணமாக வெயிலின் தாக்கத்தில் இருந்து தப்பிக்க மக்கள் பூமியைக் குடைந்து குடியேறியுள்ளனர். பூமிக்கு கீழே குடியேறிய பின்னர் கோடை மற்றும் குளிர் காலங்களில் எந்தவொரு கஷ்டமும் இல்லாமல் தட்ப வெப்பநிலை சீராக இருப்பதாக கூறப்படுகின்றது.



இந்த கிராமத்தில் 1500 வீடுகள் இருப்பதுடன் 3500 க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலத்தடி வீடுகள் வெளியில் இருந்து பார்ப்பதற்கு மிகவும் சாதாரணமாகத் தோன்றினாலும் உள்ளே சென்று பார்த்தால் நம்மை வியக்க வைப்பதாகவே அமைந்துள்ளன. எல்லா வீடுகளிலும் அனைத்து நவீன வசதிகளையும் அவர்கள் தயார் செய்து வைத்துள்ளனர்.

கூப்பர் பேடி கிராமத்தில் உள்ள நிலத்தடி வீடுகளுக்கு கோடையில் ஏசியோ அல்லது குளிர்காலத்தில் ஹீட்டர்களோ தேவைப்படுவது இல்லை. இவர்களுக்கு தண்ணீர் 25 கிலோ மீட்டர் தொலைவுக்கு அப்பால் இருக்கிற பகுதியிலிருந்து குழாய் மூலமாக கொண்டு வரப்படுகிறது. பூமிக்கடியில் கட்டப்பட்ட இந்த வீடுகளில் அனைத்து வகையான வசதிகளும் உள்ளன. இது உலக அளவில் பிரபல்யம் பெற்றுள்ளமையினால், இங்கு பல ஹொலிவுட் திரைப்படங்களும் படமாக்கப்பட்டுள்ளன. 2000 ஆம் ஆண்டு வெளியான "பிட்ச் பிளாக்" படம் இங்குதான் எடுக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. அதன் பின்னர், "கூப்பர் பேடி" இப்போது சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் மையமாக மாறியுள்ளது. சுற்றுலா மூலம் "கூப்பர் பேடி' கிராமம் கணிசமான வருவாயை ஈட்டி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# கனவில் வந்த காரிகையைத் தேடி...?

ஆர். ராஜலிங்கம்

## அத்தியாயம் 9

தேநீர் தட்டுடன் பூங்குழலி வருவதைக் கண்ட தீபன் அவசர அவசரமாக எழுந்து "ஏம்மா, நான்தான் அன்றைக்கே சொன்னேனே. நீங்கள் ஏன் இதையெல்லாம் கொண்டுவாறீங்க?" என்று கேட்டான்.

"ஏன் அதனால் என்ன?"

"உங்களுக்கு ஏன் வீண் சிரமம் என்றுதான் சொன்னேன்"

"அதெல்லாம் ஒரு சிரமமும் இல்லை" என்றவள், அந்தப் பெண் வந்து தீபனுடன் பேசிக் கொண்டிருந்ததைப் பற்றிக் கேட்கலாமா என்று நினைத்தாள்.

பின்னர், "தீபன்... உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும். அது வந்து, அந்தப் பெண் உங்களிடம் வந்து என்ன பேசிக்கொண்டிருந்தாள்?" என்று கேட்டாள்.

இவங்க இதை ஏன் இவ்வளவு பெரிதுபடுத்திக் கேட்கிறாங்க என்று நினைத்த தீபன், "அது வந்தும்மா நம்ம கவிதாவோட ப்ரெண்டோட அம்மாதானாம் அவங்க. அந்தப் பிள்ளைக்கும் படிச்சுக் கொடுக்க முடியுமா என்று கேட்கத்தான் வந்தாங்க. தனியார் வகுப்புக்குக் கொடுக்கிற பீஸ எனக்கு தருவதாகவும் சொன்னாங்க"

"அப்படியா? அதுக்கு நீங்க என்ன சொன்னீங்க?"

"எனக்கு அந்தப் பொறுப்பை ஏற்க முடியாதுன்னு சொல்லிட்டேன்"

அவன் அப்படிச் சொன்னதற்காக மனதுக்குள் மகிழ்ந்துகொண்ட அவள், "ஏன் தீபன், அப்படிச் சொன்னீங்க?" என்று கேட்டாள்.

"ஏன்னா, கவிதாவுக்கு எனக்கு எப்ப எல்லாம் நேரம் கிடைக்குதோ அப்போ எல்லாம் படிச்சுக் கொடுக்கலாம். ஆனால் அந்தப் பிள்ளைக்கு தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் என்னால் படிப்பிக்க முடியாதுதானே. சிலநேரம் நேரத்தோடு வருவேன். சிலசமயம் நேரமாகி வருவேன். அதனாலதான் என்னால முடியாதுன்னு சொல்லிட்டேன்"

"அநியாயம்தானே தீபன். உங்களுக்கு அதுல ஏதும் வருமானம் கிடைக்கும்தானே?" என்று மனம் வருந்துவதுபோல் கேட்டாள்.

"எனக்கு இங்க என்னம்மா குறை இருக்கு? எல்லாவற்றையும் நீங்கள் செய்து தந்து இருக்கிறீர்கள்தானே. அந்த மாதிரி பொறுப்புகளை எடுத்தால் சரியா செய்யணும். முடியலேன்னா அந்தப் பிள்ளையோட படிப்புதானே பாதிக்கும்?"

"சரி. கடைசியா என்னதான் சொன்னீங்க?"

"நான் அந்தப் பிள்ளைக்கு படிப்பில் ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் நான் இருக்கும்போது வந்து கேட்கச் சொன்னேன். மற்றபடி தினமும் வகுப்பு நடத்த என்னால் முடியாது என்று சொல்லிட்டேன்"

"சரி சரி, உங்க விருப்பப்படி செய்ங்க" என்றவள், பின்னர் கவிதாவைப் பார்த்து, "என்ன கவிதா, உன்னோட படிப்பெல்லாம் எப்படி போகுது?" என்று கேட்டாள்.

"நல்லா படிக்கிறேம்மா. இந்த அங்கிள் நல்லா சொல்லித்தாறார். இப்ப படம் வரைய பழகுறேம்மா. இந்த அங்கிள் நல்லா படம் வரையிறார்"

"அப்படியா?"

"ஆமா, எதைப் பார்த்தாலும் அப்படியே வரைஞ்சிடுறார். இதோ பாருங்க, என்னைய பார்த்து வரைஞ்சிருக்கார்" என்று கூறி தீபன் வரைந்த ஓவியத்தைக் காட்டினாள்.

"அடடே, ஆமா, அப்படியே உன்னை அச்சொட்டா வரைந்திருக்கார். நல்லது நீயும் அங்கிள்கிட்ட கேட்டு வரையப் பழகிக்கோ" என்று கூறினாள். பின்னர், "சரி நான் போகிறேன்"

**தீபன், தன் கனவில் கண்டது போல், ஒரு பயங்கரக் குகை உண்மையிலேயே எங்கேயாவது இருக்கிறதா? மரண தண்டனைக் கைதிகளை அங்கு வைத்து தண்டனை வழங்கியதாகவும், அதுவும் பலநூறு வருடங்களுக்கு முன்னர் நடைபெற்றதென்றும் கனவில்தான் பேசிக்கொண்டார்கள். அது உண்மையாக இருக்குமா என சிந்தித்து குழம்பிக் கொண்டிருந்தான்.**



என்றபடி பூங்குழலி போகத் தயாரானாள். அப்பொழுது கவிதா, "அம்மா நானும் வருகிறேன்" என்று கூறியபடி தீபனிடம் "அங்கிள் நீங்க வரலையா?" என்று கேட்டாள்.

"இல்லம்மா, நான் கொஞ்ச நேரம் இங்கே இருந்துட்டு பிறகு வாறேன்" என்றான்.

தீபனுக்கு இப்பொழுது தனிமையே தேவைப்பட்டது. அன்று கண்ட கனவு அடிக்கடி அவன் எண்ணத்தில் நிழலாடிக் கொண்டிருந்தது. தனிமையிலிருக்கும்போதெல்லாம் அந்தக் கனவைப் பற்றியே சிந்திக்கலானான்.

கனவு பற்றி யாரிடமும் கூற முடியாத நிலை. கனவில் வந்த பெண் யார்? அவளை என்னால் மறக்க முடியவில்லையே! அவள் முகம் அப்படியே என் மனதில் பதிந்து விட்டது. உண்மையில் அப்படி ஒரு பெண் இருக்கிறாளா? அப்படியானால் அவள் யார்? எங்கு இருக்கிறாள்? என்று சிந்தித்து சிந்தித்து அவனுக்குப் பைத்தியம் பிடிப்பதுபோலிருந்தது.

அவன் என்று அந்தப் பெண்ணை கனவில் கண்டானோ, அன்றிலிருந்து தான் திருமணம் செய்வதாக இருந்தால் அந்தப் பெண்ணைத்தான் எப்படியாவது தேடிப்பிடித்து திருமணம் செய்துகொள்ளவேண்டுமென்று மனதில் நினைத்துக் கொண்டான். ஆனால், அது நடைபெறக்கூடிய காரியமா? கனவில் வந்தவளை என்னால் அடைய முடியுமா என்று பலவாறு சித்தித்தான். அவளுடன் நீண்டகாலம் பழகியது போன்ற ஓர் உணர்வு அவனுக்கு ஏற்பட்டது.

அதே சமயம் அந்தக் கனவில் கண்ட இன்னொரு நிகழ்வு அவன் மனதை வெகுவாக உறுத்திக்கொண்டிருந்தது. அதாவது, பூங்குழலி என்ற அந்தப் பெண்ணின் அண்ணனும் அவனுடைய நண்பனும் சேர்ந்து தன்னை அந்தக் குகையில் உள்ள கொலைக்களம் என்று கூறப்பட்ட பாறையில் கிடத்தி தாக்கினார்களே.

கடைசியாக அவர்கள் தன்னை அந்தக் கொலை ஆயுதத்தால் தாக்குவதுபோல் அந்தக் கனவு முடிந்தது. அப்படியானால் அப்படி ஒரு பயங்கரக் குகை உண்மையிலேயே எங்கேயாவது இருக்கிறதா? மரண தண்டனைக் கைதிகளை அங்கு வைத்து தண்டனை வழங்கியதாகவும், அதுவும் பலநூறு வருடங்களுக்கு முன்னர் நடைபெற்றதென்றும் கனவில்தான் பேசிக்கொண்டார்கள். அது உண்மையாக இருக்குமா? அந்தக் குகைபற்றிய விஷயம் மர்மமாக இருக்கிறது. உண்மையிலேயே அப்படி ஒரு குகை இருக்கிறதா? அங்கு வைத்து அவர்கள் என்னைக் கொன்று விட்டது போன்ற ஓர் உணர்வும் ஏற்படுகிறதே. ஏன் இப்படிப்பட்ட கனவு எனக்கு வந்ததென்று புரியவில்லையே! இப்படி பலவாறு சிந்தித்தபோது அவனுக்கு ஒரு விடயம் நினைவுக்கு வந்தது.

(தொடரும்....)

## குறுக்கெழுத்துப் போட்டி-10

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | | 5 |
| | ■ | 6 | | 7 | | ■ | |
| 8 | | ■ | 9 | | | ■ | |
| | ■ | ■ | 10 | | | 11 | |
| ■ | 12 | 13 | ■ | | ■ | | ■ |
| 14 | ■ | 15 | | ■ | 16 | | 17 |
| 18 | | | ■ | 19 | | | |
| | ■ | 20 | | | ■ | ■ | |

### இடமிருந்து வலம்

1. உலகுக்கு தீங்கு வரும் காலத்தில் வானில் இது தோன்றுமாம்.
4. வாழ்நாளைக் குறிக்கும்.
6. காதணியிலும் காணப்படும். குழம்பி.
8. துர்மணத்தைக் குறிக்கும். திரும்பி.
9. சந்தேகம் என்றும் சொல்லலாம். குழம்பி.
10. கணவன் வீட்டை குறிக்கும். குழம்பி.
12. பூமி என்றும் சொல்லலாம்.
15. தாத்தா, பாட்டிமாரிடம் குழந்தைகள் விரும்பி கேட்பது.
16. இது இட்டவரை உள்ளளவும் நினை என்பார்கள். திரும்பி.
18. விவசாயம் என்றும் சொல்லலாம்.
19. மகளை குறிக்கும். குழம்பி.
20. செருக்கு என்றும் பொருள்படும்.

### மேலிருந்து கீழ்

1. சிறிய மீனைப் போட்டு பெரிய மீனை இதன்மூலம் பிடிப்பார்கள்.
2. நீர்நிலை ஒன்றையும் குறிக்கும்.
3. சிறிய இதுவும் பல்குத்த உதவும் என்பார்கள்.
4. இதற்கும் கடலுக்கும் நீல நிறம்.
5. மனிதரையும் குறிக்கும். குழம்பி.
7. தொன்று தொட்டு வரும் வழக்கத்தை குறிக்கும். குழம்பி.
11. மகிழ்ச்சி என்றும் சொல்லலாம்.
13. முற்பிறவியில் செய்த இதன் பலனையே இப்பிறவியில் அனுபவிக்கிறோம் என்கின்றன வேதங்கள். குழம்பி.
14. கருத்து என்றும் சொல்லலாம்.
16. பொறுமைக்கு உதாரணமாகக் கூறப்படும் இது மிதித்தாலும் வளைந்து கொடுக்கும்.
17. பலனை எதிர்பாராமல் செய்வது.
19. இதுவே பெரு விருட்சமாகிறது.

**உங்கள் பதில்களை தபால் அட்டையில் ஒட்டி பெயர், முகவரியுடன் எமக்கு அனுப்பி வைக்கலாம்.**

**ஒருவன் வாரவெளியீடு, ஆசிரியர் பீடம், பெல்லாட்ரிக்ஸ் கட்டிடம், 2ஆம் மாடி, டெனிஸ்டர் சில்வா மாவத்தை, கொழும்பு – 09**

## சென்ற வாரத்திற்கான விடை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 கு | ரு | 2 த | ட் | 3 சி | 4 னை | ■ | ■ |
| ப் | ■ | னி | ■ | 5 ல | ஆ | 6 ம் | ■ |
| பை | ■ | ம | ■ | ம் | ■ | 7 தோ | 8 ணி |
| மே | ■ | 9 ரி | 10 ம் | ப | 11 ம் | ■ | கா |
| னி | ■ | 12 ம | க | ம் | ப | ■ | ■ |
| ■ | 13 லு | ■ | ப | ■ | 14 கோ | ப் | 15 பி |
| 16 சா | ன் | றோ | ர் | ■ | ■ | ■ | த் |
| 17 லை | க | ■ | ■ | 18 ஐ | ம் | ப | த |

### பாராட்டுப் பெறுவோர்

1. எம்.என்.அப்லல் அஹமத், நாங்கல்ல.
2. எஃப்.ஏ.ஆர்.ஷகூர், மடவளபஸார்.
3. கே.கனிஷ்கா, வவுனியா.
4. எம்.ஸ்ரீகாந்த், சிலாபம்.
5. எஸ்.கோகிலா, மாத்தளை.

## ரிஷா பேசுகிறேன் ..

# முகநூலில் பல முகங்கள்..

- முகநூலில் மற்றவரின் பதிவுகளை "ஷெயார்" செய்ய விருப்பம் கொள்ளார்... ஆனால், தொலைபேசியில் அழைப்பெடுப்பார்.. தமது பதிவுகளை "ஷெயார்" செய்யச் சொல்வார் .. பிறருக்கு தொல்லை கொடுப்பார்..இல்லையேல் கோபம் கொள்வார்..



- முகநூலில் எல்லோருக்கும் அழைப்பு (Friend Request) அனுப்பி நட்பு வட்டத்தை அதிகரிப்பதில் குறியாக இருப்பர்.. ஆயிரக் கணக்கில் நட்புக்களை சேர்த்திருப்பர்.. ஆனால், அவர்களில் எவருக்குமே இவர்கள் "லைக்" போட மாட்டார்.. மாறாக அவர்களிடமிருந்து தமது பதிவுகளுக்கு இவர்கள் "லைக்" எதிர்பார்ப்பர்.
- பதிவுகளை போடும் பலரும் அதிகமாய் "லைக்" எதிர்பார்ப்பர்.. ஆனால், இவர்களில் சிலர் தமது தொழில்துறை சார்ந்தோருக்கு மட்டுமே "லைக்" போடுவர், அவர்களோடு மட்டுமே நட்பு பாராட்டுவர்.. இவர்களின் முகநூல் நட்புக்களின் எண்ணிக்கையோ ஆயிரக்கணக்கில் இருக்கும்.. ஆனால் அவர்களை இவர்கள் கண்டுகொள்வதே இல்லை..
- சிலர் இத்தனை காலமும் பட்டினி கிடந்தனரோ என எண்ணத் தோன்றும்.. காரணம், இப்போதுதான் உண்ணக் கிடைத்தது போல் சாப்பாடு வகைகளை உண்ணும் காட்சிகளை முகநூலில் பதிவிடுவர்.. அதிலும் ஒரு பெருமை இவர்களுக்கு..
- மற்றவர்கள் ஏதேனும் ஒரு பதிவு போட்டிடவே, அதற்கு "நெக்கட்டிவ்" கொமென்ட்களை கொடுத்திடவே, முகநூலில் வலம் வருமே ஒரு கூட்டமே.. வைத்தியம் இல்லாத பைத்தியங்களாய் 24 மணிநேர டியூட்டி இவர்களுக்கு..
- அறிந்தவர் அறியாதவர் எவராய் இருந்தாலும் பிறருக்கு முகநூலில் பிறந்தநாள் வாழ்த்து பதிவிடும் கண்ணியம் மிக்க நல்ல மனம் கொண்டவர்களும் இருக்கவே செய்கின்றனர்..
- புது ஆடை உடுத்தி விட்டால் தமது புகைப்படங்களை பதிவிடுவதும், பின்னர் அதற்கு எத்தனை "லைக்ஸ்" வந்துள்ளன என கணக்குப் பார்ப்பதும், கிரிக்கெட் ஸ்கோர் அறிவதைப் போல் அடிக்கடி கைபேசியை தட்டிப் பார்ப்பதும் மனநோய் என ஆகிவிட்டதே..
- முகநூலில் உறங்கும் (செயலற்ற) நட்புக்களும் சிலர் உளர்.. எதுவும் பதிவிட மாட்டார்.. ஆனால், மற்றவர்களின் பதிவுகளை ஊடாட்டம் பார்ப்பார்.. பார்த்ததாக காட்டிக்கொள்ள மாட்டார். இதுவும் முகநூலில் ஒரு ரகம்..
- முகநூலில் மிகுந்த தொந்தரவுக் காரர்கள் யார் தெரியுமா...? இந்த Tag பேர்வழிகள் தான்.. இவர்களைக் கண்டாலே ஓட்டம் எடுக்கும் கூட்டம் தான் அதிகமாச்சு..

- ரிஷா

## படித்ததில் பிடித்தது

# தற்பெருமை

ஒருவருக்கு நாள் குறித்துவிட்டால், அந்த நாளில் உயிரை எமன் எடுத்துவிடுவார் என்று சொல்வார்கள். அப்படி ஒரு சிற்பிக்கு நாள் குறித்துவிட்டார் எமன். அந்த நாள் பற்றி சிற்பிக்கும் எப்படியோ தெரியவந்துவிட்டது.

சிற்பிக்கு இறக்க விருப்பமில்லை. எமன் ஒருமுறைதான் பாசக்கயிற்றை வீசுவார். அதில் தவறிவிட்டால், மீண்டும் வீசி உயிரைப் பறிக்கும் அதிகாரம் எமனுக்கு இல்லை என்பதும் சிற்பிக்கு தெரியும். அதனைப் பயன்படுத்திக்கொள்ள ஒரு யுக்தி செய்தார். தன் திறமை எல்லாம் காட்டி தன்னைப் போலவே அச்சு அசலாக இரண்டு சிலைகள் செய்தார்.

எமன் வரும் நேரம் அவற்றை தரையில் சாய்த்து படுக்கவைத்துவிட்டு, நடுவில் தானும் படுத்து கண்ணை மூடிக்கொண்டார். எமன் வந்தார். பார்த்தார், திகைத்துப் போனார். மூன்றும் சிலைகளா? இல்லை இரண்டுதான் என்பதை யூகித்துவிட்டார்.

ஆனால், எவை சிலைகள், எது



சிற்பி என்பதைத்தான் அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை. அவ்வளவு நேர்த்தி. தவறாக சிலையின் மீது கயிற்றை வீசிவிடக்கூடாதே! நேரம் ஓடிக் கொண்டிருந்தது. யோசித்தார். ஒரு யோசனை வந்தது.

சத்தமாக வாய்விட்டுச் சொன்னார், 'அட என்ன தத்ரூபமாக இருக்கிறது! இவற்றைச் செய்த சிற்பியை என்னால் பாராட்டாமல் இருக்கவே முடியாது. என்னாலேயே எது சிலை எது ஆள் என்று கண்டுபிடிக்க முடியவில்லையே! இப்படி சொல்லிவிட்டு மூன்று சிலைகளையும் உன்னிப்பாக கவனித்தார். அவர் எதிர்பார்த்தது நடந்தது. நடுவில் படுத்திருந்த சிலையின் உதட்டில் இலேசான முறுவல் தெரிந்தது. தற்பெருமைதான், வேறென்ன! சடாரென வீசினார் கயிற்றை.

கெடுத்தது எது? தான் என்கிற ஈகோ. ஆக பலருடைய பிரச்சினைகளுக்கு, மனவருத்–தங்கள், மற்றும் சோர்வுகளுக்கு காரணம், நான் தான், தனது, நான் தான் பெரியவன் என்கின்ற எண்ணங்களை ஒழித்தோம் என்றால் நாமும் மிகப்பெரிய வெற்றியாளர்களே...!

# பொங்கலில் பூத்த புன்னகை...!

பொங்கல் பொங்கிக் கொண்டிருந்தது அதைவிட உக்கிரமாக அன்புக்கரசி-யின் மனம் பொங்கிக் கொண்டிருந்து...

“ச்சே.. இவனைப் போயா இத்தனை ஆண்டுகள் உயிருக்குயிராய் காதலித்தோம். இவனுக்காக பெற்றோர், சகோதரர்களைக் கூட பகைத்துக் கொண்டேனே.. காதல் என்பது கனவு மாதிரி என்று சும்மாவா சொன்னார்கள்? இவனுக்காக நான் எத்தனைத் தியாகங்களை செய்துள்ளேன். உலகமே இவன் என்று இருந்தேனே.. என்னைப் போய் இப்படி ஏமாற்றிவிட்டானே. என் தவறுதான். இவனை நல்லவன் என்று எண்ணி ஏமாந்துவிட்டேனே. நான் தான் மடச்சி.. அவன் மீது எனக்கிருந்த கண்மூடித்தனமான காதலால் என் வாழ்க்கையையே கெடுத்துக்கொண்டேன். என் தலையில் நானே மண்ணை-வாறிவிட்டுக் கொண்டேனே..”

அன்புக்கரசி.. பெயரைப் போலவே, குணத்திலும் அவள் அன்புக்கு அரசி தான். அனைவரிடமும் அன்பு காட்டுவதில் அவளுக்கு இணை அவள்தான் என்று சொல்லலாம். அழகிலும் அவளுக்கு குறையில்லை. பார்த்தவரை வசீகரிக்கும் பேரழகி என்று சொன்னால் மிகையாகாது.

அவளை 5 வருடங்களுக்கு மேல் துரத்தி துரத்தி காதலித்தான் ராஜேஷ். அன்புக்கரசி ஆரம்பத்தில் அவனை ஏற்க முடியாது என்று கண்டிப்பாக கூறினாலும், நாளாக நாளாக அவன்மேல் அவளுக்கு காதல் துளிர்விட்டது. ஆனால், தன் வீட்டை நினைத்து, காதலை தனக்குள்ளேயே மறைத்துக்கொண்டாள். சுமார் ஐந்து வருடங்களுக்குப் பின் ஒரு நாள், அவளும் அவனை விரும்புவதை ஒத்துக்கொண்டாள்.

அது முதல் ராஜேஷ் அவளைக் கொண்டாடத் தொடங்கினான். அவன் காட்டும் அன்பை பார்க்கையில் அவளுக்கு, உலகில் அவனை விட யாராலும் தன்மீது இப்படி அன்புகாட்ட முடியாது எனத்தோன்றியது. அவனுக்காக என்னவேண்டுமானாலும் செய்யலாம் என்று எண்ணினாள். அவன் அன்புக்கு அவள் அடிமையாகவே மாறினாள்.

சுமார் இரண்டு வருடங்களுக்கு மேல் வீட்டாருக்குத் தெரியாமல் வளர்ந்துகொண்டே போன இவர்கள் காதல், ஒரு நாள் அன்புக்கரசியின் தந்தைக்குத் தெரிந்துவிட்டது. இவர்களின் காதல் விவகாரம் அன்புக்கரசியின் வீட்டில் பெரும் பிரளயத்தையே ஏற்படுத்திவிட்டது. எவ்வளவு போராடியும் அவளின் அப்பா சம்மதம் தருவதாக இல்லை. வீட்டில் அவளுக்கு தீவிரமாக வரன் தேடும் படலம் ஆரம்பித்தது. பல நல்ல குடும்பங்களில் வரன் தேடினார்கள்.


ராஜேஷோ நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவன். ஒரு உள்ளூர் நிறுவனத்தில், சாதாரண சம்பளத்தில் பணிபுரிந்து வந்த அவனுக்கு, குடும்ப பொறுப்புகள் ஏராளம். அப்பா, அம்மா, திருமணத்துக்காக காத்திருக்கும் அக்கா, உயர்தரத்தில் படித்துக்கொண்டிருக்கும் தங்கை என அனைவரும் அவனின் மாத வருமானத்தையே நம்பிக்கொண்டிருந்தார்கள்.

அன்புக்கரசி செல்வந்த வீட்டுப் பெண்ணாக இருந்தாலும், ராஜேஷின் வறுமையை பெரிதாக எடுத்துக்கொள்ளவே இல்லை. அவனின் அன்பும், காதலும் மட்டுமே அவளுக்கு விலைமதிப்பற்றதாக இருந்தது. அவனுக்கு நிகர் யாரும் இல்லை என ஆழமாக நம்பினாள்.

நாட்கள் சென்று கொண்டிருந்தன. அன்புக்கரசி தனக்கு வீட்டில் பார்த்து வரும் அனைத்து வரன்களையும் ஏதாவதொன்று கூறி அவற்றை தட்டிக்கழித்தபடியே இருந்தாள். ஆனால் ராஜேஷ், அன்புக்கரசியின் காதல் மட்டும் யாருக்கும் தெரியாமல் வளர்ந்துகொண்டே இருந்தது.

ஆனால், அவர்களுக்கு ஒன்று மட்டும் உறுதியாக தெரிந்தது. ராஜேஷின் வாழ்க்கை தரம் உயரும் பட்சத்தில் மாத்திரமே அவர்கள் காதல் கைகூடும் என்பதை இருவரும் உணர்ந்திருந்தார்கள். அதற்காக ராஜேஷ் கடுமையாக உழைத்தான். அன்புக்கரசி கோயில் கோயிலாக சுற்றினாள். இறைவன் மீது பாரத்தைபோட்டு, தன் காதலை தனக்குள்ளேயே பொத்திப் பாதுகாத்தாள்.

இரண்டு வருடங்கள் கழிந்தன.




ராஜேஷ் இப்போது ஒரு பலசரக்கு கடைக்கு முதலாளி. அவனின் அக்காவுக்கும் திருமணம் முடிந்தாகி விட்டது. இப்போது அவன் வாழ்க்கைத் தரம் ஓரளவுக்கு உயர்ந்திருந்தது. அவனுக்கு கீழ், ஐந்தாறு பேர் பணிபுரிந்தார்கள். அன்புக்கரசியும், அவனும் பார்த்துக் கொள்வதே கிடையாது. எப்போதாவது ஒருநாள் அவள் அவனை தொலைபேசி வாயிலாக மட்டும் தொடர்பு கொள்வாள். சுமார் முப்பது நிமிடங்கள் மாத்திரமே அவர்கள் உரையாடல் இருக்கும். அவனுடன் பேசும் அந்த நிமிடங்கள், அவளுக்கு சொர்க்கத்தில் இருப்பது போல் இருக்கும். எப்படியும் தம் காதல் கைகூடும் என்பதில் அன்புக்கரசி அசையா நம்பிக்கையுடன் இருந்தாள்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் அன்புக்கரசியிடமிருந்து ராஜேஷ்‘க்கு அழைப்பு.

“ராஜேஷ்..”

“சொல்லு அன்பு.. என்ன இந்த நேரத்துல கோல் பண்ணியிருக்க?”

“நாங்க இவ்ளோ நாள் எதுக்காக வெயிட் பண்ணினமோ அது நடக்கப் போகுது. அப்பா உங்கள பார்த்து பேசணும்னு சொன்னாரு. அதான்.. பொங்கல் அன்னைக்கி உங்கள வீட்டுக்கு வர சொன்னாரு” அன்புக்கரசி பூரிப்புடன் சொன்னாள். அவள் இதுவரை இந்தளவு மகிழ்ச்சியாக பேசியதை ராஜேஷ் கண்டதே இல்லை. மனதுக்குள் துள்ளிக் குதித்தான் அவன்.

அன்புக்கரசி நாட்களை எண்ணிக் கொண்டிருந்தாள். பொங்கலுக்கு இன்னும் இருப்பது 3 நாட்களே. உருகி உருகி காதலித்த தன்னவனை, பெற்றோர் அனுமதியுடன் சந்திக்கப் போவதை எண்ணி அவள் மனம் சிறகடித்துப் பறந்தது. தைபிறந்தால் வழிபிறக்கும் என்பார்கள். அதற்கமைவாகவே இந்தத் தைப்பொங்கலுடன் தனக்கும் வழி பிறக்கப்போகிறது என்பதை எண்ணி மகிழ்ச்சியில் திளைத்தாள்.

அன்று தைத்திருநாள். விடிவதற்குள்ளேயே தன்னவன் வருகைக்காகத் தயாரானாள். தன்னை ஆசை ஆசையாக அழகுபடுத்திக்கொண்டாள். அப்போது...

“அன்புக்கரசி..”

“என்னம்மா..”

“நேத்து கரும்பு வாங்கிட்டு வந்தது போதாம போயிருச்சி... இன்னும் ரெண்டு கரும்பாவது வேணும். பள்ளத்துல கமலா ஆண்ட்டி தோட்டத்துல போய் ரெண்டு கரும்பு பறிச்சிட்டு வறியா..”

அம்மா இப்படி கேட்கவும், அன்புக்கரசிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ராஜேஷின் வருகைக்காக காத்திருக்கும் சமயத்தில், அம்மா இப்படி வேலை வைக்கிறாரே என தன்னைத் தானே நொந்து கொண்டாள்”

ஆனால், அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல், அம்மாவிடம் தலையாட்டிவிட்டு, அம்மா சொன்ன கரும்புத் தோட்டத்துக்குச் சென்றாள். அவள் எண்ணம் முழுவதும் ராஜேஷை பற்றியே இருந்தது. கரும்புத் தோட்டத்துக்குள் சிறிது தூரம் சென்றவளுக்கு ஏதோ சத்தம் கேட்பது போல் இருந்தது. அங்கு ஓரிடத்தில் புற்கள் அசைந்து கொண்டிருந்தன. அங்கே யாரோ இருப்பது போல் தோன்றியது.

சரி.. என்னதான் என்று பார்ப்போம் என்று முன்னேறிச் சென்றவளுக்கு பேரதிர்ச்சி காத்திருந்தது. அங்கே அவள் உயிருக்குயிராய் காதலித்த ராஜேஷ் இன்னொரு பெண்ணுடன் இருப்பதைக் கண்டு ஒரு நிமிடம் அவள் இதயமே நின்றுபோனது போல் ஆயிற்று. அந்தப் பெண்ணின் கால், ராஜேஷின் மடியில் இருந்தது. ராஜேஷ் அவள் கால்களில்..

அதற்குமேல் அவளால் ஒருநிமிடமும் அங்கு நிற்கமுடியவில்லை. தலை சுற்றுவது போலிருந்தது. வாழ்க்கையே இருண்டு போவது போல் உணர்ந்தாள். இதயம் துடிதுடிக்க அங்கிருந்து விருட்டென திரும்பி நடந்தாள். அழுதுகொண்டே வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்.

“எங்கடி கரும்பு?”

அம்மா கேட்ட கேள்வி கூட அவள் செவியில் விழவில்லை. அப்படியே போய் கட்டிலில் படுத்து தேம்பி தேம்பி அழுதாள். சிறிது நேரத்தில், அம்மா அவளை அழைப்பது கேட்டது. முகத்தைக் கழுவிகொண்டு வந்தாள்.

“அன்புக்கரசி பொங்கல ஒருக்கா பாத்துக்கோ. நான் பக்கத்துல கடைக்கு கொஞ்சம் போய்ட்டு வாறேன்”

பதிலேதும் சொல்லாதவள், பொங்கல் பொங்குவதைக் கண்டு, கரண்டியை எடுத்து பொங்கலை கிளறிக் கொண்டிருந்தாள்.. பொங்கல் பொங்குவதைப் போலவே அவள் உள்ளமும் பொங்கிக் கொண்டிருந்தது. அவள் கண்டகாட்சி திரும்பத் திரும்ப அவள் கண்கள் முன்னே வந்து சென்றது.

நேரம் சென்றுகொண்டே இருந்தது. இன்று வீட்டுக்கு வருவதாக சொன்ன ராஜேஷை இன்னும் காணவில்லை. ஒரு கட்டத்தில் அப்பாவே ராஜேஷை பற்றி பேச்செடுத்தார்..

“அன்புக்கரசி எங்க இன்னும் ராஜேஷை காணோம்...?”

அவளால் எதுவும் பேச முடியவில்லை.

“தெரியலப்பா...” என்றவளுக்கு அதற்குமேல் ஒரு நொடி கூட அங்கு நிற்கமுடியவில்லை. தன் அறையில் சென்று கதவை தாளிட்டுக் கொண்டாள். நடந்தவற்றை நினைத்து அழுதுகொண்டே இருந்தவள், அப்படியே உறங்கியும் போனாள்.

இரவு ஏழு மணியிருக்கும். ஏதோ பேச்சு சத்தம் கேட்டது. அந்தக் குரல்... ம்.. அது ராஜேஷின் குரல்தான். ராஜேஷ்‘ம் அவள் தந்தையும் தான் பேசிக்கொண்டிருந்தார்கள்.

“என்ன ராஜேஷ்.. ஏன் இவ்வளவு நேரம்... காலையிலயே வருவீங்கன்னு எதிர்பார்த்தோம்”

“இல்ல அங்கிள்.. நான் காலையிலயே வந்துட்டேன். உங்க வீட்டுக்கு வார வழியில் ஒரு கரும்புத்தோட்டம் இருக்குல்ல..”

“ஆமாம்.. அங்க என்ன?”

“அங்க ஒரு அக்கா மயங்கிக் கிடந்தாங்க. நான் பக்கத்துல போய் பார்த்தேன்.. அவங்க பேச்சு மூச்சில்லாம கிடந்தாங்க. வாயில நொறநொறயா வந்துட்டு இருந்துச்சி.. கிட்ட போய் பார்த்தா அவங்க காலுல பாம்பு கடிச்ச அடையாளம். விஷப்பாம்பு ஏதோ கடிச்சிருக்கும் போல..”

“ஐயையோ.. அப்புறம் என்னாச்சு..?”

“எனக்கு என்ன செய்றதுன்னே தெரியல. உடனே பாம்பு கடிச்ச இடத்துல வாய்வச்சு விஷத்த உறிஞ்சி துப்பிட்டு, உடனே அவங்கள தூக்கிட்டு ஹொஸ்பிடல் போனேன். இவ்வளவு நேரம் ஹொஸ்பிடல்ல தான் இருந்தேன். இப்பதான் அவங்களுக்கு மயக்கம் தெளிஞ்சிச்சி. சொல்லிட்டு வாறதுக்கு கொஞ்சம் லேட்டாகிடுச்சு. மன்னிச்சுடுங்க அங்கிள்..”

ராஜேஷ் பேசிக்கொண்டே போனான். அன்புக்கரசி முகத்தில் அழுகையோடு சிரிப்பும் கலந்து பொங்கின. வார்த்தைகள் வரவில்லை...

“அன்புக்கரசி ராஜேஷ்கு பொங்கல் எடுத்துட்டு வா..” அப்பா தான் சொன்னார்.

அன்புக்கரசி துள்ளிக் குதித்து ஓடிச்சென்றாள் தன்னவனுக்காக பொங்கல் கொண்டுவர.. தட்டில் ஆசையாக பொங்கல் எடுத்து வைத்தாள். அதில் சிறிதை எடுத்து சுவைத்துப் பார்த்தாள். பொங்கல் மிகவும் தித்திப்பாக இருந்தது... பொங்கல் மட்டுமல்ல... இனி அவள் வாழ்க்கையும் தான்...

(சுபம்)

## வாசகர் உலா

# எழுபத்தைந்து வயதில்.. ஆதரவின்றி தவிக்குது மனசு...

நாற்பதைந்து வருடம் – ஒரு நாளாவது
அவளை கொண்டாடி இருக்கலாம்..!
அவள் சமையலை ஒருமுறையாவது
மனம் நிறைய பாராட்டி இருக்கலாம்..!
ஒரு நாளாவது நான் சமையல் செய்து
அவளுக்கு ஊட்டி இருக்கலாம்..!
ஒரு நாளாவது அவளுக்கு பதில் – நான் அவளது
துணியையும் சேர்த்து துவைத்து இருக்கலாம்..!
ஒரு நாளாவது தொலைக்காட்சியையும்,
தொலைபேசியையும் அணைத்துவிட்டு,
அவளை கொஞ்சி இருக்கலாம்..!
ஒரு நாளாவது வேலை தளத்தின்
கோபத்தையும் எரிச்சலையும் அங்கேயே
விட்டு விட்டு வந்து இருக்கலாம்..!
ஒரு நாளாவது, என் விடுமுறை நாட்களில்–
அவளை சினிமாவுக்கு அழைத்து
சென்று இருக்கலாம்..!
ஊர் ஊராய் சுற்றி அவளை
உற்சாகப்படுத்தி இருக்கலாம்..!
அவள் விரும்பி கேட்காத போதும் –
ஒரு புடவை வாங்கி கொடுத்து இருக்கலாம்..!
ஒரு மாசமாவது என் முழு சம்பளப் பணத்தை
அவளிடமே கொடுத்து இருக்கலாம்..!
ஒரு நாளாவது காலையில் அலாரத்தை
கொஞ்சம் அணைத்து வைத்து அவளை
தூங்க விட்டு இருக்கலாம்..!
நீ சாப்பிட்டியா என்று அவளை
ஒரு நாளாவது கேட்டு இருக்கலாம்..!
நீயும் வா என்னுடன் வந்து சாப்பிடு என்று
ஒரு நாளாவது சொல்லி இருக்கலாம்..!
அவள் உடல் நலத்தைப் பற்றி
ஒருமுறையாவது விசாரித்து இருக்கலாம்..!
அவள் தன்னை கவனிப்பதை விடுத்து பிள்ளைகளை
மட்டும் கவனிப்பதை கண்டு நான் கொஞ்சம் –
அவளை கவனித்திருக்கலாம்..!
அவள் நோயில் விழுந்த போது நான் கடன் பட்டேனும்
அவளை காப்பாற்றி இருக்கலாம்..!
என் தாயே! தாரமே! நீ என்னுடன் இருந்த போது
நான் கம்பீரமாய் வாழ்ந்தேன்..!
நீ என்னை விட்டு போனதும் நான்
பலமுறை கால் தடுக்கி விழுகிறேன்..!
என்னை தூக்கி விடவும்
மூத்தவனுக்கு நேரம் இல்லை..!
தேநீர் ஏதாவது போட்டுத்தரக் கேட்டால்
இளையவளுக்கு சினம் வருது..!
என் மனைவியே உன்னை நான் தினமும்
கொண்டாடி இருக்க வேண்டும்..!
நான் தவறுகள் இழைத்ததற்கு
என்னை நீ மன்னித்து விடு..!
ஒரு முழப் பூவாவது ஒரு நாளாவது
உனக்கு வாங்கி தராதவன் நான்..!
மூச்சு இழந்த – உன் புகைப்படத்துக்கு தினம் தினம்
மாலை இட்டு உன்னிடம் மன்னிப்பு கேட்கிறேன்..!
மனைவியே! என்னை மன்னித்து விடு..!
மீண்டும் ஒரு பிறப்பு இருக்கும் என்றால் நீயே என்
மனைவியாய் வந்து விடு..!
நான் உன்னை கொண்டாட வேண்டும்..!
எழுபத்தைந்து வயதில்..!
இந்த நிலை யாருக்கும் வராமலிருக்க..!
உங்கள் மனைவியை தினமும் நீங்கள் நேசியுங்கள்..
வாழ்க்கை வசந்தமாகும்..!

**எஸ்.சஜன், திருகோணமலை**





# காதலியை கவர சிங்கக் கூட்டுக்குள் நுழைந்தவருக்கு ஏற்பட்ட நிலை




மிருகக் காட்சி சாலை ஒன்றுக்குள் நபர் ஒருவர் தனது காதலியை கவர்வதற்காக அங்குள்ள சிங்கக் கூட்டுக்குள் நுழைந்ததால் ஏற்பட்ட நிலை பலரையும் அதிர்ச்சியடையச் செய்தது. சிங்கம் அவரை உயிருடனேயே கடித்துக் குதறி உணவாக்கிக் கொண்ட பயங்கரம் அங்கு நிகழ்ந்துள்ளது.

உஸ்பெகிஸ்தானில் உள்ள தனியார் மிருகக்காட்சிச் சாலையிலேயே இந்த பயங்கரமும், சோகமும் நிறைந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது. ஜரிஷ்குளோவ் (Iriskulov) என்னும் 44 வயது நபருக்கே இந்த சோகம் நடைபெற்றுள்ளது.

தனக்கு ஏற்படப்போகும் கொடூரம் பற்றி அறியாத நிலையில் அவர் அந்த இறுதி தருணங்களை தனது கெமராவில் படமாக்கிக் கொண்டார்.

ஆரம்பத்தில் மூன்று சிங்கங்கள் அவரை நெருங்கி அமைதியாக அமர்ந்து கொண்டு இருந்ததால் அவர் தனக்கு நேரவிருந்த ஆபத்துபற்றி அறிய முடியாமல் இருந்தது. திடீரென அந்த சிங்கங்கள் அவரை வேட்டையாட முனையும் போது அவர் அதிர்ச்சியுடன் சிறிது பின் வாங்கினார். அவற்றுடன் மிகுந்த பரிச்சமுள்ள அவர் அவற்றின் தாக்குதலில் இருந்து தப்புவதற்காக அதில் சிம்பா என்னும் பெயருடைய சிங்கத்தை "சிம்பா அமைதியாக இரு" என்று மீண்டும் மீண்டும் கத்தியிருக்கிறார்.

அதேவேளை, அவர் தனது காதலிக்கு அனுப்புவதற்காக அந்தக் காட்சியை வீடியோவில் படமாக்கிக் கொண்டும் இருந்துள்ளார்.

அந்த சிங்கங்களில் ஒன்றை அவர் செல்லப் பிராணிபோல பராமரித்து வந்துள்ளார். அதனால் அவை தன்னை நெருங்கி வந்ததைக் கண்டும் அவற்றால் தனக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது என்று நம்பியதால் ஏற்படப் போகும் ஆபத்தை உணரவில்லை.

அதனால் அவற்றின் உடலில் மெதுவாக தட்டிக் கொடுத்துள்ளார். அதில் ஒரு சிங்கம் அவரை நாக்கால் நக்கி தனது அன்பை வெளிப்படுத்தியபோது அவர் மெதுவாக அங்குள்ள இரும்புக் கதவை நோக்கிச் சென்றுள்ளார். அவ்வேளையில் சிங்கங்கள் அவர் மீது பாய்ந்து அவர் முகத்தை தம் கூரிய நகங்களால் கிழித்து அவரை உயிருடன் உண்ணத் தொடங்கின.

மீட்புப் பணியாளர்கள் விரைந்து செயல்பட்டு இரண்டு சிங்கங்களை அமைதிப்படுத்தியதுடன் மூன்றாவது சிங்கத்தைச் சுட்டுக் கொன்றனர்.

சிங்கங்கள் அவரைக் கொன்று அவர் உடலின் ஒரு பகுதியை உணவாக்கிக் கொண்டதாக அதிகாரபூர்வ தகவல்கள் தெரிவித்தன. அவர் உடலின் சில பாகங்களை சுமார் 4 மணித்தியா லத்துக்குப் பின்னர் தொழிலாளர்கள் கண்டனர். ஏற்கனவே இவர் சிங்கக் குட்டிகளுடன் சேர்ந்திருக்கும் படங்களை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அபூர்வ உயிரினங்கள்



### கொமொடோ ட்ரகன்

உலகின் மிகப்பெரிய பல்லி இனமான (Komodo dragon) கொமொடோ ட்ரகனுக்கு பொதுவான இரண்டு கண்களுக்கு மேலதிகமாக தலையில் பாரிட்டல் கண்கள் (pariet al eyes) என்னும் ஒளியையும், இருளையும் உணரும் இரண்டு கண்கள் உள்ளன. இந்த பல்லி இனம் கொமொடோ, ரின்கா, ப்ளொர் தீவுகளிலும் இந்தோனேசியாவிலும் வாழ்கின்றன.



### ஒப்பபீனியா

ஒப்பபீனியா (Opabinia) என்பது வித்தியாசமான, மென்மையான உடல் அமைப்பும், விசிறி போன்ற வாலும் கொண்ட ஐந்து கண்களுடைய அருகிவரும் ஓர் உயிரினமாகும்.



### குதிக்கும் சிலந்தி

குதிக்கும் சிலந்தி (jumping spider)தமது இரையை வேட்டையாடுவதற்கு தெளிவான பார்வையை வழங்குவது எட்டு கண்களைக்கொண்ட அராக்னிட்(arachnid) ஆகும். (அராக்னிட் என்பது சிலந்திகள், பூச்சிகள், உண்ணிகள், தேள்போன்ற வற்றின் வகுப்பைக் குறிக்கும்)



### மன்டிஸ்

கும்பிடும் உயிரினமான மன்டிசுக்கு (praying mantis) நம்மால் இலகுவில் பார்க்கக் கூடிய இரண்டு பெரிய கூட்டு கண்களுடன் ஐந்து கண்கள் உள்ளன. இந்தப் பூச்சி இனம் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளின் சின்னமாக சில புராதன கால மக்களால் கருதப்பட்டது.



### ட்ரியோப்ஸ்

ட்ரியோப்ஸ் (Triops) என்னும் சிறியவகை ஒட்டு மீன்களை செல்லப் பிராணியாகவும் வளர்க்கிறார்கள். இவற்றுக்கு பொதுவான இரண்டு கண்களுக்கு மேலதிகமாக ஒளியை உணரும் இன்னொரு கண்ணும் உள்ளது.



### குதிரைவால் சிலந்திகள்

குதிரைவால் சிலந்திகள் (Horseshoe crabs) உவர் மற்றும் கடல் நீரில் வசிக்கும் 10 கண்களுடைய உயிரினமாகும். இவற்றின் இரண்டு கூட்டுக் கண்களும் மனித கண்களைப்போன்ற வடிவிலும் பெரிய அளவிலும் இருக்கின்றன.



### தேனீக்கள்

தேனீக்களுக்கு இரண்டு பெரிய கூட்டுக்கண்கள் உட்பட ஐந்து கண்கள் உள்ளன. உலகில் சுமார் 16000 தேனீ இனங்கள் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. இவற்றின் சாதாரண இரண்டு கண்களுக்கு மேலதிகமாக உள்ள மூன்று கண்களும் தலையின் நடுப்பகுதியில் முக்கோணவடிவில் அமைந்துள்ளன.



### தாடை இல்லாத மீன்

தாடை இல்லாத மீன் இனமான (Lamprey) லாம்ப்ரே மீனுக்கு பொதுவான இரண்டு கண்களுக்கு மேலதிகமாக இரண்டு கண்கள் உள்ளன. இந்தக் கண்கள் மூளையின் மேல்பக்க மையப்பகுதியில் அமைந்துள்ளன.



### பெட்டி ஜெல்லி மீன்

பெட்டி ஜெல்லி மீன் (Box jellyfish) பெட்டிபோன்ற வடிவில் உள்ளது. 24 கண்களையுடைய இந்த மீன் இனத்துக்கு மூளை கிடையாதாம். இதன் உடலின் நான்கு பக்கங்களிலும் ஆறு ஆறு கண்கள் அமைந்துள்ளன.

# வாழ்க்கையில் செய்யவே கூடாத தவறுகள்




* உங்களிடம் பணம் இருக்கும் போது, இந்த நிலைமை நிரந்தரம் என்ற மெத்தன போக்கு உங்களுக்கு வந்து விடுகிறது. பணம் பறக்கும் தன்மை உடையது. இன்று பணம் இருக்கலாம். ஆனால், நாளை அது இருக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. பணம் இருக்கும் போது, உங்கள் முதல் செலவு சேமிப்பாக இருக்க வேண்டும். தேவை இல்லாததற்கெல்லாம் பணத்தை செலவழித்து, அதை வாழ்க்கையில் இருந்து விரட்டி விடாதீர்கள்.

* நீங்கள் சிறுவர்களாக இருக்கும் போது, உங்கள் பெற்றோர் தான் உங்கள் உலகமாக இருக்கிறார்கள். ஆனால். உங்கள் காலில் நீங்கள் சுயமாக நிற்கும் போது, பெற்றோரை விட உங்களுக்கு நிறைய தெரியும் என்ற மமதையில் அவர்களிடம் திமிராக நடந்து கொள்கிறீர்கள். உங்கள் திருமணத்திற்கு பிறகு, உங்கள் பெற்றோரிடமிருந்து விலகி விடுகிறீர்கள். இந்த தவறை செய்யவே செய்யாதீர்கள்.

* ஒன்றை நீங்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். இந்த உலகத்தில் யாரும் முழுமையாக நம்ப தகுந்தவர்கள் கிடையாது. நீங்கள் உங்கள் நண்பர்களையோ, உறவையோ முழுமையாக நம்பினால், ஒரு நாள் கண்டிப்பாக உங்களை ஏமாற்றுவார்கள். உங்களை மட்டும் முழுமையாக நம்புங்கள்.

* கெட்ட பழக்கங்களை மேற்கொண்டால், அது ஒரு நாள் வாழ்க்கையையே சீரழிக்கும். மது பழக்கம் முதலில் பெறுமையாக இருக்கலாம். குடல் வெந்து பரிதவிக்கும் போது தான், உங்களுக்கு நீங்கள் செய்த தவறின் வீரியம் தெரியும். துஷ்டனை கண்டால் தூர விலகு என்பதை போல, கெட்ட பழக்கங்களிலிருந்து விலக்கி கொள்ளுங்கள்.

# வழிப்போக்கரின் சந்தேகம்

அது ஒரு கிராமப் பகுதி. அதனூடாக ரயில் பாதை ஒன்று செல்கிறது. அந்த ரயில் பாதைக்குச் சற்று தூரத்தில் வேறு ஊரைச் சேர்ந்த வழிப்போக்கர் ஒருவர் நின்று கொண்டிருந்தார். அப்பொழுது அந்த வழியாக இன்னொருவர் வருவதைக் கண்டதும் அந்த வழிப்போக்கர் மகிழ்ச்சியுடன் அவருடன் பேச ஆரம்பித்தார். "ஐயா நீங்கள் இந்த ஊரைச் சேர்ந்தவரா?" என்று அவர் கேட்டார். "ஆமாம், ஏன் கேட்கிறீர்கள்?"



"அதாவது இந்த ஊரில்தான் இருக்கிறீர்களா?"

"ஆமாம், எனக்கு 55 வயதாகிறது. நான் பிறந்ததிலிருந்து இங்குதான் இருக்கிறேன். ஏன் கேட்கிறீர்கள்? சொல்லுங்கள்"

"அப்பாடா, 55 வருடமாக இந்த ஊரில் இருக்கிறீர்களா? அப்படியானால் நீங்கள் சொல்வது சரியாகத்தான் இருக்கும்" என்று வழிப்போக்கர் மகிழ்ச்சியுடன் சொன்னார்.

"சரி, நீங்கள் என்ன கேட்க வேண்டும்? சீக்கிரம் கேளுங்கள். எனக்கு வேலை இருக்கிறது"

"அதாவது ஐயா, இந்த ரோட்டில் எத்தனை மணிக்கு ட்ரெயின் வரும்?"

"ஓ..., அதைக் கேட்கிறீர்களா? சரியாக சொல்வதானால் இப்பொழுது காலை 10 மணி. பிற்பகல் 2 மணிக்கு ட்ரெயின் ஒன்று வரவேண்டும். அதுவும் ஒரு நாளைக்கு ஒரு டிரெயின்தான். ஆனால், அது ஒரு நாளாவது இரண்டு மணிக்கு வந்ததாக வரலாறு இல்லை"

"அப்படியானால்?"

"இரண்டு மணிக்கு வரவேண்டிய ட்ரெயின் நான்கு மணி, ஐந்து மணி, எட்டு மணி, பத்து மணி மட்டுமல்ல..., அதற்கு மேலும் சுணங்கித்தான் வரும். சில வேளை வராமல் கூட இருந்து விடும்"

"அப்படியா"

"ஆமாம், அப்படித்தான் எனக்குத் தெரியும். ஒரு நாளாவது நேரத்துக்கு வந்ததே இல்லை"

"அப்படியானால், இரண்டு மணிக்கு முன் எப்படியும் வராது என்கிறீர்கள்"

"இரண்டு மணிக்கு முன்னரா? நான் ஆறு மணிக்குப் பின்னர்கூட வராது என்கிறேன்"

"நன்றாக யோசித்துச் சொல்லுங்கள். இரண்டு மணிக்கு முன் வரக்கூடிய வாய்ப்பே இல்லையா?"

"இல்லை, இல்லை. அது சரி இப்படி சரியாக விசாரிக்கிறீர்களே. நீங்கள் ட்ரெயினில் எங்குதான் போக வேண்டும்?"

"வந்து..., நான் ட்ரெயினில் எங்கும் போகவில்லை"

"அப்போ ட்ரெயின் வரும் நேரம் பற்றி ஏன் அவ்வளவு கரெக்டாக விசாரிக்கிறீர்கள்?"

"அது வந்து..., நான் இந்த ட்ரெயின் ரோட்டுக்குக் குறுக்காக அந்தப் பக்கம் போக வேண்டும். அப்படி போகும்போது ட்ரெயின் ஏதும் வந்துவிட்டால்...? எனக்கு ஆபத்து ஏற்பட்டு விடுமே. அதனால்தான் விசாரித்தேன்" என்று கூறினார். அந்த ஊர்க்காரருக்குக் கோபம் ஒரு பக்கம். சிரிப்பு ஒரு பக்கம்.

(என்றோ வாசித்து இரசித்தது)

மனிதி



# ஒலி – ஒளிபரப்புத்துறையில் தசாப்தங்கள் கடந்த பெண் ஆளுமை

## நாகபூஷணி கருப்பையா



மனதை வென்ற மங்கையர்

ஒலிபரப்புத் துறையில் இலங்கை வானொலி தனிக்காட்டு ராஜாவாக கொடி கட்டிப் பறந்த காலங்களில் ஒலிபரப்புத் துறையின் ஜாம்பவான்கள் பலர் கோலோச்சிக் கொண்டிருந்த சமயத்தில் இலங்கை வானொலியில் புது முகமாய் அறிமுகமாகி தனக்கென ஒரு தனி இடத்தை பிடித்து இரசிகர்கள் நெஞ்சில் சிம்மாசனமிட்டுக் கொண்டிருப்பவர்தான் நாகபூஷணி கருப்பையா.

சங்கீதம், பரதம் இலக்கியம் இப்படி பல்துறை ஆர்வம் கொண்ட இவர், யாழ் பல்கலைக் கழகத்தில் தமிழ் சிறப்பு கலைமாணி பட்டம் பெற்றவர். கொழும்பு பல்கலைக் கழகத்தில் இதழியல் டிப்ளோமோ பெற்றவர். பாடசாலை காலம் முதல் கவிதை எழுதுவதில் இருந்த ஆர்வம் காரணமாக வானொலி, பத்திரிகை என இவரது கவிதைகள் வலம் வந்தன. 'நெற்றிக்கண்' என்ற கவிதைத் தொகுப்பு வெளிவரவும் அதுவே காரணமாயிற்று.

இலங்கை வானொலியில் முதல்தர அறிவிப்பாளரகவும் செய்தி வாசிப்பாளராகவும் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் தனது பங்களிப்பினை வழங்கி வரும் சிரேஷ்ட ஒளி/ஒலிபரப்பாளர் நாகபூஷணி கருப்பையா விளம்பர அனுசரணை நிகழ்ச்சிகள், வர்த்தக விளம்பரங்கள், வெளிக்கள – உள்ளக மேடைகளில் சிறப்பு நிகழ்ச்சி தொகுப்புகள், பிரத்தியேக நிகழ்ச்சிகள் என்பவற்றை வழங்குவதோடு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பயிற்சி பிரிவில் பயிற்சி வழங்குவதுடன் நாடளாவிய ரீதியில் ஊடகக் கல்வி தொடர்பான விரிவுரைகளிலும் பயிற்சிப் பட்டறைகளிலும் யாழ் பல்கலைக்கழக ஊடகத்துறை பிரிவில் வருகை தரு (Visiting lecturer) விரிவுரையாளராகவும் தனது பங்களிப்பினை வழங்கி வருகின்றார்.



**அறிவிப்பாளர், தயாரிப்பாளர், விளம்பர அறிவிப்பு, விரிவுரையாளர் என இன்னும் பல பரிமாணங்களை கொண்டவர்.**

பல விருதுகளுக்குச் சொந்தக்காரரான இவர், 2017ஆம் ஆண்டு சிறந்த அறிவிப்பாளர் மற்றும் சிறந்த செய்தி வாசிப்பாளர் என்று இரட்டை விருதுகளை வென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. 2005ஆம் ஆண்டில் மத்திய மாகாண சாகித்திய விருது, 2007 மற்றும் 2011 இல் அரச விருது பெற்றதுடன் விஷ்வ அபிநந்தன விருது, விஷ்வகலா அபிமானி விருது, கலைச்சுடர் விருது ஆகியவற்றுடன் 2017, 2019, 2020, 2021 ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக தேசிய விருதுகளும் இவர் கரம் சேர்ந்துள்ளன.

இவை மட்டுமன்றி விழித்தெழு உலகளாவிய தமிழ் பெண் ஆளுமைகள் விருதும் 2023ஆம் ஆண்டில் இவருக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. விரைவில் இவர் தனது ஆய்வு கட்டுரை ஒன்றினையும் நூல் உருவில் கொண்டு வர உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பல மெல்லிசைப் பாடல்களை இயற்றியுள்ள இவர், மலேசியாவில் இடம்பெற்ற சர்வதேச தீபாவளி பாட்டு எழுதும் போட்டியில் இரண்டாம் பரிசினை பெற்றுக் கொண்டுள்ளமையும் சிறப்பம்சமாகும்.

மேலும், தனியார் கையடக்கத் தொலைபேசி, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் கெத்தே பசிபிக் விமான சேவைகளில் பயணிகளுக்கான அறிவிப்பு என புகழ்பெற்ற நிறுவனங்களின் தனது குரல் வழி பதிவுகளிலும் தனது பங்களிப்பினை நாகபூஷனி வழங்கியுள்ளார்.

1995இல் கண்டி மலையக ஒலிபரப்பில் அறிவிப்பாளராக அறிமுகமாகி பின்னர், கொழும்பில் கல்வி ஒலிபரப்பில் தயாரிப்பாளராக இணைந்து, சிரேஷ்ட ஒலிபரப்பாளர்களின் வழிகாட்டுதலோடு தேசிய சேவை, வர்த்தக சேவை ஆகியவற்றில் அறிவிப்பாளராகப் பணியாற்றி செய்தி வாசிப்பாளராகவும் புதிய பரிணாமம் பெற்றுள்ளார். மேலும், வானொலி, தொலைக்காட்சி என விளம்பரத் துறையிலும் தடம் பதித்து தற்போது வசந்தம் தொலைக்காட்சியில் நிகழ்ச்சி தொகுப்பாளராகவும் பணியாற்றி தொடர்ந்தும் மக்கள் மனங்களில் நீங்கா இடம்பிடித்துள்ள நாகபூஷணி, வானலைகள் வழியே தனது வசீகரக் குரலின் மூலம் இன்றியமையாத ஒரு ஒலி – ஒளிபரப்புத்துறை விற்பன்னராக திகழ்கின்றார்.



# பாத்திரம் கழுவுவோமா?

• பாத்திரம் கழுவுதல் என்பது நமது அன்றாட வீட்டு வேலைகளில் முக்கியமானது. பாத்திரம் கழுவும்போது மிகுந்த பொறுமை அவசியமாகிறது. வேகவேகமாக கழுவும்போது, சரியாக கழுவப்படாமல் பாத்திரம் விளக்கும் சவர்க்காரம், பாத்திரத்திலேயே ஒட்டிக் கொண்டிருக்க வாய்ப்புண்டு. அதுபோல், மெதுவாக பாத்திரம் கழுவுகிறேன் என்று சொல்லிக் கொண்டு, தண்ணீர் குழாயைத் திறந்து வைத்துவிட்டு, தண்ணீரை வீணடிப்பார்கள். இதனால் சவர்க்காரம் மட்டுமே சீக்கிரம் கரையும்.

• வாளியில் தண்ணீரை எடுத்து வைத்து பாத்திரத்தைக் கழுவும் முறையினை பல வீடுகளில் பின்பற்றி வருகின்றனர். இம் முறையினால் தண்ணீர் சிக்கனம் மேம்படும்.

• தற்காலத்தில் பாத்திரம் கழுவ தேய்ப்பான், சவர்க்காரம், சவர்க்காரக் கரைசல் போன்ற இரசாயனம் என பல பொருட்களும் சந்தைகளில் கிடைக்கின்றன. ஆனால், சில வீடுகளில் இன்றளவும் தேங்காய் நார் தும்பும், சாம்பலுமே பயன்பாட்டில் உள்ளன. ஆனால், இதுவே பாத்திரங்களை சுத்தப்படுத்த சிறந்த வழியாகும்.

• இக்காலத்தில் வேலைப் பகிர்வு என்பது குடும்ப வாழ்க்கையில் மிகவும் அவசியம். ஆண்களுக்கும் பாத்திரம் கழுவத் தெரிந்திருப்பது மிகவும் அவசியம். வீணாகப் பொழுதை போக்கும் நேரத்தில் "பாத்திரம் கழுவுதல் எனும் கலையை" கற்றுக் கொண்டால் ஆண்களின் குடும்ப வாழ்க்கை சிறப்படையும். பாத்திரம் கழுவி சுத்தப்படுத்தி முடிக்கும்போது நம் மனதும் சுத்தமாகும். நமக்கும் மனநிறைவைத் தரும்.

• சவர்க்காரத்தைப் பயன்படுத்தி பாத்திரங்கள் தேய்ப்பதால் அவற்றில் உள்ள மோசமான இரசாயனங்கள் நம்முடைய கைகளை பாதிப்பது மட்டுமின்றி பாத்திரங்களின் வழியாக அதன் மெல்லிய துகள்கள் நம்முடைய உணவிலும் கலந்து உடலுக்குள் செல்வதாகக் கூறப்படுகிறது. இவை குடல் புற்றுநோய் உள்ளிட்ட மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடும் என்பதை கவனத்திற் கொள்ள வேண்டும்.

• இட்லி மா போன்றவற்றுக்கு பயன்படுத்தும் சமையல் சோடா அல்லது பேக்கிங் சோடாவை பாத்திரங்கள் கழுவ பயன்படுத்தலாம். வெந்நீரில் பாத்திரங்களை ஒரு முறை அலசிவிட்டு தேய்ப்பானில், சமையல் சோடாவை எடுத்துத் தேய்த்து கழுவ பாத்திரங்கள் பளிச்சென மாறும்.



• எண்ணெய் பிசுக்குள்ள பாத்திரங்களை முதலில் பேக்கிங் சோடா கொண்டு நன்கு தேய்த்து 10 – 15 நிமிடங்கள் ஊறவையுங்கள். பிறகு வெதுவெதுப்பான நீரில் கழுவ பாத்திரங்களில் உள்ள எண்ணெய் பிசுக்கு போய்விடும்.



கூந்தல் பராமரிப்பு

# இளநரை பிரச்சினைக்கு இதோ தீர்வு...!

சிறுவர்கள் முதல் இளைஞர், யுவதிகள் என பலர் இளநரையால் அதிகம் பாதிப்படைகின்றார்கள். இளநரையைப் போக்க எத்தனையோ வழிகளைப் பின்பற்றினாலும், அவற்றுக்கு தீர்வு கிடைப்பது குறைவு. கொஞ்சம், கொஞ்சமாக ஆரம்பித்து, இறுதியில் தலைமுழுவதுமே, வெள்ளை முடியாக மாறிவிடக்கூடும். இதற்கு ஆரம்பத்திலேயே தீர்வுகாண வேண்டியது அவசியம்.

இளநரை–க்கு முக்கிய காரணம் பித்தம். ஆகவே, உடலில் இருக்கும் பித்தத்தை சரி செய்தாலே இளநரை படிப்படியாக மறையக்கூடும். அடுத்தது, இளம் நரை உண்டாக காரணங்களில் முதன்மையானது அதிக கவலை, மன அழுத்தம் என்று சொல்லலாம்.

மேலும், அதிகமான 'கதிர்வீச்சு' படும் போதும், கூந்தலுக்கு 'ஸ்பா' சிகிச்சைகள் செய்யும் போதும் கூட இளநரை ஏற்படும். தவிர, விதம்விதமான சிகையலங்காரங்களின் போது பயன்படுத்தப்படும் வெப்பக்கருவிகளில் அதிக இரசாயனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவையும் இளநரையை உண்டாக்கிவிடுகிறது.

இளநரை வந்தவுடன் 'முடி சாயம்' பயன்படுத்துவது உண்டு. முடி சாயம் பயன்படுத்துவதற்கு முன்பு, ஒன்றை தெரிந்துகொள்ள வேண்டும். முடிசாயத்தால் தலையில் 'ஹைட்ரஜன் பெரொக்ஸைட்' என்னும் இரசாயனம் உருவாகி முடி இழைகளில் ஒட்டிகொள்ளும். இதுதான் இளநரை தொடர்ந்து பரவ காரணமாக இருக்கும். ஆகையால், முடி சாயம் பயன்படுத்துவதை இயன்றளவு தவிர்ப்பது நல்லது.

அதேசமயம், கூந்தலை அதிகமாக 'ப்ளீச்' செய்வது, இரசாயனம் அதிகமுள்ள ஷெம்போ போன்றவற்றை மாற்றி மாற்றி பயன்படுத்துவதன் மூலமும் இளநரை மாறாமல் போகலாம்.

உணவின் மூலம் இரத்தத்தில் இருக்கும் பித்தம் அதிகமாகி இளநரை ஏற்படும் போது இரசாயன பயன்பாடு மூலம் அதை இயற்கையாகவோ செயற்கையாகவோ அதிகரிக்கும் போது முடியின் நிறம் முற்றிலும் மாறுபடுகிறது. இதைத் தவிர்க்க உடலில் இருக்கும் பித்தத்தை சரி செய்தாலே இளநரை படிப்படியாக மறையக்கூடும்.






**மனைவி:** என்னங்க.. எங்க ஒபிஸ்ல இன்னைக்கு உங்களை விசாரிச்சாங்க..

**கணவன்:** என்னனு விசாரிச்சங்க மா?

**மனைவி:** தினமும் ஒரு வயசானவர் கொண்டு வந்து விடுறாரே அவர்தான் உங்க அப்பாவான்னு..

# பொங்கல் டிப்ஸ்

◆ பொங்கல் செய்ய, புது பச்சரிசி அல்லது பொங்கல் பச்சரிசி ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை பயன்படுத்தலாம். ஆனால், பச்சரிசி புது அரிசியாக இருக்க வேண்டியது மிக அவசியம்.

◆ பொங்கல் செய்ய தரமான பழுப்பு நிற சக்கரையை பயன்படுத்தவும்.

◆ சிறிதளவு ஜாதிக்காய் தூள் சேர்த்து பொங்கல் செய்தால் சுவையும் மணமும் கூடும். இறுதியாக முந்திரி, உலர் திராட்சையை நெய்யில் வறுத்து சேர்த்த பிறகு, கால் கப் அளவு கற்கண்டு சேர்த்துக் கொள்ளலாம்.

◆ சக்கரை பொங்கல் பரிமாறும் பொழுது அதன் மேலே 1 தேக்கரண்டி நெய் சேர்த்து பரிமாறினால் அலாதியான சுவை கிடைக்கும்.

◆ சர்க்கரை பொங்கல் முற்காலத்தில் மண்பானையில் பொங்கினர், இப்பொழுது பித்தளை, அலுமினியம், சில்வர், போன்ற பானைகளில் பொங்கின்றனர். மேலும் பிரஷர் குக்கரிலும் செய்கின்றனர். ஆனால், மண்பானை கொண்டு, விறகடுப்பில் பொங்கும் பொங்கலின் சுவை சற்று அதிகம் எனலாம்.

◆ சர்க்கரைப் பொங்கல் செய்வதற்கு கற்கண்டு அல்லது கருப்பட்டி பயன்படுத்தப்படுகிறது. பொங்கலுக்கு கருப்பட்டி பயன்படுத்தினால், அதில் ஒரு துண்டு எடுத்து சுவைத்து பாருங்கள். அது இயற்கையானது என்றால் உப்பு அல்லது கசப்பு இருக்கக் கூடாது.

◆ கருப்பட்டியின் சுத்தத்தில் அதன் நிறம் கூட பங்கு வகிக்கிறது. இது நல்ல தரம் வாய்ந்ததாக இருந்தால், அது ஒரு சிறந்த செரிமானப் பொருளாகவும், இரும்புச்சத்து மற்றும் விட்டமின் 'சி' நிறைந்த பொருளாகவும் இருக்கும்.

# பேராசிரியர் மு.வரதராசன்




பேராசிரியர் மு.வரதராசன் பச்சையப்பன் கல்லூரி தமிழ்த் துறைத் தலைவராகவும் மதுரை காமராஜர் பல்கலைக்கழக துணை வேந்தராகவும் பணியாற்றியவராவார். 6 மொழிகளில் புலமை பெற்ற இவர் இந்திய அரசின் முக்கியமான 21 குழுக்களில் பணியாற்றியவர்.

புதினங்கள், சிறுகதைகள், சிறுவர் இலக்கியங்கள், நாடகங்கள், இலக்கணம், கட்டுரைகள், தமிழ் இலக்கிய நூல்கள், பயணக் கட்டுரைகள், முன்னுரைகள், மொழி பெயர்ப்பு மேற்கோள்கள் என 91 நூல்களைத் தமிழுக்குத் தந்தவர். இவரது 'அகல்விளக்கு' நாவலுக்கு சாகித்ய அக்கடமி விருதும் 'கள்ளோ காவியமோ' நூலுக்கு தமிழக அரசின் விருதும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# 'ஈ தனது பெயரை மறந்து போனது'

## றஷ்மியின் கவிதைத் தொகுப்பு




கவிஞர் றஷ்மியின் நான்காவது கவிதைத் தொகுப்பான 'ஈ தனது பெயரை மறந்து போனது' காலச்சுவடு வெளியீடாக வந்துள்ளது. ஈழத்து இலக்கியத்தின் முக்கிய கவிஞரான சேரன் இக்கவிதைத் தொகுப்பு குறித்து கீழவருமாறு பதிவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"நெடுங்கவிதைகளும் காவியமும் வழக்கிழந்து போய்விட்டன என்ற கூற்றைப் புறம் தள்ளி வைக்க நம்மிடம் இப்போது உள்ளன றஷ்மியின் கவிதைகள். அவருடைய இந்தத் தொகுப்பில் உள்ளவை காவியங்கள் காவிய இலக்கியத்திற்குப் புது மெருகு சேர்ப்பவை. மொழியின் நுண் அழகும் மானுட வேட்கையும் சிந்தனையும் கூடும் படைப்புக்கள் இவை. வரலாற்றுக்குச் சாட்சியாகக் கவிஞன் நிற்க மறுத்தாலும் தவிர்க்க முடியாமல் கவித்துவ சாட்சியாக மாறும் முரண் நகையும் இந்தத் தொகுப்பில் இழையோடுகிறது"

**- சேரன் -**

# அல்புனைவு நூல்களுக்காக

## சாகித்திய அக்கடமி விருது பெற்ற தமிழ் எழுத்தாளர்கள்



சாகித்ய அக்கடமி இந்திய அரசினால், 1954 மார்ச் 12இல் தொடங்கப்பட்ட ஓர் அமைப்பு. அது இந்திய மொழிகளில் இலக்கியமும் இலக்கியம் சார்ந்த நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் எண்ணத்தோடு தொடங்கப்பட்டது. இதுவரை ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட இலக்கிய கூட்டங்களும், பயிற்சி முகாம்களும் மற்ற பிற இலக்கியம் சார்ந்த நடவடிக்கைகளையும் நடத்தியுள்ளது.

இந்திய மொழிகளில் வெளிவரும் சிறந்த படைப்புகளை பிற மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிடுவது, சிறந்த படைப்புகளை விருது அளித்து ஊக்கப்படுத்துவது போன்ற பல பணிகளை சாகித்திய அக்கடமி முன்னெடுத்து வருகின்றது.

அல்புனைவு - non-fiction என்பது உண்மையை அடிப்படையாக கொண்டு எழுதப்படும் இலக்கியப் படைப்பாகும். இதில் சொல்லப்படுகின்ற சம்பவங்கள், மனிதர்கள், மற்றும் தகவல்கள் பெரும்பாலும் உண்மையானதாக இருக்க வேண்டும். அத்தகைய சிறப்பினை பெற்ற சில நூல்கள் கீழே தரப்பட்டுள்ளன...

1955 - தமிழ் இன்பம் (கட்டுரைத் தொகுப்பு) ரா.பி.சேதுப்பிள்ளை, 1958 - சக்கரவர்த்தித் திருமகன் (இராமா யணத்தின் உரைநடை) சி.ராஜகோபாலச்சாரி, 1962 - அக்கரைச்சீமை (பயண நூல்) சோமு (மீ.ப.சோமசுந்தரம்,1965 - ஸ்ரீ ராமானுஜர் (வாழ்க்கை வரலாறு) பி. ஸ்ரீ ஆச்சார்யா, 1966 - வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு (வாழ்க்கை வரலாறு) ம.பொ.சிவஞானம், 1967 - வீரர் உலகம் (இலக்கிய விமர்சனம்) கி.வா.ஜகன்னாதன், 1974 - திருக்குறள் நீதி இலக்கியம் (இலக்கிய விமர்சனம்) கே.டி.திருநாவுக்கரசு, 1975 - தற்கால தமிழ் இலக்கியம் (இலக்கிய விமர்சனம்) ஆர்.தண்டாயுதம், 1978 - புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் (விமர்சனம்) வல்லிக் கண்ணன், 1981- புதிய உரைநடை (விமர்சனம்) மா.ராமலிங்கம், 1982 - மணிக்கொடி காலம் (இலக்கிய வரலாறு) பி.எஸ்.ராமையா, 1983 - பாரதி : காலமும் கருத்தும் (இலக்கிய விமர்சனம்) தொ.மு.சிதம்பர ரகுநாதன், 1985 - கம்பன்: புதிய பார்வை (இலக்கிய விமர்சனம்) அ.ச.ஞானசம்பந்தன், 1986 - இலக்கியத்துகாக ஓர் இயக்கம் (இலக்கிய விமர்சனம்) க.நா.சுப்பிரமணியம், 1988- வாழும் வள்ளுவம் (இலக்கிய விமர்சனம்) வா. செ. குழந்தைசாமி, 1989 - சிந்தாநதி (கட்டுரைகள்) லா. ச.ராமாமிர்தம், 2000 - விமர்சனங்கள், மதிப்புரைகள், பேட்டிகள் (விமர்சனம்) தி.க.சிவசங்கரன், 2015 - இலக்கியச் சுவடுகள் (திறனாய்வு நூல்) ஆ.மாதவன் , 2024 - திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சியும் 1908 (ஆய்வு நூல்) ஆ.இரா.வேங்கடாசலபதி

# இலக்கிய உலகிற்கு பேரிழப்பாகிய வெலிமடை ரபீக்கின் திடீர் மறைவு


மரபுக் கவிதைக்கும் புதுக்கவிதைக்கும் மரியாதை செலுத்தியவர்கள் ஏராளம். இவர்களுள் அண்மையில் நம்மை விட்டுப் பிரிந்த வெலிமடை ரஃபீக்" மிகவும் குறிப்பிடத்தக்கவர். ஆசிரியப்பணி, சமூகப் பணி, ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர், பிரபல கவிஞர், நூலாசியர், ஊடகவியலாளர் எனப் பல பரிமாணங்களை கொண்ட ஆளுமையாளர் இவர்.

இவரது கவிதைகள் நமது சிந்தனைக்கு எந்தவித தொந்தரவும் தராத ரகத்தை சேர்ந்தவை. அந்தளவுக்கு எளிமையான நடை, அருமையான சொல்வளம், சிந்தனைக்கு விருந்தாகும் வரி வீச்சு ஆகியன இவரது தனித்துவமாகும். அட்டகாசமாக இல்லாமல் சத்தமின்றி அமைதியாக இயங்கியதொரு கவிதைப் போராளி என இவரை குறிப்பிட முடியும்.

இலக்கிய வானில் இவ்வாறு தனித்து ஜொலித்த அந்த நட்சத்திரம் இன்று நம்மை விட்டு மறைந்து விட்டது. இது யாராலும் நிரப்ப முடியாத நீண்டதொரு பெருவெளி (வலி) யை எம்மில் ஏற்படுத்திவிட்டது.

ஆசிரியராக பணிபுரிந்து பின்னர் ஆசிரிய ஆலோசகராக பதவி உயர்ந்தார். நிறைந்த திறமைசாலியான இவர் அதிபர் சேவைக்கான பரீட்சையிலும் சித்தியடைந்திருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இருப்பினும் சமூக நல நோக்கு கருதி ஆசிரிய ஆலோசகராக கல்விப் பணியோடு சமூகப்பணியும் புரிந்து வந்தவர் உடல் நலமின்மை காரணமாக இரு வருடங் களுக்கு முன்னதாக பணி ஓய்வு பெற்றுக் கொண்டார்.

நோய் வாய்ப்பட்ட நிலையிலும் ஓய்வு பெற்ற நிலையிலும் சோர்வடைந்து பேனாவைத் தூக்காமல் இருந்ததில்லை, தொடர்ந்து எழுதினார். சில பத்திரிகைகளில் வெலிமடை பிரதேச செய்தியாளராக பணியாற்றினார். 1980க்குப் பின்னரான காலப்பகுதியில் எழுத்துத்துறையிலும் கால்பதித்தார். பல்வேறு பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வானொலிக்கும் கவிதைகளை எழுதி சிறந்த கவியாளராக பிரபலம் பெற்றார்.




2009 இல் இவரது முதலாவது நூலான 'மேலக வாழ்வு' நூலை வெளியிட்டார். தொடர்ந்து 2010இல் 'நோன்பு' (சிறுவர் கதை), 2011 இல் 'பூஞ் சிறகுகள்' (சிறுவர் பாடல்), 2016 இல் 'பூக்காலம்' (கவிதை) மற்றும் 'ஒரு நானும், இன்னொரு நானும்'(கவிதை) ஆகிய நூல்களையும் அவர் வெளியிட்டுள்ளார். 'ஒரு பயணியின் பாடல்கள்', 'நதி உறங்கும் கடல்' ஆகியன இவர் வெளியிடுவதற்கு கைவசம் வைத்திருந்த நூல்களாகும்.



2002 இல் சர்வதேச இஸ்லாமிய இலக்கிய நிகழ்வில் இளம் படைப்பாளி விருது, ஊவா மாகாண செவ்வந்தி கலை இலக்கிய வட்டத்தின் 'சாதனையாளர்' விருது, 2012 இல் ஊவா மாகாண இலக்கிய சாகித்திய விருது, 2013இல் சிங்களக் கவி அமைப்பின் 'கவிச்சுடர்' விருது, 2020ல் 'ஒரு நானும் இன்னுமொரு நானும்' கவிதைக்கு 'கொடகே' விருதினையும் அவர் பெற்றிருந்தார். 2017 இல் இவரது 'பூங்காலம்' கவிதை நூல் 2017 இற்கான தேசிய சாகித்திய விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டு இறுதிச் சுற்றுக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



இத்தனை சிறப்புக்களையும் கொண்ட ரபீக் கடந்த 2024 டிசம்பர் 25 ஆம் திகதி சிகிச்சை பெற்று வந்த நிலையில் எம்மை விட்டுப் பிரிந்தார். அவரது பேரிழப்பானது இப்போதும் கூட நினைத்தால் மனது கனக்கின்றது.

**- கோட்டைமுனை வாஹிட் ஏ.குத்தூஸ், பதுளை**

# கொம்பு முளைத்த மனிதர்!

*கொம்பு முளைத்த மனிதர்கள்*
*அவர்கள்....*
*தேவ படைப்பு எனத் தம்மை*
*அகராதிப்படுத்துவர்*
*தமக்கு தாமே விரும்பியபோது*
*சாயம் பூசுவர்*
*மனித எலும்புக்கூடுகள் விரும்பி*
*அணியும் அவர்கள்*
*மனித நேயம்பற்றி பேசுவார்*
*முகமே இல்லாத இந்த முண்ட*
*மனிதர்*
*முகமூடிகளாக இன்னமும்...!!!*

*- தனேஸ்வரி, யாழ்ப்பாணம்.*



# தாய்மை



*தொப்புள் கொடியின்*
*உயிரும் உணர்வும் தொட்ட*
*பயணம் இது...*
*எங்கும் எதற்கும் எப்போதும்*
*நிகரில்லா அற்புதம் அவள்...*
*பூமியில் கோடிக்கணக்காய்*
*கொட்டிக்கிடக்கும்*
*பிரம்மத் தோற்றம் அவள்...*
*படைப்பு மட்டுமன்றி*
*காத்தலும் அருளாலும் அவளே...*
*அன்பு பாசம் கருணை தியாகம்*
*பொறுமை என்னும்*
*தன்னை உளியாக மாற்றி*
*என்னைச் செதுக்கிய*
*சிற்பியும் அவளே...*
*பூமிப் பிரமாண்டத்தில்*
*அனைத்துக்கும் மேலான*
*மகத்துவம் நிறைந்த*
*ஒற்றைச்சொல் அவளே.....*
*'தாய்மை'*

# வலம்புரி கவிதா வட்டத்தின் 107ஆவது கவியரங்கு



வலம்புரி கவிதா வட்டத்தின் 107 ஆவது கவியரங்கம் இம்மாதம் 13 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலய தமிழ் கணித பாட ஆசிரியர் கவிஞர் மினுவங்கொட ஏ. சிவகுமார் தலைமையில் இடம்பெறவுள்ள இக்கவியரங்கில் ஸ்தாபக உறுப்பினர் சத்திய எழுத்தாளர் எஸ்.ஐ. நாகூர் கனி முன்னிலை வகிப்பார். கவியரங்க ஏற்பாடுகளை வகவத் தலைவர் நஜ்முல் ஹுசைன், செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன், பொருளாளர் ஈழகணேஷ் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

## ஆக்கங்களை அனுப்பலாம்

'இலக்கியம் லயம்' பக்கத்திற்கு ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. இலக்கிய கட்டுரைகள், நிகழ்வுகள், மாற்று சிந்தனைகள் என இன்னோரன்ன அம்சங்களை நீங்கள் அனுப்பலாம். அவை தரம் கண்டு 'ஒருவன்' ஞாயிறு பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். ஆக்கங்களை unicode முறையில் டைப் செய்து மின்னஞ்சலில் அனுப்பலாம். அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி Oruvanelakkiyam@gmail.com



## குறளும் பொருளும்

அதிகாரம் 03: நீத்தார் பெருமை

குறள் 27 : சுவையொளி ஊறோசை நாற்றமென் றைந்தின் வகைதெரிவான் கட்டே உலகு

பொருள் : ஐம்புலன்களின் இயல்பை உணர்ந்து அவற்றை அடக்கியாளும் திறன் கொண்டவனையே உலகம் போற்றும்.

குறள் 28 : நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும்

பொருள் : சான்றோர்களின் பெருமையை, இந்த உலகில் அழியாமல் நிலைத்து நிற்கும் அவர்களது அறவழி நூல்களே எடுத்துக் காட்டும்.


ஒருவன் மின்மினி

அன்பு தம்பி, தங்கையரே, இது உங்களுக்கான பக்கம். இதில் உங்கள் சித்திரங்கள், ஆக்கங்கள், பிறந்தநாள் வாழ்த்துகள், உங்கள் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வுகள் தொடர்பான புகைப்படங்கள் மற்றும் இப்பகுதி பற்றிய உங்கள் கருத்துகளை நீங்கள் எங்களுடன் வட்ஸப் அல்லது தபால் மூலம் பகிர்ந்துகொள்ளலாம். அவை, ஒருவன் மின்மினி பக்கத்தில் வெளியாகும்.

ஆசிரியர் பீடம், பெல்லாட்ரிக்ஸ் கட்டிடம், 2ஆம் மாடி, டெனிஸ்டர் சில்வா மாவத்தை, கொழும்பு – 09 0740162534


## சித்திரம் பேசுதடி



ஹஜாரா, தரம் 06, வெலிபென்ன



நவ்ரா ஹஜுஸ், தரம் 01, அன்னூர் தேசிய பாடசாலை, பானகமுவை, குருநாகல்.





பிரக்யா விசு, தரம் 03, அருணன் மாணிக்கவாசகம் இந்து கல்லூரி, வத்தளை.



யர்ஷினி தர்மராஜ், தரம் 06, ஜே.எம்.சி. கல்லூரி.



# நல்லது செய்தால் நல்லதே நடக்கும்

முன்னொரு காலத்தில் செல்வந்த பிரபு ஒருவர் இருந்தார். அவருக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். மூத்தவன் அமுதன் மிகவும் நல்லவன் இரக்க குணமுடையவன். இளையவன் யாசகன் மிகவும் கெட்டவன்.

கொஞ்ச நாட்களில் தந்தை இறக்கவே அண்ணனும், தம்பியும் வியாபாரத்தை கவனித்து வந்தனர். அவர்கள் இருவரும் ஒரு முறை ஒரு கிராமத்திற்குப் போய் தமக்கு வரவேண்டிய ஆயிரம் பவுன்களை வசூலித்தனர்.

அதனை ஒரு பையில் போட்டுக் கொண்டு இருவரும் ஊர் திரும்ப ஆற்றங்கரைக்கு வந்து சேர்ந்தனர். படகுக்காரன் எங்கோ போயிருந்ததால் தம்பியிடம் பண மூட்டையைக் கொடுத்து விட்டுச் சற்று கண்மூடித் தூங்கி னான் அண்ணன். இதற்குள் தம்பி அதே போல ஒரு பண மூட்டையில் கற்களை வைத்துக் கட்டி எடுத்து ஒளித்துக் கொண்டான்.

சற்று நேரத்திற்கெல்லாம் படகுக்காரன் வரவே தம்பி தன் அண்ணனை எழுப்பி அவரோடு படகில் ஏறி உட்கார்ந்தான். படகும் கிளம்பியது. படகு நடு ஆற்றில் போகும் போது தம்பி ஒரு மூட்டையை எடுத்து ஆற்றில் நழுவ விட்டு, “ஐயோ அண்ணா பண மூட்டை ஆற்றில் விழுந்துவிட்டதே” எனக் கூறினான்.

அதற்கு, “போனால் போகட்டும். அது நம் பணமாக இருந்தால் நமக்கே கிடைக்கும்” எனக் கூறினான் அமுதன். தம்பியும் தான் தந்திரமாக ஆயிரம் பவுன்களை தட்டி விட்டதாக எண்ணி மகிழ்ந்தான். ஆனால், அவன் அவசரத்தில் ஆற்றில் போட்டது பண மூட்டையைதான். கற்களை வைத்துக் கட்டிய மூட்டைதான் அவனிடம் இருந்தது.

அந்த ஆற்றில் ஒரு பூதம் இருந்தது. தம்பி மூட்டையை ஆற்றில் போட்டதும் ஒரு மீனை உடனே விழுங்கச் சொல்லி கட்டளை இட்டது அது. மீனும் அப்பூதம் சொன்னபடி நடந்தது.

பூதம் தம்பி செய்த மோசடியை புரிந்து கொண்டது. எனவே, அந்தப் பண மூட்டையை எப்படியும் அண்ணனிடம் சேர்த்து விட எண்ணி மூட்டையை விழுங்கிய மீன் எங்கும் போகாதபடி காவல் காத்தது.

அண்ணனும், தம்பியும் ஊறுக்கு வந்து தம் வீட்டை அடைந்தனர். தம்பி வீட்டில் தனியாக ஓரிடத்திற்குப் போய் தன்னிடமிருந்து மூட்டையை அவிழ்த்துப் பார்த்தான். அதில் கற்கள் இருப்பதைக் கண்டு, “ஐயோ! நான் அண்ணனை ஏமாற்ற எண்ணி நானே ஏமாந் தேனே” என எண்ணி மனம் புழுங்கினான்.

அன்று சில மீனவர்கள் ஆற்றில் வலை போட்ட போது, பூதம் மீனவராக மாறி அந்த மீனை எடுத்துக் கொண்டு அண்ணனின் வீட்டுக்குச் சென்றது. அண்ணன் அவன் கேட்டபடி ஒரு பவுனைக் கொடுத்து அந்த மீனை வாங்கிக் கொண்டார். அதனை அவர் தன் மனைவியிடம் கொடுக்கவே, அவள் அதனை இரண்டாக நறுக்கினாள். அதன் வயிற்றிலிருந்து பணமூட்டை வெளியே விழுந்தது.

அதைக் கண்டு திகைத்தான் அமுதன். “இது நம் பணமே. இதனை நம்மிடம் கொடுக்கவே இந்த மீனவன் வந்திருக்கிறான். இவனுக்கு எப்படி இது தெரிந்தது?” என எண்ணி ஆச்சரியப்பட்டான்.

அப்போது, “அமுதா நீ மிகவும் நல்லவன். இந்த ஊரில் உள்ள ஏழைகளுக்கு நிறைய உதவிகளைச் செய்கிறாய். ஒரு முறை நீங்கள் படகில் சென்றபோது உன் கையில் இருந்து நழுவிய உணவு பொட்டலத்தை உண்டேன்.

அது எனக்கு மிகுந்த பலத்தைக் கொடுத்தது. அதனால் தான் உன்னுடைய பணமூட்டையை உன் தம்பி வேண்டுமென்றே தூக்கி வீசிய போது அதை விழுங்கும்படி இந்த மீனுக்கு கட்டளை கொடுத்தேன். அந்த மீனையும் எடுத்துக் கொண்டு வந்தேன். நல்லவர்களுக்கு எல்லாமே நல்லதாய் தான் நடக்கும்...” என்று சொல்லி மறைந்தது.

அதை கேட்டு மகிழ்ந்தான் அமுதன். மறைக்காமல் அதில் பாதியான ஐநூறு பவுன்களைக் தன் தம்பியிடம் கொடுத்தான். தம்பியும் தனது அண்ணனுடைய கால்களில் விழுந்து மன்னிப்புக் கோரினான்.

## அழகு நாரை

அன்னை தந்தையோடு
உலாவிக்
கண்டோம் மிருகக் காட்சி சாலை
அன்றோர் நாளே சுற்றினோமே
திரும்பி வந்தோம் மாலை

நீண்ட கால்கள் கொண்ட நாரை
நிமிர்ந்து பார்க்கும் வானை
நிறையத் தின்னத் தேடும் நீரில்
அயிரைக் கெண்டை மீனை
மரம் வளர்த்திடுவோம்
ஆண்டு முதிர்ந்த தாத்தாவைப்
போல்
உரோமம் வெளுத்திருக்கும்
வயிற்றை நிறைத்த களிப்பில்
அழகு நாரை பறப்பது தனிரகம்!


அஸ்மா பாரிஸ், மல்வானை



## பேனா

மாணவர்களுக்கு இது வாழ்க்கை
அன்பானவர்களுக்கு இது கவிதை
எழுத்தாளர்களுக்கு இது உழைப்பு
ஏழைகளுக்கோ இது எட்டாக்கனி!

கே.எல்.ஹில்மி, தரம் 10, தேசிய பாடசாலை, சம்மாந்துறை



## வழிகாட்டுங்கள்

# சோம்பல் விலங்கு ‘ஸ்லோத்’

‘ஸ்லோத்’ (Sloth) என்றால் தமிழில் சோம்பல் என்று பொருள். பெயருக்கு ஏற்றாற்போல் இது, மிகவும் மெதுவாக இயங்கும். அவை தரையில் இருக்கும்போது மணிக்கு 0.24 கிலோ மீற்றர்கள் (மணிக்கு 0.15 மைல்கள்) மட்டுமே நகரும்.

‘ஸ்லோத்தில்’ இரண்டு முக்கிய வகை உண்டு. இரண்டு கால் ஸ்லோத் மற்றும் மூன்று கால் ஸ்லோத் ஆகியவை. இவற்றின் உடலில் மாறுபாடுகள் இருந்தாலும் இவை இரண்டும் ஒரே மாதிரியான வாழ்விட மற்றும் வாழ்க்கை முறைகளைக் கொண்டுள்ளன. இவற்றின் உரோமங்களில் பெரும்பாலும் பூஞ்சைகள் படர்ந்திருக்கும். அதனால் இவற்றின் உடல் பச்சை நிறத்தில் தோற்றம் அளிக்கிறது. இதைக் கொண்டு இவை தங்களை மரங்களில் மறைத்துக் கொள்ளும்.

‘ஸ்லோத்’ மிகக் குறைந்த கலோரிகள் கொண்ட உணவுக ளையே உண்கின்றன. அதனால்தான் இவை எப்போதும் சோம் பலாகவே இருக்கின்றன. மரங்களில் ஏறுவதற்கும் வலுவான வளைந்த நகங்களை இவை உபயோகப்படுத்துகின்றன.


மிக மெதுவாக இயங்குவதால் இவற்றின் உடலில் பல பூச்சிகள் ஒட்டுண்ணிகளாக சேர்ந்து அடர்ந்த ரோமங்களில் மறைந்து கொள்கின்றன. அதோடு, இவற்றின் ஊட்டச்சத்தை அந்த ஒட்டுண்ணிகள் உறிஞ்சிக் கொள்கின்றன.

ஒரு நாளின் 20 மணி நேரத்தை இவை தூங்கியே கழிக்கின் றன. அப்போதுதான் அவற்றுக்குத் தேவையான ஆற்றல் கிடைக் கிறது. மேலும், இந்த விலங்குகளின் வளர்சிதை மாற்றத்திற்கு தூக்கம் உதவுகிறது. உண்ணும் உணவுகள் மிகவும் குறைவு. அவற்றையே ஜீரணிக்க இந்த விலங்குகளுக்கு ஒரு மாதம் வரை ஆகும்.

சோம்பேறி விலங்குகளாக இருந்தாலும் இவை நன்றாக நீந்தக் கூடியவை. நீந்தும்போது 40 நிமிடங்கள் வரை இவற்றால் தங்கள் மூச்சை இழுத்துப் பிடித்து வைத்துக்கொள்ள முடியும். நிலத்தில் மட்டும்தான் மிக மெதுவாக நகரும் இயல் புடையவை. ஆனால், தண்ணீரில் மூன்று மடங்கு வேகமாக நகர்கின்றன.



## நிறம் தீட்டுங்கள்




# அறியா நகரம் - ஓலஸ்

ஓலஸ் என்பது ஏஜியன் கடலில் உள்ள கிரீட் தீவில் அமைந்துள்ள ஒரு பண்டைய நகரமாகும். இது தீவின் கிழக்குப் பகுதியில் நவீன நகரமான எலோண்டாவுக்கு அருகில் அமைந்துள்ளது. மினோவான் நாகரிகக் காலத்து முக்கியமான நகரமான ஓலஸ் அதன் இருப்பிடம் மற்றும் துறைமுகத்திற்காக புகழ்பெற்றதுடன் வர்த்தகத்திற்கான குறிப்பிடத்தக்க மையமாகவும் இது விளங்கியதாக அறியப்படுகின்றது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட உள்ளூர் மாற்றம் காரணமாய் இந் நகரம் நீரில் மூழ்கியதாக ஆராய்ச்சியா ளர்கள் நம்புகின்றனர். தொல்பொருள் அகழ்வாராய்ச்சி மூலம் நகரச் சுவர்கள், வீடுகள் மற்றும் தெருக்களின் பகுதிகள் உட்பட ஓலஸின் பல தடயங்களைக் கண்டுபிடித்துள்ளனர். அஜியோஸ் நிகோலாஸ் எனும் தொல்பொருள் அருங்காட்சியகம் மற்றும் லூவ்ரே ஆகிய இடங்களில் ஓலஸ் நகரின் பல கலைப்பொருட்கள் காணப்படுகின்றன.

அதுமட்டுமல்லாமல் அகழாய்வின் மூலம் ஓலஸ் நகரில், ஓலஸின் இடிபாடுகள் (தண்ணீருக்குக் கீழ்), பாழடைந்த காற்றாலை, வெனிஸ் உப்புப் பாத்திரங்களின் எச்சங்கள், சிறிய மீன்பிடி படகுகளுக்கான குறுகிய கால்வாய் ஆகியனவெல்லாம் கண்டறியப்பட்டுள்ளன.



மேலும், ஓலஸ் நகரில் கண்டெடுக் கப்பட்ட மினோவான் முத்திரைகள், நாணயங்கள் மற்றும் மோதிரங்களில் விரிடோமார்டிஸ் அல்லது பிரிட்டோமார் டிஸ் எனப்படும் உருவம் காணப்படுகி றது. இது அவர்களின் தலைமை தெய்வ மாக இருந்திருக்கலாம் எனப் பல கல்வெட்டுகள் வழி அறியப்பட்டுள்ளன.

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இடிபாடுகளுக்குள் பழங்கால நூல்களை மீட்டெடுத்துள்ளனர். இவை ஓலஸை பண்டைய நகரங்களான நாசோஸ் மற்றும் ரோட்ஸ் தீவுகளுடன் தொடர்புபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.



# எப்படிப் பரவுகின்றது HMPV தொற்று?

கொரோனா பேரிடர் ஏற்படுத்திச் சென்ற தாக்கத்திலிருந்தே, மக்கள் இன்னும் முழுவதுமாக மீளவே இல்லை. இந்நிலையில், மீண்டும் சீனாவில் ஹியூமன் 'மெட்டாநியூமோ வைரஸ்' எனப்படும் HMPV என்ற புதிய வகை வைரஸ் பரவுவதாகச் செய்திகள் வெளியாகின. சீனாவில் இந்த வைரஸ்க்கு அதிகளவில் குழந்தைகள் பாதிக்கப்படுவதாகச் செய்திகள் வெளியான நிலையில், இவ்வகை வைரஸ் தொற்று இந்தியாவில் பரவுவதும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

இதற்கிடையே, இந்த வைரஸ் தொற்று 14 வயதுக்குக் குறைவான குழந்தைகளிடம் மிக எளிதாகப் பரவுவதாக மருத்துவத்துறை வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன. இது குறித்து இந்திய சுகாதாரத்துறை அதிகாரிகள் குறிப்பிட்டுள்ள தகவல்கள் பற்றி இங்கு பார்க்கலாம்.

இந்த வகை வைரஸ் சீனாவிலிருந்து இப்போது பரவியிருக்கிறதா என்று கேட்டால் அதற்கு வாய்ப்புகள் மிக மிகக் குறைவாம். காரணம் HMPV வகை வைரஸ் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் இந்தியாவிலேயே இருக்கிறது என்று தெரிவித்துள்ள அவர்கள், காய்ச்சலை ஏற்படுத்தும் வைரஸை போல, இவ்வகை வைரஸ் சளி மற்றும் சுவாச பிரச்சினையை ஏற்படுத்தும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால், அது தீவிர பாதிப்பாக இருக்காதாம்.

இந்நிலையில், சீனாவில் பரவும் அதே வைரஸ் இந்தியாவில் பரவுகிறதா அல்லது அதன் திரிபு வகை இந்தியாவில் பரவுகிறதா என்பது இதுவரை கண்டறியப்படவில்லை என குறிப்பிட்டுள்ள அவர்கள், மூக்கில் நீர் வடிதல், தொண்டை எரிச்சல், காய்ச்சல், சளி, இருமல் போன்றவை இந்த வைரஸ் தொற்று காரணமாக ஏற்படக் கூடும் என்றும் தெரிவித்துள்ளார்கள்.

மேலும், இத்தொற்றின் காரணமாக, சளி, காய்ச்சல் ஏற்பட்டால், வீட்டிலேயே மருத்துவம் பார்க்காமல், கண்டிப்பாக மருத்துவரிடம் அழைத்துச் செல்லவேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அதேசமயம், சரியான உணவு மற்றும் மருந்து எடுத்துக் கொண்டால் விரைவிலேயே இந்நோய்த் தொற்று சரியாகிவிடுமாம்.

இந்தியாவில் தொற்றுக்குள்ளான இரண்டு குழந்தைகளுக்கும், இந்த தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த அதேசமயம், அந்த இரு குழந்தைகளுமே நன்றாக இருப்பதாகவும், மருத்துவத்துறை அதிகாரிகள் அவர்களைத் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, இந்த வகை வைரஸ் பரவுகிறது என்று பொதுமக்கள் யாரும் அச்சப்படவேண்டாம் என்றும் இந்த வைரஸ் கொரோனாவை போலவே தும்மல், இருமல் ஒருவரிடத்திலிருந்து மற்றவருக்கு மிக எளிதாக பரவக்கூடியது என்பதால், கூட்டமான இடங்களில் முகக்கவசம் அணிவது, இருமல், தும்மல் வரும்போது முகத்தை மூடிக்கொள்வது அவசியம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதே சமயம், அனைத்து வயதினருக்கும் இவ்வகை வைரஸ் தொற்று பரவினாலும், அதிகளவில் குழந்தைகளும், வயதானவர்களும் இவ்வகை வைரஸால் அதிகம் பாதிக்கின்றார்களாம். குறைந்தது ஒரு வாரம் வரை இந்த வைரஸ் உடலில் உயிர்வாழக் கூடும் என்பதால், ஆஸ்துமா போன்ற தீவிர சுவாச பிரச்சினை உள்ளவர்களுக்கு இந்த வகை வைரஸ் நிமோனியா போன்ற கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடும் என்பதால், முன்னெச்சரிக்கையுடன் நடக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கேள்விக்கென்ன பதில்?

# உடற்பருமனை குறைத்தால் சரும நிறம் மாறுமா?

அதிகமாக உடற்பருமன் கொண்டவர்கள், எடையை குறைக்கும்போது, முகம் அழகாக மாறுவது மட்டுமில்லாமல், சரும நிறத்திலும் மாற்றம் ஏற்படும் என்று அறிவியல்பூர்மாகவே நிரூபிக்கப்பட்டுள்ளது.

உடல் எடை அதிகமாக உள்ளவர்களை நன்றாக கவனித்துப் பார்த்தால் தெரியும், அவர்களில் சூரிய ஒளி படாத சருமத்தின் நிறத்துக்கும், முகம், கழுத்தில் உள்ள சருமத்தின் நிறத்திற்கும் நிறைய மாறுபாடுகள் இருக்கும்.

இதற்குக் காரணம், உடல் எடை அதிகமாக இருக்கும்போது நம் உடலில் இன்சுலின் எதிர்ப்புத்தன்மை சரியாக வேலை செய்யாது. இன்சுலின் சரியாக வேலை செய்யாத காரணத்தினால், நம் உடல் அதிகமாக இன்சுலினை சுரக்க ஆரம்பிக்கும். இதுவே சருமம் தடிமனாக காரணமான கெரடினோசைட்டுகளை (Keratinocytes) அதிகரித்து விடும்.



அதுமட்டுமில்லாமல், நம்முடைய சரும நிறத்திற்குக் காரணமான மெலனின் என்னும் பிக்மென்ட்டை அதிகமாக சுரக்க வைத்துவிடும். அதனால்தான் உடல் எடை அதிகமாக இருப்பவர்களுக்கு அக்குள், கழுத்து போன்ற இடங்களில் கருமை அதிகமாக உள்ளது. எனவே, உடல் எடையை குறைக்கும்போது இன்சுலின் எதிர்ப்புத்தன்மை சிறப்பாக கட்டுக்குள் வரும். மாச்சத்தை எடுத்துக்கொள்வதை குறைத்து உடல் எடையைக் குறைக்கும்போது சிறப்பான மாற்றத்தை கண்கூடாகக் காணலாம்.

ஆகவே, அதிகமாக அழகு சாதனப்பொருட்களை பணம் கொடுத்து வாங்கி பயன்படுத்துவதை விட்டுவிட்டு சரியான உணவுமுறையை கடைபிடிப்பதோடு, மாச்சத்துள்ள உணவுகளை குறைவாக எடுத்துக் கொண்டால், உடல் எடையை கட்டுக்குள் கொண்டுவரலாம். எனவே, இதையெல்லாம் தொடர்ந்து செய்து வந்தாலே 'ஹைப்பர் பிக்மென்டேஷன்' (Hyperpigmentation) என்று சொல்லப்படும் சருமத்தில் ஏற்படும் நிறமாற்றம் அருமையாக மூன்று முதல் ஆறு மாதத்திற்குள் கட்டுக்குள் வரும் என்பது குறிப்பிடத்தக்கது.

## வாரம் ஒரு மூலிகை

# தாமரை கிழங்கு



- நீர் தாவரங்களின் ஒன்றான தாமரை, கொடி இனத்தைச் சேர்ந்தது. இதில் பல வகைகள் இருந்தாலும் வெண்தாமரை, செந்தாமரை மிக முக்கியமானவை. இந்தத் தாமரையின் அடிப்பகுதியில் கிழங்குகள் காணப்படுகின்றன. இவை உடல் நோய்களை தீர்க்கும் மருத்துவக் குணம் நிறைந்தது. கண் நோய், கண் எரிச்சல் போன்ற நோய்களைத் தீர்த்து கண் பார்வையை தெளிவடையச் செய்யும்.

- தாமரை கிழங்கில் அதிக அளவில் இருக்கும் விட்டமின் 'பி' மற்றும் 'சி' சத்துகள் சருமம் மற்றும் கூந்தல் ஆரோக்கியத்தைப் பராமரிக்க உதவுகிறது. இதிலுள்ள பி6 விட்டமின் இரத்தச் சிவப்பணுக்களின் எண்ணிக்கையை உயர்த்துகிறது. தேவையற்ற பதற்றம் மற்றும் அதன் மூலம் ஏற்படும் தலைவலியை போக்குகிறது. மாரடைப்பு ஏற்படுவதைத் தடுக்கிறது.

- தாமரை வேர் மற்றும் கிழங்கில் அதிகப்படியாக இருக்கும் பொட்டாசியம் உடலில் உள்ள திரவங்களுக்கு இடையில் சமநிலையை ஏற்படுத்துவதோடு, அதிகப்படியான சோடியம் இரத்த ஓட்டத்தை பாதிக்காமல் தடுக்கிறது.

- இதில் இருக்கும் இரும்பு சத்து மென்மையான இரத்த ஓட்டத்திற்கு உதவுகிறது. தாமரை வேர் தண்டுகளை சாப்பிடுவதால் வயிற்றிலும், இரத்தத்திலும் உள்ள வெப்பத்தைக் குறைக்கலாம். அத்துடன், பெண்களுக்கு கருப்பையில் இருந்து இரத்தம் கொட்டுவதைக் கட்டுப்படுத்துகிறது.

- தாமரை கிழங்கானது சற்று கசப்பு மற்றும் இனிப்பின் கூட்டு சுவையுடன் இருப்பதால் பச்சையாகவும் சாப்பிடலாம். உடலின் சோடியம், பொட்டாசியம் நிலையை 1:4 என்ற நிலையில் இது தக்க வைத்திருக்கும்.

- இரத்த ஓட்டத்தை சீர்படுத்தி இதயத்திற்கு பலத்தை உண்டாக்கும். இந்தக் கிழங்கை நன்றாக உலர்த்தி, இடித்து சலித்து தூளாக்கிக் கொள்ள வேண்டும். சிறிது தூளை எடுத்து தேனில் குழைத்து காலை, மாலை இரு வேளைகள் சாப்பிடலாம். இதனால் இரத்த ஓட்டம் சீராகி இதய நோய் ஏற்படும் வாய்ப்பும் குறையும்.

- நெஞ்சில் கபம், காசநோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் சிறிதளவு தாமரை கிழங்கு தூளுடன், இஞ்சி சாற்றைக் கலந்து சாப்பிட, கபம் கரையும்.

## ஹெல்த் டிப்ஸ்




வெப்பமான காலநிலை, உடற்பயிற்சி அல்லது கடுமையான உழைப்பு போன்ற காரணங்களால் நாம் அதிகமாக வியர்வையை வெளியிடுவோம். இது உடலிலிருந்து அதிகளவு நீரை இழக்கச் செய்யும். குறிப்பாக, உடற்பயிற்சிக்குப் பிறகு போதுமான அளவு தண்ணீர் குடிக்கவில்லை என்றால் நீர் இழப்பு அதிகமாகும்.



14-15 வயதிலேயே பலர் ஜிம்மிற்குச் சென்று உடற்பயிற்சி செய்ய ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால், சிறு வயதில் அதிக எடை தூக்குதல் மற்றும் கடினமான பயிற்சிகளைச் செய்வது உடல் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கலாம். மேலும், தசைகள் மற்றும் எலும்புகளில் பாதிப்புகளை ஏற்படுத்தலாம்.






மிளகாய்க்கு காரசாரமான சுவையைத் தருவது அதில் உள்ள 'கேப்சைசின்' என்ற கூட்டுப்பொருளாகும். இது உடலில் வலிகளைக் குறைக்க சிறந்த முறையில் உதவக்கூடிய ஒரு பொருள் எனக் கூறப்படுகிறது.



கர்ப்பிணிகள், இரும்புச்சத்து மாத்திரை சாப்பிட்டால், உடல் லேசாக கறுத்து, பிறகு பழைய நிறத்துக்கு வந்துவிடும். இதை வைத்தே, குழந்தையும் கறுப்பாக பிறக்கும் என்று சிலர் பயப்படுவார்கள். அது தேவையற்றது.



பற்களில் ஏற்படும் பாதிப்பு, தொண்டைக்குப் பரவி, சந்தர்ப்பங்களில் இதயத்தையும் பாதிக்கும். எனவே, பற்களை எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

# ஹேனியா

### காரணம் என்ன?

வயிற்று தசையின் பலவீனம் பொதுவாக குடலிறக்கத்திற்கு காரணமாகும். இவை தவிர கருப்பையில் வயிற்றுச் சுவர் சரியாக மூடப்படாமல் இருப்பது போன்ற பிறவி குறைபாடுகளும் குடலிறக்கம் உண்டாக்கும். மேலும் வயது முதிர்வு, நாட்பட்ட இருமல், காயம் அல்லது அறுவைச் சிகிச்சை மூலம் வயிற்று தசைகள் சேதமடைவது போன்றவற்றால் ஹேனியா ஏற்படும்.

உடலில் ஏற்படும் அழுத்தங்களும் குடலிறக்கத்தை உண்டாக்கும். கர்ப்பம், மலச்சிக்கல், அதிக எடை தூக்குதல், உடல் பருமன் அல்லது திடீர் உடல் எடை அதிகரிப்பு ஆகியவற்றாலும் குடலிறக்கம் ஏற்படும். இவற்றில் மலச்சிக்கல் போன்றவை ஏற்படாமல் நம்மால் பார்த்துக்கொள்ள முடியும்.

### ஹேனியா அறிகுறிகள்

வயிறு அல்லது இடுப்புப் பகுதியில் மென்மையான வீக்கம் காணப்படும். இது படுக்கும் போது மறைந்துவிடும்.

அடிவயிற்றில் ஒரு கனமான உணர்வு, சில சமயங்களில் மலச்சிக்கல் அல்லது இரத்தத்துடன் மலம் வரலாம்.

நெஞ்செரிச்சல், மேல் வயிற்று வலி, மீண்டும் மீண்டும் வாந்தி ஆகியவையும் ஹெர்னியா அறிகுறிகளாகும்.

சிலருக்கு எந்தவித அறிகுறியும் காட்டாது. வேறு பரிசோதனைகளுக்கு செல்லும் போது தான் தெரியவரும். 50 வயதுக்கு மேற்பட்டவர்கள், வருடத்துக்கு ஒரு முறை உடல் பரிசோதனை செய்வது நல்லது.

### சிகிச்சை முறைகள்

ஹேனியா தற்போது பயப்படக் கூடிய விடயமில்லை. இதற்கு நவீன சிகிச்சை முறைகள் பல வந்துவிட்டன. ஆகையால், எந்தவித பயமுமின்றி மருத்துவரை அணுகி, அதற்கான சிகிச்சைகளை மேற்கொள்ளலாம்.

# இரும்புச் சத்தை அதிகரிக்க இந்த பழங்களை சாப்பிடுங்கள்



### தர்பூசணி

100 கிராம் தர்பூசணியில் 0.4 மில்லி கிராம் இரும்புச்சத்து உள்ளது. இது அதிக அளவு இல்லையென்றாலும், அனைவரும் விரும்பும் சுவையோடு உடலுக்கு புத்துணர்வைக் கொடுத்து அன்றாட இரும்பு சத்துத் தேவையை பூர்த்தி செய்வதில் தர்பூசணி முக்கியப் பங்காற்றுகிறது.



### மாதுளை

மாதுளையில் விட்டமின் 'சி' மற்றும் 'அன்டி அக்ஸிடென்ட்கள்' அதிகம் உள்ளதால் இது உடல், இரும்புச் சத்தை உறிஞ்ச உதவுவதோடு, ஒட்டுமொத்த உடல் ஆரோக்கியத்தையும் மேம்படுத்துகிறது. 100 கிராம் மாதுளையில் 0.3 மில்லி கிராம் இரும்புச் சத்து உள்ளது.




### பேரீச்சம்பழம்

பேரீச்சம்பழத்தில் இயற்கையாகவே சீனி அதிகம் இருப்பதால், இது ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஒன்றாக இருப்பதோடு, இதில் இருக்கும் இரும்புச் சத்து உடலுக்குத் தேவையான ஆற்றலை அதிகரிக்கிறது. 100 கிராம் பேரீச்சம்பழத்தில் 0.9 மில்லி கிராம் இரும்புச்சத்து உள்ளது.



### உலர் திராட்சை

உலர் திராட்சையில் இருக்கும் இரும்பு சத்து உடலுக்குத் தேவையான ஆற்றலை உடனடியாக வழங்கக்கூடிய எளிய நொருக்குத் தீனியாக இருக்கிறது. 100 கிராம் உலர்ந்த திராட்சையில் 1.9 மில்லி கிராம் இரும்புச்சத்து உள்ளது.



### அத்திப்பழம்

அத்திப்பழத்தில் நார்ச்சத்துக்கள் அதிகமாக இருப்பதால் செரிமான ஆரோக்கியத்தை அதிகரிப்பதோடு, இரும்பு சத்து உட்கொள்ளும் அளவையும் அதிகரிக்கிறது. 100 கிராம் அத்திப்பழத்தில் 0.2 மில்லி கிராம் இரும்புச்சத்து உள்ளது.

# அவிழா முடிச்சுகள் 09

எஸ்.டொரின்

# தாஜுதீன் கொலையுடன் தொடர்புடைய தொலைபேசி ஆதாரமும் கிடைத்துவிட்டது




சம்பவம் நடந்த காலப்பகுதியில், ஜனாதிபதி செயலகத்தில் இருந்து முக்கிய பிரமுகர்களுக்கு பல அழைப்புகள் சென்றுள்ளது. அதிலும் குறிப்பாக, நாராஹேன்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டேனியல் பெரேராவுக்கு 5 தொலைபேசி அழைப்புக்களும், அநுர சேனாநாயக்கவுக்கு 9 தொலைபேசி அழைப்புக்களும், நாமல் ராஜபக்ஷவின் தனிப்பட்ட பாதுகாப்பு காவலருக்கு 7 தொலைபேசி அழைப்புக்களும் சென்றுள்ளன என குற்றப் புலனாய்வு பிரிவினர் பல தகவல்களை கண்டறிந்திருந்தனர்.

அதிலும் முக்கியமாக நாமல் ராஜபக்ஷவின் தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரியின் தொலைபேசி சிக்னல் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டபோது, அவரின் தொலைபேசி சிக்னலும் அந்த கொலை நடந்த பகுதியில் தான் இருந்துள்ளதாகவும் குற்றப்புலனாய்வு பிரிவினர் அறிந்து கொண்டனர். இந்த சம்பவத்தன்று ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த ஒரு நபர், ஜனாதிபதி செயலகத்திலிருந்து இரண்டு வாகனங்களில் அங்கிருந்து வெளியேறி னார் என்ற விடயமும் சில இடங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. இவ்வாறு ஏராளமான மர்மங்கள் வெளியில் வந்திருந்தாலும், சில விடயங்களை உறுதிபடுத்துவதற்கான ஆதாரங்கள் கிடையாது. குற்றப்புலனாய்வு பிரிவினர் வெளிப்படுத்திய பல விடயங்கள் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டதா என பார்த்தால் அதற்கும் இன்றுவரை பதில்களே இல்லை.

மேலும், தாஜுதீன் கொலை வழக்கில் குறிப்பாக சர்வதேச ஊடகங்கள் வரை பேசப்பட்ட முக்கோண காதல் விவகாரம் தொடர்பிலும் எந்தவிதமான விசாரணைகளும் முன்னெடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆகவே, அவை உண்மையாகவும் இருக்கலாம் பொய்யாகவும் இருக்கலாம். சில கட்டுக்கதைகளாகவும் இருக்கலாம் என்ற எண்ணமும் தோன்றுகின்றது. மேலும், இந்த சம்பவத்துடன் மிக நெருக்கமான தொடர்புடையதாக அடையாளம் காணப்பட்ட இருவரின் மரணம். அதாவது, இயற்கை மரணம் எய்தியதாக கூறப்பட்டவர்கள் தொடர்பிலும் எவ்வித விசாரணைகளும் நடைபெறவில்லை.

அந்நாட்களில் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன அடிக்கடி கூறிய விடயம் என்னவென்றால், அந்த கொலை சம்பவத்துக்கு பின்னால் ஒரு அரசியல் குடும்பம் இருக்கின்றது என தெரிவித்திருந்தார். இந்த கருத்தை அவர் பல சந்தர்ப்பங்களில் பல இடங்களில் முன்வைத்திருந்தார். ஆனால், அதற்கும் எவ்விதமான நிரூபிக்கக்கூடிய ஆதாரங்கள் எதனையும் முன்வைக்க எவரும் முன்வரவில்லை. ஆனால், இவை அனைத்தையும் ஆதாரங்களோடு நிரூபித்து காட்டவேண்டியது தான் குற்றப்புலனாய்வு பிரிவின் பொறுப்பும் சவாலும் ஆகும்.

காரணம், குற்றப்பலனாய்வு பிரிவினரால் அந்த காதல் விவகாரம் தொடர்பில் எவ்விதமான ஆதாரங்களையும் கண்டறியமுடியவில்லை என்பதே உண்மை ஆகும்.

என்னதான் கொலையாகவே இருந்தாலும் இவ்வளவு சுற்றிவளைப்புகள் தேவையா? எனவும் எண்ணத்தோன்றும். மேலும், மறைந்திருக்கும் குற்றவாளி தாமாகவே ஒப்புக்கொண்டால் இந்த வழக்கிற்கு ஒரு முடிவு வந்துவிடாதா எனவும் தோன்றலாம்.

தற்போது ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றம் தாஜுதீன் கொலை வழக்கில் அதிக அக்கறை கொண்டு இந்த அவிழா முடிச்சுக்கான விடிவை பெற்றுத்தர வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பு என்பதற்கு மத்தியில் கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் தாஜுதீனின் கொலை சம்பவம் தொடர்பாக மீண்டும் பேசப்பட்டமையானது மிகப்பெரிய விடயமாக பார்க்கப்படுகின்றது.

இத்தனை ஆண்டுகள் கடந்து இந்த கொலை வழக்கு ஒரு முடிவுக்கு வந்து குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படும் என்ற ஒரு நப்பாசை தான் இதற்கு காரணம். தாஜுதீன் கொலையுடன் தொடர்புடைய தொலைபேசி ஆதாரமும் கிடைத்துவிட்டதாக ஆளுங்கட்சியின் பிரதம கொரடா நாடாளுமன்றில் தெரிவித்திருந்ததை இதற்கு உதாரணமாக குறிப்பிடமுடியும்.

> இந்த சம்பவத்துடன் மிக நெருக்கமான தொடர்புடையதாக அடையாளம் காணப்பட்ட இருவரின் மரணம். அதாவது, இயற்கை மரணம் எய்தியதாக கூறப்பட்டவர்கள் தொடர்பிலும் எவ்வித விசாரணைகளும் நடைபெறவில்லை..

தொடர்ந்து, முஜிபூர் ரஹ்மானும் ஒரு கேள்வியை எழுப்பியிருந்தார். அதாவது, தாஜுதீன் கொலை வழக்கில் ஆதாரங்கள் அனைத்தும் மூடி மறைக்கப்பட்டுள்ளது. அந்த கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட ஒருவருக்கு அநுரகுமார அரசாங்கம் பதவியை கொடுத்திருக்கின்றது. அதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? என அவர் கேள்வியெழுப்பியிருந்தார்.

அதாவது, அநுர குமார திசாநாயக்க எதிர்கட்சியில் இருந்த சந்தர்ப்பத்தில், இலங்கையை உலுக்கிய ஐந்து படுகொலைகள் சம்பந்தமாக வெளிச்சத்துக்கு கொண்டுவந்திருக்கின்றார். யாருக்கும் அஞ்சாமல் வெளிப்படையாக பல விடயங்களை பேசியிருக்கின்றார். அப்படியிருக்கையில், அவர் ஜனாதிபதியானதன் பின்னர், அந்த சர்ச்சைகளோடு தொடர்புடைய ஒருவருக்கு பதவிகளை எப்படி வழங்கினார் என்பதே அவரது கேள்வியாக இருந்தது.

குறிப்பாக, இலங்கையின் முன்னணி தொலைபேசி வலையமைப்பின் முன்னாள் தலைவர், விஜேசூரியவுக்கு இந்த அரசாங்கம் டிஜிட்டல் பொருளாதாரத்திற்கான ஜனாதிபதியின் ஆலோசகர் என்ற பொறுப்பை வழங்கியுள்ளது. ஆனால், வசீம் தாஜுதீன் கொலை வழக்கில் பல ஆதாரங்களை குறித்த தொலைபேசி வலையமைப்பு நிறுவனம், மூடி மறைப்பதற்கு அந்த நிறுவனம் ஏதோவொரு வகையில் உதவி செய்தமையானது, தாஜுதீன் கொலை நடந்த காலகட்டத்தில் அவருக்கும் ராஜபக்ஷர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததை காட்டுவதாக ஊகிக்கப்படுகின்றது.

**( மிகுதி அடுத்த வாரம் )**

---



பாலகணேஷ் டிலுக்ஷா

# கிரீன்லாந்து மீது கண்வைத்த ட்ரம்ப் ; உற்று நோக்குகின்ற உலக நாடுகள்!

அமெரிக்காவின் அடுத்த கட்ட நகர்வை உலக நாடுகள் உற்று நோக்கிக் கொண்டிருக்கும் வேளையில் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள டொனால்ட் ட்ரம்ப்பின் கருத்துக்கள் சர்ச்சைக்குள்ளாகி விமர்சனங்களுக்குள்ளாவதை அண்மைய நாட்களில் அதிகளவில் காணமுடிகின்றது.

அமெரிக்காவின் 47 ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து எதிர்வரும் 20 ஆம் திகதி அவர் பதவியேற்க உள்ளார். ட்ரம்ப் பதவியேற்றதன் பின்னர் அது உலகின் பல நாடுகளுக்கு பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் அவை ஆழமானதாகவும் விரைவானதாகவும் இருக்கும் என்றும் நிபுணர்கள் ஏற்கனவே கூறியிருக்கின்றனர்.

அந்த வகையில் தற்போது கிரீன்லாந்து பேசுபொருளாக மாறியிருக்கிறது. டொனால்ட் ட்ரம்ப், கிரீன்லாந்தைக் கைப்பற்றுவதற்கு இராணுவத்தைப் பயன்படுத்த எடுத்துள்ள முயற்சியை நிராகரித்துள்ள நிலையில் அதன் இறையாண்மை எல்லைகளை தாக்குவதற்கு ஏனைய நாடுகளை ஐரோப்பிய ஒன்றியம் அனுமதிக்காது என பிரான்ஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது.




ட்ரம்ப் டேனிஷ் பிரதேசத்தைப் பெறுவதற்கான தனது விருப்பத்தை மீண்டும் வலியுறுத்தியதுடன் இது தேசிய மற்றும் பொருளாதார பாதுகாப்பிற்கு முக்கியமானது என்றும் கூறினார். அமெரிக்காவின் நீண்ட கால நட்பு நாடான டென்மார்க், கிரீன்லாந்து விற்பனைக்கு இல்லை என்றும் கிரீன்லாந்து மக்களுக்கு சொந்தமானது என்றும் பலமுறை தெளிவுபடுத்தியுள்ளது.

கிரீன்லாந்தையோ அல்லது பனாமா கால்வாயையோ கையகப்படுத்துவதற்கு இராணுவம் அல்லது பொருளாதார சக்தியைப் பயன்படுத்துவதை நிராகரிப்பீர்களா என செய்தியாளர்கள் மாநாட்டில் ட்ரம்பிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு, பொருளாதார பாதுகாப்பிற்கு எங்களுக்கு அவை தேவை என்று கூறிய ட்ரம்ப் சீன மற்றும் ரஷ்ய கப்பல்களைக் கண்காணிப்பதற்கான இராணுவ முயற்சிகளுக்கு தீவு முக்கியமானது என்றும் கூறினார்.

கிரீன்லாந்து பனிப்போருக்குப் பின்னர் அமெரிக்க ரேடார் தளத்தின் தாயகமாக இருந்து வருவதுடன் வோஷிங்டனுக்கு நீண்ட காலமாக மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் காணப்படுகின்றது என தெரிவித்திருக்கிறார்.

இந்நிலையில் "கிரீன்லாந்து கிரீன்லாண்டர்களுக்கு சொந்தமானது" என டென்மார்க் பிரதமர் தெரிவித்துள்ளார். உள்ளூர் மக்களால் மட்டுமே அதன் எதிர்காலத்தை தீர்மானிக்க முடியும் என்றும் அவர் கூறியுள்ளார். "நாங்கள் விற்பனைக்கு இல்லை, விற்கப்படவும் மாட்டோம்" என்றும் அவர் அழுத்தமாக கூறியிருக்கிறார்.

## கிரீன்லாந்தை கண்வைத்த ட்ரம்ப்

அரிய கனிமங்கள் உள்ளிட்ட இயற்கை வளங்கள் கொண்டமைந்ததே கிரீன்லாந்து ஆகும். இங்கு அமெரிக்கா, கிரீன்லாந்தில் பிட்டுஃப்ஃபிக் விண்வெளி தளத்தை நிர்வகிக்கிறது. மேலும், ஆர்டிக் வட்டத்தில் உலகளாவிய சக்திகள் தங்கள் வரம்பை விரிவுபடுத்த முயற்சிப்பதால் வர்த்தகத்திற்கான ஒரு முக்கிய இடமாகவும் அது பார்க்கப்படுகிறது. குறிப்பாக ரஷ்யா, இப்பகுதியை ஒரு பாதுகாப்பு உத்தியாகப் பார்க்கிறது.

> ட்ரம்பின் அண்மைய கருத்துகள் அவர் தற்போதும் கிரீன்லாந்தை அமெரிக்காவின் கட்டுக்குள் கொண்டு வருவதற்கே விரும்புகிறார் என்பதை தெளிவாக காட்டுகின்றது ..




இந்நிலையில், கடந்த 2019 ஆம் ஆண்டில் ஜனாதிபதியாகத் தனது முதல் பதவிக் காலத்தில், கிரீன்லாந்தை வாங்கும் எண்ணத்தை ட்ரம்ப் முன்மொழிந்தார். ஆனால், அது நிறைவேறவில்லை. அவரது அண்மைய கருத்து தற்போதும் கிரீன்லாந்தை அமெரிக்காவின் கட்டுக்குள் கொண்டு வருவதற்கே அவர் விரும்புகிறார் என்பதை தெளிவாகக் காட்டுகின்றது.

டென்மார்க் பிரதமர் கிரீன்லாந்தை விற்கமாட்டோம் என தெளிவாகக் கூறிய போதிலும் ட்ரம்ப் தனது அறிக்கைகளைத் தொடர்ந்து இணையத்தில் வெளியிட்டு வருகிறார். ஆனாலும், ட்ரம்பின் நிர்வாகத்துடன் பணியாற்ற டென்மார்க் இணக்கம் தெரிவித்திருக்கிறது.

மேலும், கிரீன்லாந்தில் தனது இராணுவ திறனை அதிகரிக்க டென்மார்க் மெதுவாக நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஆனால், சீனா மற்றும் ரஷ்யாவின் அத்துமீறல்களுக்கு எதிராக டென்மார்க் அப்பகுதியைப் பாதுகாக்க முடியாவிட்டால், கட்டுப்பாட்டுக்கான கோரிக்கைகளை அமெரிக்கா அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாகவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அமெரிக்காவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கும் இந்த வேளையில் ட்ரம்ப் தேர்தல் பிரச்சாரங்களில் பல வாக்குறுதிகளை அளித்திருந்தார். தற்போதும் பல எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்ற உள்ளதாக கருத்து வெளியிட்டு வருகிறார். இவ்வாறு அவருடைய சில தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் பட்சத்தில் அதிக வர்த்தக கட்டணங்கள் முதல் கட்டுப்பாடுகளை நீக்குதல், அதிக எண்ணெய் அகழ்தல் மற்றும் மேற்கத்திய இராணுவ கூட்டணியான வடக்கு அட்லாண்டிக் உடன்படிக்கை அமைப்பில் (நேட்டோ) அமெரிக்காவின் பங்காளிகளுக்கு அதிக கோரிக்கைகள், அரசாங்க நிதி மீதான அழுத்தம், பணவீக்கம் , பொருளாதார வளர்ச்சி மற்றும் வட்டி விகிதங்கள் ஆகியன உலகின் ஒவ்வொரு மூலையிலும் உணரப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# மகனின் படம் வெற்றி பெற்றால் புகைப்பிடிப்பதை கைவிடுவேன்

## -நடிகர் அமீர் கான்






“எனது மகன் நடித்துள்ள புதிய படம் வெற்றி பெற்றால் புகைப்பிடிப்பதை கைவிடுவேன்” என்று பொலிவுட் நடிகர் அமீர் கான் தெரிவித்துள்ளார்.

பொலிவுட் நடிகர் அமீர் கானின் மகன் ஜுனைட் கான் புதிதாக ‘லவ்யபா’ என்ற படத்தில் நடித்திருக்கிறார். இத்திரைப்படத்தில் மறைந்த நடிகை ஸ்ரீதேவியின் இளைய மகள் குஷி கபூர் நாயகியாக நடித்துள்ளார். இது குஷி கபூருக்கு பெரிய திரையில் முதல் படமாகும். இதனால் இப்படத்திற்கு மிகுந்த எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த படத்தை அமீர்கானே தயாரிக்கிறார். இப்படத்தில் குஷி கபூரின் நடிப்பை அமீர் கான் வெகுவாக புகழ்ந்து பேசினார். அதோடு நடிகை ஸ்ரீதேவியுடன் குஷி கபூரை ஒப்பிட்டுப் பேசியுள்ளார். இப்படம் பெப்ரவரி 7ஆம் திகதி திரைக்கு வருகிறது. படத்தின் முதல் பாடல் திரைக்கு வந்தபோது குஷி கபூர் மறைந்த நடிகை ஸ்ரீதேவியை போன்று இருப்பதாக இரசிகர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், அமீர் கான் இப்படம் குறித்து அளித்துள்ள பேட்டியில், “லவ்யபா படம் வெற்றி பெற்றால் நான் புகைப்பிடிப்பதை கைவிடுவேன். இப்படம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இது பொழுதுபோக்கிற்கான படம்” என்று தெரிவித்துள்ளார்.

# முத்தக் காட்சியில் காயத்ரி ஷான்

அறிமுக இயக்குநர் விக்னேஷ் பாண்டியன் இயக்கியுள்ள படம் ‘கொஞ்ச நாள் பொறு தலைவா’. விரைவில் வெளிவரவிருக்கும் இப்படத்தின் இறுதிக்கட்ட பணிகள் நடந்து வருகின்றன. இப்படத்தில் நாயகன், நாயகியாக நிஷாந்த் ரூஷோ, காயத்ரி ஷான் நடித்துள்ளனர். இவர்களின் ‘முத்தக் காட்சி’ பரபரப்பாக பேசப்படும் என்று இப்படத்தின் இயக்குனர் விக்னேஷ் பாண்டியன் தெரிவித்துள்ளார்.

மேலும் இத்திரைப்படத்தில் முக்கிய கதாபாத்திரங்களில், பால சரவணன், லொள்ளு சபா மாறன், கும்கி அஷ்வின், சூப்பர் குட் சுப்ரமணியம் நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சினிமாவுக்கு விடைகொடுக்கிறாரா நித்யாமேனன்?

“சினிமாவை விட்டு விலக விரும்புகிறேன்” என்று நடிகை நித்யா மேனன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், “சிறு வயதிலிருந்தே டான்ஸ் ஆடு, பாட்டுப் பாடு, கெமரா முன்பாக வந்து நடி” என எனது அம்மா என்னை வற்புறுத்துவார். ஆனால், சினிமா என்றாலே எனக்கு பிடிக்காது. சமீபத்தில், போதும் சினிமாவை விட்டு வேறு ஏதாவது பண்றேன். எனக்கு இது பிடிக்கவில்லை என்றே பெற்றோர்களிடம் சொல்ல, அவர்களும் உனக்கு எது பிடிக்கிறதோ அதை செய் என சொல்லிவிட்டனர். இந்நிலையில்தான் எனக்கு தேசிய விருது கிடைத்தது.

அந்த விருது கிடைத்த நிலையில் தான், நம்மை சினிமா விடாது என்றும் கடவுள் நமக்குத் தரும் இலஞ்சம் இது என்றும் நினைத்துக் கொண்டேன். சிறு வயதில் இருந்தே கெமரா முன்னாடி நிற்கவே பிடிக்காது. இயல்பான வாழ்க்கைக்காக ஏங்குகின்றேன். புகைப்படம் எடுப்பதில் எனக்கு தனி ஆர்வம் இருக்கிறது. ஆனால் சினிமாவை விட்டு விலக முடியாத சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளேன்” என்று நித்யா மேனன் குறிப்பிட்டுள்ளார்.



# பிரபாஸ் திருமணம் செய்யாததற்கு இதுதான் காரணமா?

பிரம்மாண்ட பொருட்செலவில் தயாராகி வரும் சலார் 2, ராஜா சாப், ஸ்பிரிட், கண்ணப்பா போன்ற திரைப்படங்களில் அடுத்தடுத்து நடித்து வருகிறார் பிரபாஸ். தற்போது அவருக்கு 46 வயதாகின்றது. இந்நிலையில் பிரபாஸின் அம்மா அளித்த பேட்டியொன்றில் தன் மகன் திருமணம் செய்யாமல் இருப்பது ஏன் என்பது குறித்து பகிர்ந்துள்ளார்.

அவர் தெரிவிக்கையில், “எனது மகன் பிரபாஸுக்கு ரவி என்ற நண்பர் இருக்கிறார். ரவியின் திருமண வாழ்க்கை நன்றாக அமையவில்லை. அந்தத் திருமண வாழ்க்கை ரொம்பவே போராட்டம் நிறைந்ததாக அமைந்தது. அவரும் அதை சகித்துக் கொண்டார். ஆனாலும் கணவன், மனைவி இடையே ஒத்துவரவில்லை. தொடர்ந்து சண்டை, சச்சரவுகள் அதிகரித்தது. அந்த திருமண வாழ்க்கை கடைசியில் கசப்பான முடிவுக்கு வந்துவிட்டது. எனவே, திருமண வாழ்க்கை என்றாலே இப்படித்தான் விரைவில் பாதியில் உடையும் என்ற எண்ணம் பிரபாஸ் மனதில் ஆழமாக ஊன்றிவிட்டதால் தான் அவர் திருமணத்தில் அவ்வளவாக ஆர்வம் காட்டுவதில்லை” என்று உருக்கமாகக் கூறியுள்ளார்.









## விஷால் மீள்வான்



“விஷாலைப் போல ஒரு தைரியசாலியை நான் பார்த்ததில்லை. அவன் இப்போது ஒரு மோசமானக் காலகட்டத்தில் உள்ளான். அவன் தைரியமே அவனைக் காப்பாற்றும். அவன் நல்ல மனசுக்கு அவன் சீக்கிரமே சிங்கம் மாதிரி மீண்டு வருவான்”

-ஜெயம் ரவி

# விஷால் குறித்து பாடகி சுசித்ரா பரபரப்பு குற்றச்சாட்டு

நடிகர் விஷால் அத்துமீறி நடந்துகொண்டதாக பாடகியும் நடிகையுமான சுசித்ரா பரபரப்பு புகார் கூறியுள்ளார். சில வருடங்களுக்கு முன் ‘சுச்சி லீக்ஸ்’ மூலம் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த பாடகி சுசித்ரா, சமீபத்தில் மீண்டும் பிரபலங்களை பற்றி பேசி சர்ச்சையை ஏற்படுத்தினார். தனுஷ், நயன்தாரா விவகாரம் பற்றியும் பேசி வந்த சுசித்ரா, நடிகர் விஷால் குறித்தும் இப்போது பேசியுள்ளார்.

அவர் வெளியிட்ட காணொளியில், “விஷாலின் இந்த நிலைமையை பார்த்து பலர் கவலைப்பட்டு இருப்பீர்கள். நான் விஷால் குறித்து பல வருடங்களுக்கு முன் நடந்த விடயத்தை கூறுகிறேன். எனது முன்னாள் கணவர் கார்த்திக் குமாருடன் நான் வாழ்ந்து கொண்டு இருந்தபோதுதான், இந்த சம்பவம் நடந்தது. அடிக்கடி கார்த்திக் குமார் ஏதாவது ஒரு காரணம் சொல்லிவிட்டு வீட்டில் இருந்து வெளியே ஓடிவிடுவார். ஒருநாள் கார்த்திக் இல்லாதபோது யாரோ கதவை தட்டும் சத்தம் கேட்டது.

கதவை திறந்து பார்த்தால் விஷால் கையில் மது போத்தலுடன் நின்று கொண்டிருந்தார். அப்போது அவர் போதையில் இருந்தார் என்பது அவரை பார்க்கும்போதே தெரிந்தது. உடனே கார்த்திக் குமார் இல்லையா என்று கேட்க, நான் இல்லை என்றேன். உடனே நான் உள்ளே வரவா என்று விஷால் கேட்டார். நான் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். உடனே அவர் கையில் இருக்கும் மது போத்தலை என்னிடம் நீட்டி இதற்காகத்தான் வந்தேன் என்றார். நான் அதை வாங்காமல் கௌதம் மேனன் அலுவலகத்தில்தான் கார்த்திக்குமார் இருக்கிறார், அங்கேபோய் கொடுங்கள் என்று சொல்லிவிட்டு கெட்டவார்த்தையால் அவனை திட்டினேன். அது அவன் காதில் விழ, என்ன சொன்னீங்க என்றதும், “இங்கே ஒரு பூனை அடிக்கடி இப்படித்தான் தொல்லை பண்ணும் நீங்க போங்க” என்று சொல்லிவிட்டு கதவை சாத்திவிட்டேன். அன்று தவறான எண்ணத்துடன் மது போத்தலை பிடித்த கைகள்தான் இன்று நடுங்கியபடி காட்சி தருகிறது. இது எனக்கு சந்தோஷம்தான்” என்று சுசித்ரா கூறியுள்ளார்.



இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள “அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.